# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 020 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி01, செவ்வாய்க்கிழமை 16.12.2014


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

## முல்லைத்தீவில் மஹிந்தவின் முதல் கூட்டம்

### வியாழக்கிழமை ஆரம்பிக்கிறது

கொழும்பு, டிசெ. 16
ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்திருக்கும் நிலையில் நாளைமறு தினம் வியாழக்கிழமை மஹிந்த ராஜ பக்ஷ வடக்கில் தனது பரப்புரையை ஆரம் பிக்க உள்ளார். முல்லைத்தீவு, முள்ளிய வளையில் முதல் கூட்டத்துக்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக் கப்படுகிறது.
ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிர தான வேட்பாளர்களும் வடக்கு – கிழக் குப் பிரதேசங்களில் இதுவரையில் தமது பரப்புரைகளை ஆரம்பிக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷவே அதனை முதலில் ஆரம்பிப்பார் என்று தெரிகின்றது. வடக்கே வரும் மஹிந்த அன்றைய தினம் முல்லைத் தீவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டச் செயலகத்தையும் திறந்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக புதிய மாவட்டச் செயலக வளாகத்தைதுப் புரவு செய்து அழகுபடுத்துவதில் இராணு வத்தினர் கடந்த சில தினங்களாக முழு மூச்சில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
தொடர்ந்து வவுனியா, மன்னார் மாவட் டங்களிலும் ஜனாதிபதியின் பரப்புரை நட வடிக்கைகள் இடம்பெறும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. கடந்த ஒக்ரோபர் மாதமும் மஹிந்த வடக்கே பயணம் மேற்கொண்டி ருந்தார். (உ–5)

## தமிழர்கள் தேர்தலில் வாக்களிப்பதை தடுக்கச் சதி

கொழும்பு, டிசெ. 16
2005 ஆம் ஆண்டு ஜனா திபதித் தேர்தலை தமிழ் மக் கள் புறக்கணித்திருந்தனர். இதேபோன்றதொருநிலையை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போதும், தமிழ் மக்கள் பின்பற்ற வேண்டும் என்ற அழுத்தம் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளால் கொடுக்கப்பட்டு வருகின்றது. – இவ்வாறு கவலை வெளி யிட்டுள்ளார் ஆளுங் கட்சி யிலிருந்து எதிரணிக் குத் தாவிய முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

பக்.25

## ஐ.தே.க. உறுப்பினர் ஆளும் கட்சி பக்கம் தாவினார்

யாழ்ப்பாணம், டிசெ.16
ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாணசபை உறுப்பி னர் ஜானக திஸ்ஸ குட்டி யாராச்சி ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார். நேற்று ஜனாதிபதி மாளி கைக்குச் சென்ற அவர் எதிர் வரும் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்குஆதரவுவழங்க வுள்ளதாகத் தெரிவித்துள் ளார்.
இவர் கடந்த ஊவா மாகாண சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் மொன

பக்.25

## "கதவை கொத்தி உடைத்து அப்பாவை கொண்டு சென்றனர்"

### 13 வயது மகன் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம்



யாழ்ப்பாணம், டிசெ.16
வீட்டுக் கதவை கோடரியால் கொத்தி, அத்துமீறி உள்புகுந்த இராணுவத்தினர் எனது அப்பாவைக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் இன்று வரை யில் அப்பாவைக்காண வில்லை – இவ்வாறு 13 வயதான மகன் ஒரு வர் காணாமற் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார். ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வில் இதுவரை சாட்சிய மளித்தவர்களில், இந்தச் சிறுவனே குறைந்த வயதில் சாட்சியமளித்துள்ளார்.

பக்.25

## "கணவருடன் 45 பேரை ரயரைப் போட்டு எரித்தது இராணுவம்"

### ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த தாயொருவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16
எனது கணவர் உட்பட 45 பேரை கைது செய்த இரா ணுவத்தினர், அவர்களை வீதியில் ரயர் போட்டு எரித்துக் கொலை செய்தனர்– என்று ஆணைக் குழு முன் சாட்சியமளித்த தாய் ஒருவர் தெரிவித் தார். சிறிது காலத்தின் பின்னர் தனது இரு மகன்க ளும் காணாமற் போயினர் என்றும் அவர் குறிப்பிட் டார்.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர் வில் நேற்றைய தினம் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்.25



## மைத்திரிக்கு பெருகும் ஆதரவு

### பல்வேறு தரப்புகளும் பகிரங்கமாக அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 16
பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியி டும் மைத்திரிபால சிறிசேனவுக்கு பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவுகளைப் பகிரங்க மாகத் தெரிவித்து வருகின்றனர். பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கம் மற்றும் தேசிய சூழல் அமைப்பாளர்களின் ஒன்றியம் என் பன, பொது எதிரணி வேட்பாளருக்கான ஆத ரவை நேற்றுத் தெரிவித்துள்ளன.
ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனா திபதித் தேர்தலுக்கான தேர்தல்களம் சூடுபிடித் துள்ளது. கட்சித்தாவல்கள் இருபுறமும் தொடர்ந் தும் இடம்பெற்று வருகின்றது.

பக்.25

## குழந்தைகளுக்கு உணவில்லை உயிரை மாய்க்க துணிந்த தாய்

### குடாநாட்டில் வறுமையின் கொடூரம்

(உ–4)

## புலியிடம் கொடுக்கவில்லை சிங்கத்திடம் பறிகொடுத்தேன்

ஆணைக்குழுவினர் முன் தாய் கண்ணீருடன் சாட்சியம்

பக்.02

## இராணுவத்துக்கு எதிராக குவிந்தன முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 16
நேற்று செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரி வில் நடைபெற்ற காணாமற்போனோர் குறித்து விசா ரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு அமர்வில், 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர் கள் மற்றும் வீட்டில் இரவு நேரத்தில் இராணு வத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பிலுமே அதிகளவினர் னோர் சாட்சியமளித்தனர்.
சாட்சியமளித்த 40 பேரில் 23 பேர் இராணுவத் துக்கு எதிராக நேரடியாகவே தமது குற்றச்சாட் டுக்களை முன்வைத்தனர். அத்துடன் 5 பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே தமது உறவுகள் காணாமற் போனதாகத் தெரிவித்தனர். நேற்றைய அமர்வில் சாட்சியமளிக்க 52 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் 40 பேர் சாட்சியமளித்தனர்.

பக்.25

## மஹிந்த அநீதியிழைத்தார்; சமல் பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 16
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கும் அநீதி இழைத்துள்ளார் என்று பரப்புரைக் கூட்டம் ஒன் றில் பகிரங்கமாக பரபரப்புக் குற் றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள் ளார் சபாநாயகரும், ஜனாதிபதி யின் மூத்த சகோதரருமான சமல் ராஜபக்ஷ.
காலியில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் கூட்டம் ஒன்றில் உரை யாற்றிய போதே இவ்வாறு கூறி யிருக்கிறார்.
"2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த போது, அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டது. இதன் போது நீதி யான முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. எனக்கு வழங்கப்படவில்லை. விவசாய அமைச்சைக் கவனிக்கும் அமைச் சரவை அந்தஸ்து இல்லாத அமைச் சர் பொறுப்பே வழங்கப்பட்டது.

பக்.25

## சி.ஐ.டி. என்ற போர்வையில் மாணவனை தாக்கிய வங்கி ஊழியர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.16
சி.ஐ.டியினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு யாழ்.பல்கலைக் கழக மாண வன் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று தாக்கினார் என்ற குற்றச் சாட்டில் வங்கி ஊழியர் ஒருவர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
தாக்கப்பட்ட மாணவன் வழங்கிய முறைப் பாட்டை அடுத்தே குறித்த வங்கி ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

பக்.02

# செய்திகள்

## புலியிடம் கொடுக்கவில்லை சிங்கத்திடம் பறிகொடுத்தேன்

### மகனைத் தொலைத்த தாயொருவர் ஆணைக்குழு முன்பாக கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

"என்ர பிள்ளையை நான் புலிக்கு குடுக்கேல்ல. சிங்கத்திட்ட பறிகொடுத்திட்டு நிற்கிறன். உங்களின் உதவிகள் ஒன்றும் தேவையில்லை. எனக்கு கையும் காலும் நல்லாக இருக்குது"– இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக வயதான தாய் ஒருவர் ஆவேசமாக சாட்சியமளித்தார்.

வாரிக்குட்டியூரைச் சேர்ந்த தில்லையம்பலம் தங்கமணி என்பவர், இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமற்போன தனது மகன் தொடர்பில் ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

"2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பொருள்கள் வாங்கச் சென்ற போது எனது மகனை இராணுவத்தினர் கைது செய்தனர். அதன் பின்னர் எனது மகன் எங்கே என்று எனக்குத் தெரியாது. தனஞ்சியநாதன் என்பவர், எங்களிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்து கொண்டிருந்தார். அவரே இராணுவத்தினருக்கு தகவல் வழங்கி எனது மகனைக் கைது செய்யச் செய்தார்."– என்று அவர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டார்.

"எனது மகன் புலியுமில்லை. ஆயுதம்வைத்திருக்கவுமில்லை. புலிகளுக்கு சாப்பாடு கொடுக்கவுமில்லை. எனது நான்கு பிள்ளைகளை நான் புலிக்கு கொடுக்கேல்ல. ஆனால் சிங்கத்திட்ட பறிகொடுத்திட்டன்"– என்று அவர் கூறினார்.

அப்போது ஆணைக்குழுவினர், அரச உதவி ஏதாவது கிடைக்கின்றதா? என்று வினவினர், "எனக்கு காலும் கையும் நல்லா இருக்கு, உதவி ஒன்றும் தேவையில்லை" என்று அதற்கு ஆவேசமாகப் பதிலளித்தார் அந்தத் தாய்.

(ற–5)

## கருணா அம்மான் மீதே சந்தேகம் உள்ளது

### ஆணைக்குழுவில் தந்தையொருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

கருணா அம்மானின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே எனது மகன் காணாமற்போனார். கருணா அம்மான் மீதே எனக்குச் சந்தேகம் இருக்கின்றது. இவ்வாறு ஆணைக்குழு முன் சாட்சியமளித்த தந்தை ஒருவர் தெரிவித்தார்.

மெனிக்பார்மைச் சேர்ந்த, கருப்பையா சங்கரப்பிள்ளை என்பவர், தனது மகனை 2008 ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் காணவில்லை என்று தெரிவித்தார். அக்கரைப்பற்றில் வேலைக்குச் சென்ற போதே மகன் காணாமற் போனதாகக் குறிப்பிட்டார். குறித்த பிரதேசம் கருணா அம்மானின் கட்டுப்பாட்டில் இருந்தது என்று அவர் தெரிவித்தபோது, ஆணைக்குழுவின் தலைவர் கருணா அம்மானின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தை வரையறுக்கமுடியுமா என்று கேட்டார். அதற்கு அவர், மட்டக்களப்பு முழுவதும் அவரது கட்டுப்பாட்டில் இருந்தது என்று பதிலளித்தார்.

இதனையடுத்து ஆணைக்குழுவின் தலைவர், கருணா அம்மான், வடக்கு மாகாணத்திற்குரிய புலிகளின் தளபதியாகத் தானே இருந்தவர் என்று கேள்வி எழுப்ப, சாட்சியமளித்த தந்தை, இல்லை அவர் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் என்று பதிலளிக்கப்பட்டது.

இதன் போது ஆணைக் குழுவினர், காணாமற்போன மகன் தொடர்பில் இறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்கின்றீர்களா என்று கேட்டனர். அதற்கு அந்தத் தந்தை, எனது மகன் இறந்தார் என்று எப்படி நான் இறப்புச்சான்றிதழ் பெற முடியும் என்று எதிர்கேள்வியெழுப்பினார்.

(ற–5)

## இந்திய சிறையிலுள்ள மீனவரை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

நீர்கொழும்பு, டிசெ.16

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு மீனவர்கள் விடுவிக்கக்கோரி அந்தப் பகுதி மீனவர்கள் மற்றும் மீனவர்களின் குடும்பங்கள் நேற்று சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியக் கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடித்த நீர்கொழும்பு பகுதி மீனவர்கள் 20 இற்கும் மேற்பட்டோர் இந்தியக் கடலோரக்காவற்படையால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டு நீதிமன்ற உத்தரவுப் படி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காத நிலையில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை மட்டும் நல்லிணக்கத்தில் விடுவிப்பு செய்து வருகிறது. கடந்த 6 மாதங்களுக்கு மேலாகவும். இலங்கை மீனவர்கள் தொடர்ந்து சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டிய மீனவர்கள், மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(ற–14)



காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள், செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றன. அதில் கண்ணீர் விட்டழுதவாறு தன் சாட்சியத்தைப் பதிவு செய்யும் தாயொருவர். (ற–5)

## சி.ஐ.டியினர் என்று கூறி பல்கலை மாணவனைத் தாக்கியவர் கைது

### கைதானவர் வங்கி ஊழியராம்

யாழ்ப்பாணம், டிசெ.16

சி.ஐ.டியினர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு, யாழ்.பல்கலைக் கழக மாணவன் ஒருவரைத் தாக்கிய வங்கி ஊழியர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ப.1 விரிவு

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் திருநெல்வேலி தபால் கட்டைப் பகுதியில் வைத்து குறித்த முகாமைத்துவ பீட நான்காம் வருட மாணவன் தாக்கப்பட்டுள்ளார். குறித்த மாணவன், கிளிநொச்சியில் இருந்து வந்திருந்த தனது சக மாணவரை அழைத்துச் செல்வதற்காக யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு வந்துள்ளார். அப்போது அவரின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்பில், "குற்றப் புலனாய்வுப் பிரிவில் (சி.ஐ.டி) இருந்து கதைக்கின்றோம். நீ எங்கு நிற்கின்றாய்?"– என்று கூறியுள்ளனர். மாணவனும்தான் நிற்கும் இடத்தைக் கூறியுள்ளார். அங்கு வந்து அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற சிலர், சக மாணவன் ஒருவரின் பெயரைக் கூறி விசாரித்துத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர். தாக்கியவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் என்று தாக்கப்பட்ட மாணவன் தெரிவித்தார்.

அதன்பின்னர் அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கைக்காக வந்த இராணுவத்தினரிடம் இந்தச் சம்பவம் குறித்துக் கூறப்பட்டது. அதையடுத்து அவர்கள் யாழ். போக்குவரத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினர். அதையடுத்து மாணவன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்தவரும், யாழில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியருமான ஒருவர் தாக்கப்பட்ட மாணவனினால் அடையாளம் காணப்பட்டு, யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற–4,106)

## கால்நடைகளுக்கும் கூடாது கழிவு ஒயில் கலந்துள்ள நீர்

### மருத்துவ நிபுணர் அறிவுரை

யாழ்ப்பாணம், டிசெ. 16

கழிவு ஒயில் கலந்த தண்ணீரை மனிதர் குடிக்கமுடியாது. கொதிக்க வைத்தாலும் எண்ணெய்த் தன்மை போகாது. அந்தத் தண்ணீரை ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகளுக்கும் கொடுக்கக்கூடாது. எண்ணெய்த் தன்மையை அகற்றிவிட்டே விலங்குகளுக்கும் நீரைக் கொடுக்க வேண்டும் என்று பொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன் தெரிவித்தார்.

அரச திணைக்களங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுன்னாகம் உள்ளிட்ட இடங்களில் தண்ணீருடன் கழிவு ஒயில் கலந்திருக்கிறது. அந்தத் தண்ணீரை பயன்படுத்தலாமா என்று கேழ்வியெழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், ஒயில்கலந்ததண்ணீரைக்குடிக்க முடியாது.

அந்தத் தண்ணீரைக் கொதிக்க வைத்தாலும் எண்ணெய்த் தன்மை போகாது. அந்தத் தண்ணீரை வாளியில் விடும்போது மேற்புறத்தில் எண்ணெய்த் தன்மை மிதக்கும். அந்த எண்ணெய்த் தன்மை வெளியேறும் வரை மேற்புறத்தில் உள்ள நீரை ஊற்றிவிட்டுப் பின்னரே ஆடு, மாடுகளுக்கு குடிக்க வழங்க வேண்டும் – என்றார்.

அங்கு கலந்துகொண்ட முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றுகையில், எம்மைச் சுற்றி பலவித தாக்கங்கள், நோய்கள் உள்ளன. நிலத்தடி நீரில், உணவில், காற்றில் எனப் பல முறைகளிலும் நச்சுத் தன்மையான சூழல் நிலவுகிறது. அவ் வளவுக்கு மத்தியிலும் தான் நாம் உயிர்வாழ வேண்டியுள்ளது.

அதனை விடப் பெரிய பிரச்சினை சூழலில் நெருக்கமாக இருப்பது. நோய்களிலிருந்து விடுபட்டு இருக்க அனைவரும் இயன்றளவு உடற்பயிற்சி செய்ய வேண்டும் – என்றார்.

(த–4)

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன் மூலம் பல பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

**இடபம்**: மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். சிலர் நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின்வேலைகளைச்சரியாகத்திட்டமிட்டுச் செய்வீர்கள்.

**மிதுனம்**: மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவராக உயர்வீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். புதிய முதலீடுகளில் நன்றாகச் சிந்தித்த பிறகே ஈடுபடவும்.

**கடகம்**: சிறிய நோய் என்றாலும் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. மருத்துவம் சார்ந்த செலவுகள் காத்திருக்கின்றன, கவனம் தேவை. குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**சிங்கம்**: நெருங்கியவர்களுக்கு அரிய உதவிகளைச் செய்து கௌரவம் அடைவீர்கள். உங்கள் சிந்தனையில் தெளிவு பிறக்கும். செயலில் வேகம் அதிகரிக்கும். புதிய நிலங்களை வாங்குவதற்குக் கடன் கிடைக்கும்.

**கன்னி**: எவ்ரையும் பகைத்துக்கொள்ளாமல் உங்களின் வேலைகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். சக கலைஞர்களிடம் உங்களின் இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**துலாம்**: குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப் பயன் பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மிக பலம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடந்துகொண்டு குழப்பங்களைத் தவிர்க்கவும். நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.

**தனுசு**: கையிருப்புப் பொருள்களையும், பணத்தையும் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். மேலும் குறுக்கு வழியில் எந்தச் செயலையும் செய்ய நினைக்க வேண்டாம். உறுதியான எண்ணத்துடன் பணியாற்றுவீர்கள்.


**மகரம்**: நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேசுவீர்கள். உங்களைப் பற்றிப் புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு அவர்களிடமிருந்து நாசூக்காக விலகி விடுவீர்கள்.

**கும்பம்**: உங்களின் முயற்சிகள் பல மடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலை தூக்க நேரலாம்.

**மீனம்**: உங்களின் பேச்சாற்றல் அதிகரிக்கும்; தன்னம்பிக்கை உயரும். உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்ல முறையில் புரிந்து கொள்வார்கள். புதிய பொறுப்புக்கள் தாமாகவே தேடி வரும்.

## புதிய தீவு





ஐஸ்லாந்து கடற்கரை அருகே 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீன் பிடிக்கச் சென்ற குழுவில் ஒருவர், கடலில் குறிப்பிட்ட இடத்தில் கரும்புகை வெளியாவதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். அந்தப் புகையைப் பார்த்ததும் படகு எரிவதாக நினைத்து, தனது கப்பலின் கப்டனிடம் தகவல் தெரிவித்து அந்த இடத்தின் அருகே படகைச் செலுத்தியுள்ளார்.

அங்கு சென்று பார்த்தபோதுதான், புகைக்கான காரணம் படகு எரிவது அல்ல என்று தெரியவந்துள்ளது. கடலுக்கு அடியில் உள்ள எரிமலை ஒன்று சீறிக்கொண்டிருந்ததால் தண்ணீரின் மட்டத்தில் புகைந்துகொண்டிருந்ததோடு காற்றில் எங்கும் சாம்பல் படலமாக உருவாகியிருந்தது தெரியவந்துள்ளது.

எரிமலை சீற்றத்தின் பயங்கரமான ஆபத்தை நன்கு உணர்ந்தவர்களாக இருந்தாலும், அங்கு என்னதான் நிகழ்கிறது என்பதைக் காண அதன் அருகிலேயே இருந்துள்ளனர். இதையடுத்து அவர்கள் தங்கள் வாழ்நாளில் அதுவரை கண்டிராத அதிசயம் ஒன்றை கண்முன்னே கண்டு வியந்துள்ளனர். எரிமலை சீற்றம் ஏற்பட்ட அந்த இடத்தில் சிறிது நேரத்தில் சிறிய தீவு ஒன்று கடலின் நடுவே உருவாகியுள்ளது. இவ்வாறு நடந்த தொடர் சீற்றத்தால் உருவான இந்தப் புதிய தீவு சிறிய அளவில் இருந்தாலும், இன்னும் பல வருடங்கள் நிலைத்திருக்க அதிக வாய்ப்புள்ளதாக அறிவியலாளர்களும் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

1965 ஆம் ஆண்டு முதல் இயற்கை ஆராய்ச்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட இந்தத் தீவில் அவ்வப்போது ஆய்வாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுவருகின்றனர். 1966 இல் திரும்பவும் தொடங்கிய எரிமலைச் சீற்றம் 1967 ஜுன் மாதம் முற்றிலுமாக நின்றது. இதையடுத்து இன்றுவரை அந்த எரிமலையில் எந்த சீற்றமும் ஏற்படவில்லை.

மேலும், 174 மீற்றர் உயரமும், 2.8 சதுர கிலோ மீற்றர் அளவிலும் உள்ள இந்தத் திடீர் தீவு எவ்வாறு தோன்றியது என்பது பலருக்கும் ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

## சாதனை படைத்த லிங்கா

லிங்கா திரைப்படம் வெளியாகிய முதல் நாளிலேயே வசூலை அள்ளிக் கொடுத்துள்ளது. இதுவரையில் திரைப்படம் வெளியாகிய முதல் நாளில் அதிக வசூலானது எந்திரன் திரைப்படம்தான்.

எந்திரன் திரைப்படம் இந்திய மதிப்பில் 11 கோடியை முதல் நாளில் பெற்றுக் கொடுத்தது. ஆனால் லிங்கா திரைப்படம் இந்திய மதிப்பில் 17 கோடியை வசூலித்துள்ளது. தமிழகத்தின் நிலைவரம் மாத்திரம்தான் இது என்கின்றனர் திரைப்படக் குழுவினர்.

ஆந்திராவில் 8 கோடியை வசூலித்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் ரஜினி தனது சாதனையை தானே தகர்த்துள்ளார்.



## ரிலாக்ஸா வாசியுங்க...

கணவனும் மனைவியும் மாலை நேரத்தில் பல்கனியில் அமர்ந்திருக்க, கணவன் மது அருந்திக் கொண்டிருந்தான். மது அருந்தியவாறே சொன்னான், "உன்னை நான் மிகவும் விரும்புகிறேன்; நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது. அப்படி ஒரு வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்கவே இயலவில்லை"

மனைவி கேட்டாள், "என்ன மிக ரொமாண்டிக் மூட் போல! நீங்கள் பேசுகின்றீர்களா உங்களுக்குள் போன மது பேசுகிறதா?"

கணவன் சொன்னான், "நான் தான் பேசுகின்றேன். ஆனால் மதுவோடு பேசிக்கொண்டிருக்கிறேன்!!"






Find us on Facebook


வாழ்க்கை... கால்பந்து விளையாட்டு போல!
நீங்கள்
ஒரு கோல் அடிப்பதற்கு
10 பேர் உதவவும்
11 பேர் எதிர்க்கவும்தான்
செய்வார்கள்



# செய்திகள்

## கிணற்று நீரில் ஒயில்; உடன் பொறுப்பு கூறுக

### சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையம் பிரதேச செயலர்களுக்கு நேற்று மனு



யாழ்ப்பாணம் டிசெ, 16
சுன்னாகம் பகுதியில் மின் உற்பத்தி நிலையங்களின் கழிவுகள் நீரில் கலந்துள்ள காரணத்தினால் சட்ட உரிமங்கள் மற்றும் அனுமதிகள் பெறாது இயங்கி வந்த தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், இலங்கை மின்சார சபை என்பன உடனடியாக மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்து மனு ஒன்றை தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர்களிடம் கையளித்துள்ளது சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையம்.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயிலினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான மனு ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தினால் நேற்றுத் தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் உள்ள மிக முக்கிய விடயங்களில் ஒன்றாக பொறுப்புக் கூறல் விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கழிவு நீர் கிணற்றில் கலந்துள்ள அனைத்துப் பகுதிகளும் அனர்த்தப் பகுதிகள் என உடனடியாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

அனுமதிகள் மற்றும் உரிமங்கள் பெறாது இயங்கி வரும் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் சிறந்த பாதுகாப்பு பொறிமுறையோடு இயங்காத மின் உற்பத்தி நிலையங்களை உடனடியாகத் தடுக்கும் நடவடிக்கைகளை வடமாகாண சபையும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட நீர்ப் பரிசோதனை தொடர்பான விவரங்கள் நிர்வாக அமைப்புகளுக்கும் மக்களுக்கும் உடனடியாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

சந்தேகிக்கப்படும் அனைத்துக் கிணறுகளின் நீரும் உடனடியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். கழிவு எண்ணெய் நீரில் கலந்துள்ளதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான முழு விவரங்களும் மக்களுக்கு அறியத்தரப் படவேண்டும்–என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86-ரி)

## கிளிநொச்சிக்கு வந்தது நெற்பயிர் மானிய உரம்

கிளிநொச்சி, டிசெ.16
காலபோக நெற் பயிர்ச்செய்கைக்காக மானிய அடிப்படையில் வழங்கப்படும் உரம் கிளிநொச்சி கமநலசேவைகள் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி விவசாயிகள் மானிய உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவியரீதியில்மானியஉரம் தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கிடைக்கப் பெற வேண்டிய உரம் போக்குவரத்துக்கான வாகன ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் தாமதமடைந்திருந்தது. எனினும் தற்போது விவசாயிகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மானிய உரம் வந்து சேர்ந்துள்ளது.

அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள ஸ்கந்தபுரம் பகுதி விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படும் உரம் வழங்கப்படவில்லை என விவ சாயிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி விவ சாயிகளால் நெல் விதைக்கப் பட்டு நெற்பயிர் வளர்ந்துள்ள நிலையில் முன்னரே வழங்கப் பட்டிருக்க வேண்டிய மானிய உரம் இன்னமும் வழங்கப்படவில்லை.

கடந்த காலங்களில் தமது நெல் வயல்கள் வெள்ளப் பெருக்கினால்அழிவடைந்ததாகவும்,அதற்காகப் பெற்ற கடன்களை இப்போது வரை செலுத்த முடியாமல் அல்லல்படுவதாகவும், இப்போது தாம் விதைத்துள்ள நெற் பயிர்களுக்கு உரிய காலத்தில் உரம் இடப்படாது விட்டால் அவையும்பாதிப்படைந்துபெரும் நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி கமநல சேவைத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

மானிய உரத்தைக் கொண்டு வந்து சேர்ப்பதில் ஏற்பட்ட போக்குவரத்து இடர்பாடுகளினால் தாமதித்தே உரம் வந்து சேர்ந்துள்ளது.அக்கராயன்,உருத்திரபுரம், பூநகரி பிரதேசங்களுக்கும் இவ்வாறு தாமதித்தே உரம் வந்து சேர்ந்துள்ளது. எனினும் விவசாயிகளுக்குப் போதுமான உரம் வந்துள்ளதால் உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி மானிய உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தனர். (த-14-426)

## பனை ஈர்க்குக் கூடைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல மவுசு

யாழ்ப்பாணம்.டிசெ.16
யாழ்.மாவட்டத்தில் பனை ஈர்க்கில் தயாரிக்கப்பட்ட சந்தைக் கூடைக்கு வெளிநாடுகளில் சந்தை வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் இந்த வருடம் 400 இற்கும் மேற்பட்ட கூடைகளை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பனைசார் கைவினைப் பொருள்களுக்குத் தற்போது வெளிநாடுகளில் அதிகளவு சந்தை வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இங்குள்ள உற்பத்திப் பொருள்களைப் பார்வையிட்டுச் செல்லும் முகவர்கள் அந்தந்த நாடுகளின் முகவர்களுக்குத் தெரியப்படுத்திய பின்னர் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதியைப் பனை அபிவிருத்திச் சபையிடம் கோரியுள்ளனர்.

இதனடிப்படையில் இந்த வருடம் பனை ஈர்க்கில் தயாரிக்கப்பட்ட சந்தைக் கூடைக்கு அதிகளவு சந்தை வாய்ப்பு கிடைத்துள்ளது. விற்பனை நிறுவனங்கள் சந்தைக் கூடைக்கு அனுமதி கோரியுள்ளதால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வித்தியாசமான வடிவமைப்புக்களில் அவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் தரமான –வித்தியாசமான உற்பத்திகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் நிலையில் இந்த வருடம் ஈர்க்கில் தயாரிக்கப்பட்ட சந்தைக் கூடைக்கு வெளி நாடுகளில் கிராக்கி ஏற்பட்டுள் ளது. பனை சார் கைவினை உற்பத்தியாளர்களுக்கு இவ்வாறான புதிய உற்பத்திகளை வழங்கிச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து வருமானத்தை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கம் – என்றார். (த-14)

## மஞ்சள் கோட்டில் பொலிஸாரை மோதிய சாரதி

தென்மராட்சி,டிசெ.16
மஞ்சள் கோட்டில் நடந்து சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை மோதிய வாகனச் சாரதியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

நுணாவில் சந்தியில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடையில் தேனீர் அருந்திவிட்டுத் திரும்புகையில் வவுனியாவிலிருந்து வந்த பிக்கப் வாகனம் மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தருக்குக் கால் முறிந்ததுடன் தலையிலும் காயமேற்பட்டது.

பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாகனச் சாரதியான வவுனியா வாசியைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## நுளம்புகளின் பெருக்கம் கிளிநொச்சியில் அதிகம்

### டெங்கு பரவலாம் என அச்சம்

கிளிநொச்சி,டிசெ.16
கிளிநொச்சியில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் டெங்கு போன்ற நோய்கள் பரவக்கூடிய ஏதுநிலைகள் அதிகம் காணப்படுவதாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சியில் மழையை அடுத்து கிராமப் புறங்கள் மற்றும் நகரப் பகுதிகளின் பல இடங்களிலும் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இவற்றின் மூலம் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மாலை ஆகியதும் மக்கள் வாழ்விடங்களில் நுளம்புத் தொல்லை அதிகரித்துக் காணப் படுகின்றது. நுளம்பின் பெருக் கத்தால் மாணவர்கள் கூட நுளம்பு வலைகளினுள்ளேயே இருந்து படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து உதவவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

யாழ்.குடாநாடு உட்பட நாட்டின் பல பகுதிகளில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் காணப்படுகின்றது.அதுகிளிநொச்சிக்கும் வந்து விடுமோ என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். (த-426)

## அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு தனித் தொலைபேசி வேண்டும்

### விபத்துக்கள் குறித்து உடன் தகவல் வழங்குவதற்கு

யாழ்ப்பாண்ம், டிசெ 16
யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தனியான தொலைபேசி பொருத்தப்பட்டு அதன் இலக்கத்தை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கான பெரிய வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்தியசாலை திகழ்கிறது. அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் அவசரநோயாளர்கள் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்றனர்.

வாகன விபத்துக்கள் அதிகரித்து வரும் இன்றைய கால கட்டத்தில் வீதி விபத்துக்களில் சிக்கிப் பலத்த காயமடைவோரை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வேளையில் வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவைத் தயார்ப்படுத்தும் வகையில் முன் கூட்டியே தகவல் சொல்வதற்கு வசதியாக இந்தப் பிரிவுக்குத் தனியான தொலைபேசி வழங்க வேண்டுமென மக்கள் கூறியுள்ளனர்.

வைத்தியசாலையில் தற்போது உள்ள தன்னியக்கப் பரிவர்த்தனைப் பிரிவு ஊடாக இணைப்புப் பெற்றுத் தகவல் கொடுக்க மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும், தனியாகப் பொருத்தப்படும் தொலைபேசி இலக்கம் பொதுமக்களுக்குத் தெரிந்திருப்பின் உடனுக்குடன் தகவல் கொடுக்க வசதியாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பொது நலத்துடன் சிந்திக்கவேண்டும்

## மன்னார் நகர சபைத் தலைவர் கோரிக்கை



மன்னார், டிசெ. 16

மன்னார் நகர சபையின் பணியாளர்கள், உறுப்பினர்கள் எந்த வித பிரச்சினைகளும் இன்றி இணைந்து சேவையாற்றுகின்றனர். சபையில் மேற்கொள்ளப்படும் அனைத்துத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்படுகின்றன. இந்த நிலையில் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் இவ்வருடத்துக்கான இறுதிக் கூட்டம் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தலைமை உரையாற்றிய போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மன்னார் நகர சபையில் கருத்து வேறுபாடுகள் பல காண்ப்படுகின்ற போதிலும் சபையில் முன்வைக்கப்படுகின்ற தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாங்கள் பல சேவைகளை இந்த மக்களுக்குச் செய்துள்ளோம். அரசினால் எமக்கு கிடைக்கின்ற உதவிகள் போதாது. அமைச்சின் உதவிகள் கூடப் பெரிதாகக் கிடைப்பதில்லை. இருந்தாலும் மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு சிறப்பாக இந்த வேலையை முன்னெடுத்து வருகின்றோம்.

இதுவரை மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மன்னார் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களைப் பட்டியலிட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டியுள்ளது. நாங்கள் மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங்கள் மக்களுக்கு அவை உரிய முறையில் சென்றடையவில்லை.

எவற்றைச் செய்தாலும் மக்கள் போதாது என்ற நிலையில் இருந்து மாறமாட்டார்கள். பொது நலத்துடன் சிந்திக்கின்ற தன்மை எமது மக்களுக்கு இருக்க வேண்டும். அவர்கள் மன்னார் நகர சபையுடன் இணைந்து செயற்பட்டு எமக்காக கதைக்கவேண்டும். சிலருடைய கருத்துக்கள் எமக்கு எதிரானதாக உள்ளன.

இருந்தாலும் நகரசபையின் உறுப்பினர்கள் எவரும் சுய நோக்குடன் செயற்பட்டதில்லை. மக்களுக்காக எவ்வளவு தியாகங்களை அவர்கள் செய்துள்ளனர். நாங்கள் பல்வேறு கசப்பான வார்த்தைகளைக் கேட்டும் எமது மக்களுக்காகக் கோபங்களை அடக்கி சேவையாற்றி வருகின்றோம்—என்றார். (த–56)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சிறிமுருகன் சனசமுக நிலையத்துக்கு வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தனது பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 75 பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கியுள்ளார். (த–9)

# மாற்றுவலுவுள்ளோருக்கு பொது இடங்களில் வசதி

## வேண்டும் என்று வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாணத்தில் மாற்றுவலுடையவர்கள் பயன்படுத்தும் வகையில் பொது இடங்களில் உரிய வசதிகள் செய்யப்படவில்லை. இதனால் மாற்றுவலுவுடையவர்கள் பொதுத் தேவைகளின்போது இன்னொருவரின் உதவியை நாடவேண்டியுள்ளதாக மாற்றுவலுவுள்ளோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோருக்கான அணுகுமுறை வசதிகள் கடந்த ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னதாகப் பொது இடங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனவும், இவ்வாறான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சமூக சேவைகள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக வைத்தியசாலைகள், பொது நூலகங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட பொது இடங்களிலும், இருமாடிக் கட்டடங்கள் அமைக்கப்படும்போதும் மாற்றுவலுவுடையவர்கள் பயன்படுத்தும் வகையில் உராய்வுடன் கூடிய சாய்தளமான படிகள் அமைக்கப்படவேண்டும். இது தொடர்பான அறிக்கைகள் ஏற்கனவே திணைக்களங்களுக்குச் சமூக சேவைகள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அறிவிக்கப்பட்ட படி வடக்கு மாகாணத்தில் அத்தகைய வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. 30 வீதமான இடங்களில் கூட இத்தகைய வசதிகள் சரி வர ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் பொதுத் தேவைக்காகச் செல்லும் மாற்றுவலுவுடையவர்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னொருவரின் உதவியை நாடி நிற்பதுடன், ஆபத்தான நிலையில் உட்பிரவேசிக்க வேண்டி நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டபடி பொது இடங்களில் மாற்றுவலுவுடையவர்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் வசதிகளையும், புதிதாகக் கட்டப்படும் இரு மாடிக் கட்டடங்களில் கட்டட விதிமுறைகளுக்கு ஏற்ப வசதிகளையும் அமைக்க வேண்டும் என மாற்றுவலுவுடையவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த–14)

# திருட்டைத் தடுத்து நிறுத்த துணிந்து நின்ற முதியவர்

## கைவிரலைப் பறிகொடுத்தார்

தென்மராட்சி, டிசெ.16

70 வயதிலும் திருட்டு முயற்சியைத் தடுத்த முதியவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பியோடினர் திருடர்கள். அவர்களது வாள்வெட்டில் முதியவரின் கைவிரல்கள் நான்கு பாதிப்புக்கு உள்ளாகின.

இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி இரவு சாவகச்சேரி கல்வயல் துர்க்கை அம்மன் கோயிலடியில் இடம்பெற்றுள்ளது.

இரவு 9 மணியளவில் இந்தப் பகுதியில் தனித்திருந்த வயோதிபத் தம்பதியின் வீட்டுக்குச் சென்ற நால்வர் புலனாய்வுத்துறை வந்துள்ளதாகக் கூறி கதவைத் திறக்குமாறு கோரினர். உள்நுழைந்தவர்கள் திருடர்கள் என்பதை உணர்ந்த தம்பதியினர் கூக்குரலிடவே அவர்கள் தாம் வைத்திருந்த வாளால் வெட்டியபோது முதியவர் கையைக் கொடுத்து தடுத்துள்ளார். தம்பதியர் மேலும் சத்தமிடவே திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

கைவிரல்களில் பலத்த வெட்டுக் காயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த இளையதம்பி சண்முகம் (வயது–70) என்பவரே காயமடைந்தவராவார். அதேவேளை கட்டிய மனைவியுடன் ஏற்பட்ட தகராறினால் பிளேட்டினால் தனது கையை வெட்டிய இளம் குடும்பஸ்தரொருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீசாலை தெற்கில் 14 ஆம் திகதி இரவு இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராமன் ராஜீவன் (வயது–24) என்பவரே காயமடைந்தவராவார். (த–9)

# தண்டவாளத்தில் கல் வைத்து விளையாடியோர் கைது

தென்மராட்சி, டிசெ.16

ரயில் வரும் வேளையில் கற்கள் நசிப்பதைப் பார்ப்பதற்காகத் தண்டவாளத்தில் கற்களை அடுக்கி வைத்த மூன்று இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நாவற்குழியில் இடம்பெற்றது.

17,18 வயதுகளையுடைய மூன்று இளைஞர்களும் குளத்தில் குளிக்கச் சென்றபோது ரயில் வரும் நேரம் என்பதால் தண்டவாளத்தில் சிறிய கற்களை அடுக்கியுள்ளனர்.

அவ்வேளையில் அவ்வழியே வந்த படையினர் மூன்று பேரையும் கைது செய்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (த–9)

# பாடசாலைப் பெயரை மாற்றுவதற்கு எதிர்ப்பு

வவுனியா, டிசெ.16

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையை கிறிஸ்தவக் கல்லூரியாகப் பெயர் மாற்றுவது குறித்துப் பாடசாலை நிர்வாகத்தினர் ஆலோசித்து வருகின்றமைக்கு இந்துப் பெற்றோர்கள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டுகளாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையாக இயங்கி வந்த இந்தப் பாடசாலையை அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பெயர் மாற்றம் செய்யப் பாடசாலை நிர்வாகம் துணை போகக்கூடாது என அவர்கள் கோரியுள்ளனர்.

தொடர்ந்தும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை என்ற பெயரையே பயன்படுத்துமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (த–402)

# வறுமையான குடும்பங்களின் போஷாக்கு விருத்திக்கு உதவி

வவுனியா, டிசெ. 16

வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் போஷாக்கை விருத்தி செய்தல் மற்றும் வாழ்வாதாரத்தை. விருத்தி செய்தலை நோக்காகக் கொண்டு வீட்டுத் தோட்ட செயகைக்கான விதை தானியங்கள், கோழிக் குஞ்சுகள் என்பவை வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் கடந்த சனிக்கிழமை வவுனியாவில் வழங்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் மாகாண நிதி ஒதுக்கீட்டில் வறுமைகோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக விதை தானியங்கள் கல்மடு, பூம்புகார், வவுனியா வடக்கு, மதியாமடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 120 குடும்பங்களுக்குப் போதனைகண்ணொடுவ விதை ஆராச்சி நிலையத்தின் உதவியுடன் வழங்கப்பட்டன.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வேலர் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த 11 பேருக்கு கோழிக் குஞ்சுகளும் அதற்குரிய தீவனமும் வழங்கப்பட்டுள்ளன. (த–402)



# செய்திகள்

## பனம் பொருள் உற்பத்தி குறித்த பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், டிசெ. 16
பனை அபிவிருத்திச் சபையின் கைதடி ஆராய்ச்சி நிலையத்தின் ஊடாக பனம் பொருள் உற்பத்தி தொடர்பான புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பது குறித்த பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி ஆராய்ச்சி நிலையத்தில் இடம் பெறும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு ஆராய்ச்சி நிலையத்தினூடான புதிய உற்பத்திகள் தொடர்பான விளக்கங்களை அளிக்கவுள்ளதாக சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார். சபையில் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருக்கும் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி பனம் பொருள் உற்பத்தி செய்தல், அவற்றைப் பாதுகாப்பது தொடர்பில் இந்தப் பயிற்சிப் பட்டறையில் விளக்கம் அளிக்கப் படவுள்ளது. (வ–17)




சாவகச்சேரி சங்கத்தானை ரயில் நிலையப் பாதைக் கடவை எச்சரிக்கைப் பலகை இடித்துச் சாய்க்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. வாகனச் சாரதிகளின் கவனக்குறைவால் கம்பத்துடன் வாகனம் மோதி எச்சரிக்கைப் பலகை சேதத்துக்கு உள்ளாகி இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ)

## விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் கையளிப்பு



வலி. வடக்கு, டிசெ. 16
வட்டுக்கோட்டைவடக்குஇளைய நட்சத்திர விளையாட்டுக் கழகத்தினருக்கு விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு கழகமண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி சார்பாக புளொட் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் இதில் கலந்து கொண்டார். சித்தார்த்தன், வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோர் மேற்படி விளையாட்டு உபகரணங்களை வட்டு வடக்கு இளையநட்சத்திர விளையாட்டுக் கழகத்தினரிடம் கையளித்தனர். (வ–86)

## வெள்ளம் பாதித்தோருக்கு இளைஞர் அமைப்பு உதவி



யாழ்ப்பாணம்.டிசெ.16
யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இளைஞர்களின் அமைப்புக்களால் உலர்உணவுப்பொருள்கள், உபகரணங்கள் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. இளவாலை வருத்தப்படாத வாலி பர் சங்கம், யாழ்.மாவட்ட இளைஞர் கழகம், மற்றும் சுன்னாகம் ஐயனார் இளைஞர்கழகம்ஆகியவை இணைந்து 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் 25 ஆயிரம்ரூபா பெறுமதியான உபஉணவுப் பொருள்கள், உப கரணங்கள் என்பவற்றைவழங்கியுள்ளன.

இளவாலை, சேந்தாங்குளம் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம் வற்றாமை காரணமாக அங்குள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

சேந்தாங்குளம் கடற்றொழிலாளர் சங்கத்தால்; இடம்பெயர்ந்து தற்காலிகஇடத்தில் வசித்துவரும், 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட 30 குடும்பங்களுக்கு பால்மா பொதிகள் வழங்கப்பட்டதுடன் உடுவில் பிரதேசத்தில்வாழும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பம் ஒன்றின் குடிசை வீட்டுக்கு (தறப்பாள்) கூரை விரிப்பு ஒன்றும் மற்றும் அரியாலை பிரதேசத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட குழந்தைப் பிள்ளைகளைக் கொண்ட 10 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன. (வ–14)

## கிளிநொச்சி மதுவரி நிலையத்துக்கு பாராட்டு

கிளிநொச்சி டிசெ.16
மது ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்த வருடத்தில் முதல் 11 மாதங்களில் திறம்பட செயற்பட்டமைக்காக கிளிநொச்சி மதுவரி நிலையம், மதுவரி பிரதி ஆணையாளரால் பாராட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மதுவரி பிரதி ஆணையாளர் வசந்த திஸாநாயக்க அது குறித்துப் பாராட்டியுள்ளார்.

கடந்த 11 மாதங்களில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்திய திடீர் சோதனைகளின்போது அகப்பட்ட 351 பேருக்கு எதிராக கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்றங்களில்வழக்குகள்தாக்கல் செய்யப்பட்டுஅவர்களிடமிருந்து 18 லட்சத்து 60 ஆயிரம் ரூபா அபராதமாக வசூலிக்கப்பட்டது.

மது ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. (வ–9)

## போர் பாதித்த குடும்பத்துக்கு மாகாணசபை உறுப்பினர் உதவி

வவுனியா, டிசெ.16
வவுனியா சாஸ்திரிகூளாங்குளம் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வட மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராஜா வாழ்வாதார உதவியை வழங்கியுள்ளார்.



போரால் காலை இழந்த மகனுடனும் நெஞ்சிலேஷெல்துண்டுகளைச் சுமந்துள்ள மகளுடனும்வாழ்ந்து வரும் இ.சந்திரநாதனின் குடும்பத்தின் சுயதொழில் விருத்திக்காக 40 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

அந்த நிதி மூலம் நல்லின பசுமாடு கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (வ–402)

## பொருள்களில் மும்மொழி லேபிள் அவசியம்: மனு கையளிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.16
விற்பனைப்பொருள்களில் மும்மொழிகளும் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் மாவட்ட ரீதியாக வர்த்தகர்கள் மத்தியில் மனுக்கள்கையளிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில்அரசகருமமொழிகளாக சிங்களமும் தமிழும் உள்ளன. அத்துடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் பேணப்படுகின்றது. எனவே மக்களுக்கு விளங்கக்கூடிய மொழியைப் பயன்படுத்துவது மொழி உரிமையாகக் கொள்ளப்பட்டுள்ளது.



இதனடிப்படையில் வர்த்தகர்களால் உற்பத்தி செய்து சந்தைக்கு விடப்படும் பொருள்கள், சேவைகளில் காணப்படும் அறிவுறுத்தல்கள், விளம்பரங்கள், பற்றுச்சீட்டுக்கள், விலைப்பட்டியல் மற்றும் பெயர்ப்பலகை போன்ற வற்றையும் மும்மொழிகளிலும்பிரசுரிக்கப்பட வேண்டியதன் அவசியம் வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான மனுக்களும் மாவட்ட ரீதியாக வர்த்தக சங்கங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் மொழிச் சங்க உறுப்பினர்களால் மாவட்ட ரீதியாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ–14)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2 ஆம் பரிசு ரூ. | 3 ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்

உதயன்

**தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!**

# மாணவர்களே!

## கட்டுரைப் போட்டிக்கு தயாரா நீங்கள்?

உதயன் 30ஆவது ஆண்டு சிறுகதைப் போட்டி விதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில் கட்டுரைப் போட்டி பற்றி எந்தவித அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் வராமையிட்டு நீங்கள் கலங்கிப் போயிருப்பதனை நாமறிவோம்.

**கட்டுரைப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.**

A பிரிவு தரம் 10,11,12,13

Bபிரிவு தரம் தரம் 6,7,8,9

வருங்கால தலைவர்களும், சிந்தனையாளர்களும் நீங்களே!

எங்கே ?

உங்கள் சிந்தனையில் உதித்தவற்றை செயல் வடிவமாக்குவதற்கு முதலில் உங்கள் சிந்தனைக்கு ரி வடிவம் கொடுங்கள்.

தரப்படும் விடயங்களில் ஒன்றினைப் பற்றி கட்டுரையை ஆக்கி அனுப்புங்கள்

30ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு உங்கள் ஆக்கங்களை 28.02.2015இற்கு முன் அனுப்பி வையுங்கள்.

உங்கள் முகவரி உலகிற்கு தெரியவரும் நாள் 14.04.2015 இற்கு ஆகும். ஆம் அன்றைய தினம் பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டிக்கான தலைப்புப் பிரிவுகள் பிரிவு A (600–750 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்'
- 'மாகாணத்துக்கான நிலை பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்'
- 'எமது சட்ட ஒழுங்குகளில் புலம்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்'
- 'எமது பண்பாடும் நாம் படும்பாடும்'
- நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்'

கட்டுரைப்போட்டிக்கான தலைப்புகள் பிரிவு B(400–550 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு'
- 'கிராமியம் எமது உயிர் மூச்சு'
- 'சுற்றாடல் பேணுவோம்'
- 'தமிழர் வாழ்வும் வளமும்'

ஏற்கனவே 2014.12.09,10,11 ஆம் திகதிகளில் உதயனில் அறிவிக்கப்பட்டது போன்று பரிசுத் தொகை அமையும்.

**மகிழ்ச்சிதானே!**

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை / ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கிறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........................................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்

பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்புக்குள்ள மகிமை

ஜனாதிபதி பதவிக்கான தேர்தல்களம் களை கட்டிவிட்டது. இருதரப்பு பரப்புரை மேடைகளும் சூடு பறக்கத் தொடங்கிவிட்டன.

இலங்கை நாட்டில் பொதுவாக பெரும்பான்மை இனத்தின் ஆட்சி அதிகாரமே கோலோச்சி வருகிறதென்பதை கடந்த 60 ஆண்டு காலத்துக்கு மேலாக கண்டு அனுபவித்து வருகின்றோம். பதவிக்கு வரும் பெரும்பான்மைக் கட்சித் தலைவர்களின் தயவிலேயே சிறுபான்மையினர் தமது மக்களுக்கான உரிமைகள் மற்றும் வசதிகளைக் கேட்டும் போராடியும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை இருந்து வருகின்றது. இருந்தாலும் ஜனநாயகத்தின் மிக முக்கிய அம்ச மான மக்கள் தீர்ப்பை நாடும், அதாவது ஆட்சி பீடத்துக்கான தேர்தலை நடத்துகின்ற விடயம் அரசமைப்பு ரீதியாக உறுதிசெய்யப்பட்டிருப்பது கவனத்துக்குரியது.

நாட்டின் அபிவிருத்தியை அடிப்படை நோக்கமாகக் கொண்டே நிறைவேற்று அதிகாரமுறை உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அது ஜனநாயகத்தின் ஆணிவேரையே ஆட்டம் காணச் செய்து விட்டதை சமீப காலத்தில் பார்த்தோம். எதேச்சதிகாரத்துக்கு அது வழிவகுத்து விடலாம். அதனால் அரசமைப்பிலிருந்து அதனை நீக்கி விட வேண்டும் என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அனைவரும் பதவியில் அமர்ந்து ருசி கண்டதன் பின்னர் அதனையே தமது அதிகார துஷ் பிரயோகத்துக்கு பயன்படுத்திக்கொண் டனர். இவை யாவற்றுக்கும் மேலாக தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 18 ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து ஒருவர் மூன்றாவது தடவையும் அந்த அதிகாரப் பதவியில் அமரவழி செய்து கொண்டார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தடவைகளிலுமே அந்த நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டே மக்கள் முன் நின்றார் அவர், இப்பொழுது மூன்றாவது முறையும் போட்டியில் நிற்பது ஒருபுறமிருக்க, எதிர்த்தரப்பினரும் பங்காளிக் கட்சிகளும் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை ஒழிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தி வரும் நிலையிலும், அதனைப் புறந்தள்ளி தேர்தலுக்குப் பின்னர் வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாம் என்றவாறு பரப்புரை செய்கின்றார். மூன்றாம் முறை போட்டியிடுவதற்கு அவர் கூறும் காரணமும் வலுவானதாகத் தெரியவில்லை.

பயங்கரவாதத்தை ஒழிக்கும்படி மக்கள் கூறினார்கள், அதைச் செய்தேன். அபிவிருத்தியை கவனிக்கச் சொன்னார்கள், அதையும் முன்னெடுத்தேன். இப்போது இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க விரும்பியே மூன்றாம் தடவையும் தேர்தலில் நிற்கிறேன் என்கிறார். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டமுறை குறித்து இப்போது ஐ.நா. மனித உரிமை சபை மட்டுமல்ல ஜனாதிபதியே நிறுவியுள்ள ஆணைக் குழுவும் ஆராய்ந்து வருகின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் மத்தள விமான நிலையத்தையும் தான் உருவாக்கினார் என்கிறார்கள் எதிர்க் கட்சியினர். எதிர்கால சந்ததி என்று யாரை குறிப்பிடுகிறார்! தமதும் சகோதரர்களின் பிள்ளைகளையுமா? என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. ஏற்கனவே அவருடைய குடும்பத்தினரும் அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு.

இவை, அரச பக்கமிருந்து எதிரணிக்கு வந்த சிறிசேனவும், அவரை ஆதரிக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க , முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களும் முன் வைக்கும் கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள் எவ் வாறு இருந்தாலும் பதவியிலிருக்கும் ஜனாதி பதியானவர் - ஏற்கனவே இருதடவை வெற்றி பெற்றவர் முன்வைக்கும் கருத்துக்கள் மக்கள் மனங்களில் வெகுவாகப் பதியும் என்பது ஏற் கத்தக்கதே.

ஜனநாயகத்தில் ஆட்சி மாற்றம் என்பது மக்கள் தீர்ப்பையொட்டியே மலர்வதாகும். அந்தத் தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பதை இப்போது அறுதியிட்டுக் கூறமுடியாது.

# சீனாவின் புதிய பட்டுப்பாதை

## அனைத்துலக வல்லாதிக்கத்துக்கான சவால்

த டிப்ளோமட் ஊடகத்திற்காக
ஷன்னொன் ரெய்ஷி

கிழக்கு ஆசியாவை ஐரோப்பாவுடன் இணைப்பதற்கான மிகப் பெரும் வர்த்தக மற்றும் கட்டுமான வலைப்பின்னல் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக 2013இல் சீன அதிபர் ஜீ ஜின்பிங் தகவல் வெளியிட்டார். புதிய பட்டுப் பாதை New Silk Road மற்றும் கடல்வழிப் பட்டுப் பாதை Maritime Silk Road ஆகியவையே இவ்விரு திட்டங்களாகும். சீன அதிபர் இந்தத் திட்டங்கள் தொடர்பான தகவலை வெளியிட்டு ஓர் ஆண்டுக்குள் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் சீன அரசு முனைப்பும் ஆர்வமும் காண்பித்தது. தனது அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டிய இடத்தில் தனது நிதியைச் செலவிடுதல் அவசியமானது என்பதை, சீனாவின் இந்த நகர்வு உறுதிப்படுத்தியது.



திட்டமிடப்பட்ட பட்டுப் பாதை பொருளாதார அபிவிருத்தி யின் ஒரு பகுதியாக சீன மாகாணங்களில் ரயில் பாதைகள், வீதிகள் மற்றும் நீர்க்குழாய்கள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் 16.3 பில்லியன் டொலர்களை ஒதுக்குவதென சீனா தீர்மானித்துள்ளதாக அந்த நாட்டின் அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'ப்ளூம்பெர்க்' ஊடகம் செய்தி வெளியிட்டது. இந்தச் செய்தியை சீன அரசின் 'சீன டெய்லி' நாளி தழும் வெளியிட்டுள்ளது. சீனாவால் மிகப் பெரிய அளவில் முதலீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும் இந்த அபிவிருத்தித் திட்டமானது சீனாவின் பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டாலும், புதிய பட்டுப் பாதைத் திட்டத்தை பூரணப்படுத்துவதே இதன் பிரதான நோக்காகும்.

இதேவேளையில்–இந்தத் திட்டத்துக்குள் உள்ளடங்கும் நாடுகளுக்கு சீன வங்கிகள் கடனாக நிதியை வழங்குவதற்கான உந்துதலை அளிப்பதென்பதுவும் சீனாவின் கோட்பாடாகும். பட்டுப் பாதைத் திட்டத்தில் சீனாவின் பங்காளி நாடுகளுக்கு ஏற்கனவே நிதி வழங்கப்படும் என சீனாவால் உறுதியளிக்கப்பட்டது. இந்தவகையில், இலங்கையின் துறைமுக அபிவிருத்திக்காக 1.4 பில்லியன் டொலர்களும், மத்திய ஆசியாவின் கட்டுமான மற்றும் சக்தி அபிவிருத்திக்காக 50 பில்லியன் டொலர்களும், ஆப்கானிஸ்தானுக்கு பொது உதவியாக 327 மில்லியன் டொலர்களும் வழங்குவதாக சீனா அறிவித்திருந்தது என 'சீன டெய்லி' ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. இதைத் தவிர, சீனாவின் புதிய ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கி, ஆசிய நாடுகளின் அபிவிருத்தி மேம்பாட்டுக்காக மேலும் நிதி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவின் பட்டுப் பாதைத் திட்டமானது முழுமையாக நிறைவடையும் போது 21.1 றில்லியன் டொலர்கள் செலவாகும் என 'வோன்ற் சீன ரைம்ஸ்' கணிப்பிடுகிறது.

சீனா ஆரம்பத்தில் தனது பட்டுப் பாதைத் திட்டத்தில் குறிப்பிடாத சில இடங்களைக் கடந்த ஆறு மாத காலத்தில் இணைத்துள்ளதாக அந்தச் சீன ஊடகம் குறிப்பிட்டுள்ளது. அதாவது மொஸ்கோ, ரஷ்யா டுசன்பே, ரஜிகிஸ்ரான்: ஜகர்த்தா, இந்தோனேஷியா: இலங்கை போன்றனவே சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்துக்குள் உள் வாங்கப்படும் இடங்களாகும். இதற்கு அப்பால் சீனா தற்போதும் தனது முக்கிய பங்காளி நாடுகளை விரிவுபடுத்தி வருகிறது. அண்மையில் ஆப்கான் அதிபர் அஸ்ராப்கானி சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டமையும் பட்டுப் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பட்டுப் பாதைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பெரும்பாலான பிராந்திய நாடுகள் தமது நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக சீனாவின் நிதியுதவியைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றன. ஒரு நாடு செல்வந்த நாடாக மாறுவதற்கு முன்னர் அதன் வீதிகள் சிறப்புற செப்பனிடப்பட்டிருக்க வேண்டும் என சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹொங் லீ அண்மையில் ஊடக மாநாடொன்றில் குறிப்பிட்டிருந்தார்.


உலகின் முன்னணி நாடுகளில் சீனா மட்டுமே அனைத்துலக உதவி வழங்குவதற்குத் தயாராகவுள்ள நாடாக இருக்கலாம். சீனாவின் இந்தப் போக்கு மத்திய ஆசிய நாடுகள், இந்தியப் பெருங்கடல் நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் உள்ள அதிகாரவலுமிக்க நாடுகள் சீனாவுடன் ஏலப்போரை மேற்கொள்வதற்கான வழியை உருவாக்கலாம். இந்த நாடுகள் சீனாவின் நிதியுதவி இராஜதந்திர நோக்கத்தைக் கொண்டதேயன்றி, வேறொன்றுமல்ல எனக் கூறலாம். எடுத்துக்காட்டாக, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள சிறிய நாடுகளான பூட்டான், இலங்கை மற்றும் நேபாளம் போன்றவற்றில் சீனாவின் செல்வாக்கு கையோங்குவதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் சீனா வலுமிக்க நாடாக மாறிவிடுமோ என இந்தியா அச்சப்படுகின்றது என்பதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

சீனாவைப் பொறுத்த அளவில் புதிய பட்டுப் பாதை மற்றும் கடல்சார் பட்டுப்பாதை போன்றவை தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கும், தனது மென்மையான பக்கத்தைக் காண்பிப்பதற்குமான வாய்ப்பாகவே கருதப்படுகிறது. சீனா பெருந்தொகையான நிதியை பிராந்திய நாடுகளுக்கு வழங்குகின்ற போதிலும், அந்த நாடுகள் சீனா தமக்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தலாக இருக்கவில்லை, மென்போக்கையே கடைப்பிடிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதன் மூலம் சீனா மென்போக்காக நடக்கும் அதேவேளையில் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தனது செல்வாக்கையும் அதிகரிப்பதற்கான ஏதுநிலைகள் தோன்றுகின்றன.

சீனாவின் பொருளாதார வலு தற்போது மேலும் அதிகரித்து வருகிறது. சீனா தனது நிதிவளத்தைப் பயன்படுத்தி வெளியுறவுச் செல்வாக்கை வலுப்படுத்துவதைத் தனது நல்வாய்ப்பாகக் கருதுவது இயற்கையானதாகும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்காவால் நடைமுறைப்படுத்தப்பட்ட மார்ஷல் திட்டத்துடன் சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தை சிலர் ஒப்பீடு செய்கின்றனர். இவ்விரு வர்ய்ப்புக்களின் போதும், அதிகரித்து வரும் பிராந்திய அதிகார சக்திகள் தமது பொருளாதாரப் பலத்தைப் பயன்படுத்தி வெளியுறவு இலக்குகளை அடைய விரும்புகின்றன. தனது நாட்டின் பொருளாதாரத்தையும் இதன்மூலம் வலுப்படுத்துவதே அவற்றின் அடிப்படை நோக்காகும். அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் அனைத்துலக அரங்கில் அமெரிக்கா ஒரு வல்லரசாகத் திகழ்வதற்கு உதவியது. அதே போன்று சீனாவும் தனது இரண்டு பட்டுப் பாதைத் திட்டங்களின் மூலம் அனைத்துல்க வல்லாதிக்கச் சக்தியாக உருவாவதை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

விண்ணன்

# யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் வளர்ச்சி குறித்து சற்றுச் சிந்தியுங்கள்



யாழ். மாவட்டத்தின் கிரிக்கெட் எங்கே செல்கின்றது என்ற பெரும் கேள்விக்கு விடை காண வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

அண்மையில் வடமாகாணத்தில் முரளி நட்புக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட மட்டத்திலான பாடசாலைகள் தெரிவுஅணி களத்தில் மோதியபோதிலும் ஆக்கபூர்வமான திறனை வெளிக்காட்டத் தவறின.

மறுபக்கத்தில் தென்னிலங்கையில் இருந்து கலந்து கொண்ட அனைத்துப் பாடசாலைகளும் தனித்துக் களத்தில் நின்று போட்டியிட்டதுடன் வெற்றிகளையும் பெற்றன. இறுதிப் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியும், காலி றிச்மன் கல்லூரியும் மோதி வெற்றிக் கிண்ணங்களைத் தட்டிச் சென்றுள்ளன.

இந்த இடத்தில்தான் யாழ். மாவட்ட பாடசாலைகள் தெரிவு அணியின் திறன் குறித்தும் யாழ். மாவட்ட மட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகளின் திறன் குறித்தும் கேள்விகள் எழுகின்றன.

யாழ். மாவட்டத்தில் நகரப் பகுதியில் பிரபல்யமான ஐந்து பாடசாலை அணிகளும் வலிகாமம் பகுதியில் ஆறு பாடசாலைகளும் வடமராட்சியில் மூன்று பாடசாலைகளும் கிரிக்கெட் அணிகளைக் கொண்டிருக்கின்றன. வருடாந்தம் பல லட்சம் ரூபாவைக் கொட்டி இந்தப் பாடசாலைகள் பல வயதுப்பிரிவினர்களுக்கும் இடையே கிரிக்கெட்டை வளர்த்து வருகின்றன.

இந்த அணிகளில் சில தென்னிலங்கைக்குச் சென்று அங்குள்ள பாடசாலை அணிகளுடன் போட்டியிட்டு வெற்றிகளையும் பெற்றுள்ளன. அப்படி இருந்த போதும் சொந்த மண்ணில் இடம்பெற்ற போட்டியில் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியால் சோபிக்க முடியாமல் போய்விட்டது. மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலிருந்தும் பொறுக்கியெடுத்த சிறந்த வீரர்களைக் கொண்டிருந்த போதும் நான்காம் இடத்தைக் கூடப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலையே ஏற்பட்டுள்ளது.

இது பல கேள்விகளை எழுப்புகிறது. யாழ். மாவட்ட பாடசாலை அணிகளில் போதிய திறமையுள்ள வீரர்கள் இல்லையா? வீரர்களுக்குப் போதிய பயிற்சி இல்லையா? அவர்களை வழிநடத்த சிறப்பான பயிற்றுவிப்பாளர்கள் இல்லையா? பயிற்சிக்கான ஒழுங்கான மைதானம் இல்லையா? அல்லது எல்லாம் இருந்தும் பயிற்சியில் ஈடுபடுவதில் வீரர்களுக்குப் போதிய ஆர்வமும் நேரமும் இல்லையா?

இவற்றையெல்லாம் தாண்டியும் ஒரு காரணம் இருக்கிறது என்கிறார்கள் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள். தெரிவில் பெரும் குளறுபடிகள் இடம்பெற்றன என்கிறார்கள் அவர்கள். தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீரர்களில் சிலருக்கு ஆடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்கிறார்கள். குறிப்பிட்ட சில பாடசாலைகள் அணி வீரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதால் ஏனைய பாடசாலைகளில் உள்ள திறமையானவர்கள் அணியில் பங்கேற்க மறுத்து வருகின்றனர் என்று மற்றொரு சாரார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிரபல்யமான பாடசாலைகளின் வீரர்களை உள்வாங்கும் நோக்குடன் அணித்தலைவர் பதவியை வெளியால் கொடுத்துவிட்டு இரண்டு பாடசாலைகளின் அணி வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதே சிறந்த அணியைக் கட்டமைக்க முடியாமற் போனமைக்கான காரணம் என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். இத்தகைய நிலைமை தொடர்வதற்கு யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் கடந்த இரு வருடங்களாகச் செயற்றிறன் குன்றியிருப்பதும் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இரு வருடங்களாகச் சங்கத்தின் பொதுக் கூட்டம் வேறு நடத்தப்படவில்லை. சங்கத் தலைவரும் கூட ஓய்வு பெற்றுச் சென்றுள்ள நிலையில் சங்கம் தடுமாறுவது தெரிகிறது. இதன் பயனே முரளி கிண்ண பின்னடைவு என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதன் காரணத்தினால் பாடசாலைகள் மட்டத்தில் வீரர்களை தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் இதனால் பல பாடசாலைகள் தமது முன்னணி வீரர்களைப் பயிற்சிக்கு அனுப்பி வைப்பதில்லையெனவும் கிரிக்கெட் பொறுப்பாசிரியர் ஒருவர் கூறுகின்றார்.

காரணம் எதுவானாலும் உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து எதிர்காலத்தில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டிய தேவையும் அவசியமும் காணப்படுகின்றது. உடனடியாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பொதுக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து சங்கத்தின் செயற்பாட்டை மீள் எழுச்சி பெறச் செய்யவேண்டும். இதிலும் கூட நகரப் பகுதியில் நிர்வாகக் கடமைகளைக் குவிக்காது தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர்கள் என அனைத்துக் கல்வி வலயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவே சிறந்த தெரிவுக்கும் செயற்பாட்டுக்கும் வசதியாக அமையும்.

இதேபோன்று அனைத்து கல்வி வலயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று முதல் ஐந்து பேர்கள் கொண்ட தெரிவுக் குழுவை நியமித்து அதன் மூலம் வீரர்களை மாவட்ட அணிக்குத் தெரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தெரிவில் வீரர்களின் ஆற்றல்களும் திறமையும் புள்ளியியல் ரீதியிலும் அறிவியல் ரீதியிலும் அணுகப்பட வேண்டும். இத்தகைய பக்குவப்பட்ட தெரிவுக் குழு அணியைத் தெரிவு செய்யுமாக இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதில் சந்தேகம் இல்லையென்பதே பலருடைய கருத்தும் எண்ணமுமாகும்.

தெரிவு அணிக்கான பயிற்சி விடயத்திலும் கூட அதிக கவனம் எடுக்க வேண்டியதும் அவசியம்.

தனிமரம் தோப்பாகாது என்பது போல தனிமனிதனை அனைத்துக்கும் பொறுப்பாக்காது பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு, விக்கெட் காப்பாளர் பயிற்சி எனப் பிரித்து அதற்கான சிறப்புப் பயிற்சிகளை வழங்க ஒரு குழாம் அமைக்கப்படுவதும் முக்கியம். உச்ச பயிற்சியை வீரர்கள் பெறுவதுடன்உரிய ஆற்றல்கள்கொண்ட அனைவரையும் உள்ளடக்கிய தெரிவு அணியை உருவாக்கி வெற்றி வாய்ப்பை அதிகரிக்க வேண்டும்.

**யாழ். மாவட்டத்தில் நகரப் பகுதியில் பிரபல்யமான ஐந்து பாடசாலை அணிகளும் வலிகாமம் பகுதியில் ஆறு பாடசாலைகளும் வடமராட்சியில் மூன்று பாடசாலைகளும் கிரிக்கெட் அணிகளைக் கொண்டிருக்கின்றன. வருடாந்தம் பல லட்சம் ரூபாவைக் கொட்டி இந்தப் பாடசாலைகள் பல வயதுப் பிரிவினர்களுக்கும் இடையே கிரிக்கெட்டை வளர்த்து வருகின்றன.**

**பிரபல்யமான பாடசாலைகளின் வீரர்களை உள்வாங்கும் நோக்குடன் அணித் தலைவர் பதவியை வெளியால் கொடுத்து விட்டு இரண்டு பாடசாலைகளின் அணி வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதே சிறந்த அணியைக் கட்டமைக்க முடியாமற் போனமைக்கான காரணம் என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர்.**

# வாசகர் திருமுகம்

## அகிலமே உன்னைப் பார்த்து ஆச்சரியப்படுகிறது

எங்கள் உதயனுக்கு வயது முப்பதாம் என்றவுடன் எழுதாமல் இருப்பதற்கு எந்தன் மனம் ஒப்பவில்லை. இன்று போலிருக்கிறது, பள்ளிக்கூடத்தில் அன்று படிப்பித்துக் கொண்டிருக்கையிலே இஞ்சாருங்கோ மாஸ்ரர் இதை ஒருக்காற் பாருங்கோ உதயன் என்றொரு பத்திரிகை இன்று வெளிவந்திருக்காம் என்று என் சக ஆசிரியை எனக்களித்த உதயனை அவ்வேளை பார்த்தேன், பரவசித்தேன். நானும் எழுதினேன். பல கவிதை பாதி குப்பைக்குள். மீதி சிலவற்றைப் போட்டார்கள், படித்தார்கள். அரசாட்சியின் அற்புதத்தால் தடைப்பட்டான் உதயன், தளர்ந்து தான் போய்விட்டோம். உயிர் பெற்றான் மீண்டும். உரக்க எழுதி வந்தான். படித்தார்கள் பலர். பாராட்டும் பல பெற்றான். கொளுத்தினார்கள்; கொன்றார்கள்; நின்றுவிடவில்லை. பீனிக்ஸ் பறவையைப் போல் மீண்டெழுந்து மிளிர்ந்து தலைக்கனத்தோடு தான் தனிப்பாணியில் வந்து அகவை முப்பதை அருளாமல் தொட்டுவிட்டாய். இப்போ உள்ளவர்க்கு என் கவிதை பிடிக்கவில்லை. குப்பைக்குள் எறிகிறார்கள்; குமுறி எழுதுகிறேன். இளசுகளுக்கு இப்போ பழசுகளைப் பிடிக்கலையோ? புதிசுகளை எல்லாம் புழுகித் தள்ளுகிறார். தரம் பார்த்துப் பிரசுரி, தரமுயர்வாய். இன்னும் எழுத்துப் பிழைகளை இயன்றவரை குறைக்கப்பார். இதைச் சொன்னதற்காக இதனையும் எறியாதே. ஆலயங்களில் இன்று இராணுவம் கெடுபிடியாம். முகப்பினில் இன்று முழுப் பிழையாய் எழுதிவிட்டாய். நக்கலுக்கு எழுதினாயோ, நானோ அறியேனிதை. உன் பணிக்கு உரமூட்டியதில் எனக்கும் பங்குண்டு. எடுத்து வைத்துள்ளேன், இளசுகளுக்கு காட்டுவதற்கு. காய்தல் பிறழ்தலின்றிக் கட்டுரைகளைத் தந்தால் தேய்தலின்றி வாழ்ந்திடலாம், தெள்ளு தமிழ் வளர்த்திடலாம். ஆய்வுகளுக்கு ஆவணம் எம் அரிய உதயனென்று அகிலமே பார்த்து உன்னை வியந்து நிற்கிறது.

*வாழ்க வளர்க*
*கவிமணி அன்னைதாஸன், ஊரெழு.*

## கவனிப்பார் இல்லாத வீதி

காங்கேசன்துறை வீதியில் உள்ள சிவலிங்கப்புளியடிச் சந்தியிலிருந்து ஓட்டுமடம் சந்திவரை செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் இதனைப் பயன்படுத்தும் பெருமளவு மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி வீதி மாநகரசபையினரின் பொறுப்பில் உள்ள போதிலும் அவர்கள் இதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த வீதி அண்மையில் பெய்தமழை காரணமாக மோசமாகச் சேதமடைந்து பயன்படுத்தமுடியாத அளவுக்கு மாறியுள்ளது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அனுபவிக்கும் சிரமங்கள் வார்த்தைகளால் கூற முடியாத அளவுக்கு மாறியுள்ளன.

மேலும் இந்த வீதியின் ஓரங்களில் அமைந்துள்ள கழிவுநீர் செல்லும் வாய்க்கால்களும் சேதமடைந்து காணப்படுகின்றன. அவை சுத்தம் செய்யப்படாமையால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரக் கேடுகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

அத்துடன் நுளம்புப் பெருக்கத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வீதியின் ஓரங்களில் குடியிருக்கும் மக்கள் இவற்றைத் துப்புரவு செய்ய வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தக் கழிவு வாய்க்காலின் சில பகுதிகள் திறந்த நிலையில் காணப்படுவதால் வாகனங்களில் செல்பவர்கள் ஆபத்துக்களை எதிர்கொண்டு வருவதையும் காண முடிகின்றது.

அண்மையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் எதிரே வந்த வாகனத்துக்கு வழி விடுவதற்கு முயற்சி செய்தபோது வாய்க்காலில் தவறி வீழ்ந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஆகவே உரிய அதிகாரிகள் இனியும் காலத்தைக் கடத்தாது இந்த வீதியையும் அதனுடன் இணைந்த கழிவு வாய்க்கால்களையும் உரிய வகையில் புனரமைத்துப் பராமரிக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*எஸ்.ஜெயகண்ணா,*
*யாழ்ப்பாணம்.*

### கேலிச் சித்திரம்




## அன்ரன் பாலசிங்கங்கள் வரவேண்டும்

அதற்கிடையில் இவ்வளவு பெரிய மறதி? விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகவும், தமிழர்களின் ஒரே இராஜதந்திரியாகவும் இருந்து உலகளவில் முழங்கிக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கம் மறைந்து எட்டு ஆண்டுகள். கடந்துவிட்டன. பலருக்கு இந்த நினைவு மறந்தே போய்விட்டது. நினைவில் நிறுத்தப்பட்டுக் காலம் காலமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடப் புத்தகமாக இருக்க வேண்டிய ஒருவரது நினைவு மங்கிவருகின்றது. 14.12.2008 அன்று தீராத நோயொன்றின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு சாவைத் தழுவிக்கொண்டார் அந்தத் தத்துவமேதை.

அவரது மறைவுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் முன்னேற்றமும், சர்வதேச இராஜதந்திர நகர்வுகளும், தமிழர்களுக்கு இராஜதந்திர அரங்கில் கிடைத்திருந்த இடமும் முற்றாக மறைந்துவிட்டன. இந்தப் பேரிழப்பே தமிழர்களின் இன்றைய அரசியல் பின்னடைவுக்குப் பிரதான காரணங்களுள் ஒன்றாகவும் இருக்கின்றது.

அவரை நினைவுகூரும் இந்த இடத்தில்தான், விடுதலைப் புலிகள் இல்லாத தருணத்தில் அன்ரன் பாலசிங்கம் போன்ற ஒருவர் சர்வதேச அரங்கில் நமக்காக இருந்தால் எப்படியிருக்கும் என்ற எண்ணத்தைப் பரவவிடவேண்டும். அதற்கான புலமையாளர்களைத் தமிழர் தேசம் உற்பத்திசெய்யவேண்டும் என்கிற எண்ணங்களும் கூடவே விழிப்புக் கொள்கின்றன.

நலிவடைந்து செல்லும் தமிழர் அரசியலை மீட்டு வரவும், புதிய பாதை நோக்கி திசை திருப்பிவிடவும் அந்தத் தரப்பினரே தற்போது அவசியப்படுகின்றனர். உள்ளக ரீதியில் பெரும்பான்மை அரசுடன் அரசியல் நடத்தித் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாணமுடியாது என்ற அனுபவம் மீண்டும் மீண்டும் நிரூபணமாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், எமது பிரச்சினையை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் சென்று; அதனைச் சரியான இராஜதந்திரப் பொறி முறைகளினூடாக புதிய பாதை நோக்கி இழுத்துச் செல்லக்கூடிய அன்ரன் பாலசிங்கங்கள் தேவைப்படுகின்றனர்.

தற்போது தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் ஆயுத ரீதியில் வெற்றியடைவதிலும் பார்க்க அரசியல் அரங்கிலேயே வெற்றி பெறுதலுக்கான கிட்டிய தூரத்தைக் கொண்டிருக்கின்றன. தமிழர் தரப்பின் ஆயுத அரங்கு மௌனிக்கப்பட்ட நிலையில், தொடர்ந்தும் சர்வதேச அரசியல் அரங்கையும் நிசப்தத்துக்குள்ளும், மாய தந்திரங்களுக்குள்ளும் வைத்திருப்பது ஆபத்தானது. இந்த நிலை தொடர்ந்தால் அது தமிழர்களை அழிவுப் பாதை நோக்கியே இழுத்துச் செல்லும். எனவே இதிலிருந்து உடனடியாக மீண்டு வரவேண்டிய காலத்தில் தமிழர்கள் நிற்கின்றனர்.

இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரவே சர்வதேச அரசியல் அரங்கு விருப்பப்படுகின்றது. அதற்கான வேலைகளையும் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. இவ்வாறு சர்வதேசம் எதிர்பார்க்கும் மாற்றத்தில் சில துளிகளாவது இந்த நாட்டில் சிறுபான்மையினமாக இருந்து அநீதிகளையும், ஒடுக்கு முறைகளையும் எதிர்கொள்ளும் தமிழர்கள் பக்கம் நிகழவேண்டும். அந்த மாற்றத்தை தற்போது எவராலும் நிகழ்த்த முடியாது.

எனவேதான் தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச அரங்கு நோக்கி இழுத்துச் செல்லக்கூடிய அன்ரன் பாலசிங்கங்களின் வரவு அவசியப்படுகின்றது.

*த்தி எழுத்து*

# சிறுவர்




## எனது உடலுக்கு என்ன விலை?

மாவீரன் தைமூர் உலகையே நடுங்க வைத்து ஆட்சி செய்து வந்தான். ஒருநாள் அவனுடைய அரசவையில் அவன் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட மன்னர்கள் அவனை வணங்கிக் கப்பம் கட்டச் சென்று கொண்டிருந்தனர். தைமூர் அவனுடைய அரசவையிலிருந்த கவிஞர் கெர்மானியுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண் டிருந்தான். அப்போது தைமூர், 'கெர்மானி, என்னை விலைக்கு விற்பதானால், என்ன விலைக்கு விற்பாய்?' என்று கேட்டார். கெர்மானிக்கு அவனுடைய மன்னன் தைமூரை விட மன உறுதியும், அஞ்சாத குணமும் இருந்தது. உடனே கெர்மானி, 'மாமன்னனே! தங்களை விற்பதாக இருந்தால் இருபத்தைந்து வெள்ளிக் காசுகளுக்கு விற்பேன்' என்றார். இதைக் கேட்ட மன்னன் திகைத்துப் போனான். 'என்னுடைய இடுப்பில் இருக்கும் இந்தத் தோல் வார் மட்டுமே இருபத்தைந்து வெள்ளிக் காசுகளுக்கு விலை போகுமே! அப்படியிருக்க என்னுடைய விலையே இருபத்தைந்து வெள்ளிக் காசுகள் தான் என் கிறாயே...?' என்று கேட்டுச் சிரித்தான். 'மன்னனே, தாங்கள் அணிந்திருக்கும் தோல் வாருக்குத்தான் நான் குறிப்பிட்ட விலை இருபத்தைந்து வெள்ளிக்காசுகள். நீங்கள் ஒரு காசு கூட பெற மாட்டீர்கள்' என்றார் அந்தக் கவிஞர். மன்னன் தைமூர் கோபப்படவில்லை. 'மாமன்னனாக இருந்தாலும் அவனுடைய உடலின் விலை ஒரு காசுக்குக் கூட பெறாது' என்பதை எளிமையாகச் சொன்ன கவிஞருக்குப் பரிசளித்துப் பாராட்டினான்.






எ.நிந்தியா, தரம்–6சி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



கே.அச்சுதன், தரம்–9ஜி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## அரிய தகவல்கள்

1. போனை எடுத்ததும் பேச கிரகாம் பெல் உபயோகித்த வார்த்தை "ஹலோ" என்பதாகும்.
2. நத்தை அதன் கண்ணை இழந்துவிட்டால் கொஞ்ச நாள்களில் புதுக் கண் உருவாகிவிடும்.
3. புரூஸ்லீ அரிசிகளை உயரத் தூக்கி போட்டு சண்டைக்கு நடுவே நூடில்ஸ் சாப்பிடும் இரண்டு குச்சியால் அவற்றைப் பிடிப்பாராம்!
4. ஐரோப்பியக் கண்டத்தில் பாலைவனமே கிடையாது!
5. உலகம் முழுக்க 173 மில்லியன் பயனர்கள் 'ஜி மெயில்' வசதியைப் பயன்படுத்துகிறார்கள்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2015

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2015 ஆம் திகதி முதல் 31.12.2015 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்பபாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவக்கட்டணம் -ரூபா 500.00 (VAT,NBTநீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் -16.12.2014–24.12.2014 ந.ப. 12.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் -26.12.2014 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விதிறத்தல் -26.12.2014 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து கடிதஉறையின் இடதுபக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறை வரிப்பகுதியில் உள்ளகேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 26.12.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக. கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்கா்ரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்

### மாநகரசபை யாழ்ப்பாணம்
### மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விபிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை (12%பெறுமதிசேர் வரியும் 2%தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 124,700.00 |
| 2 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 329,200.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 77,800.00 |
| 4 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 515,090.00 |
| 5 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 97,570.00 |
| 6 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 294,270.00 |
| 7 | அரியாலைமாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 265,900.00 |
| 8 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 494,670.00 |
| 9 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 426,500.00 |
| 10 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 359,100.00 |
| 11 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 63,080.00 |
| 12 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,850.00 |
| 13 | பண்ணை மீன்சந்தை | | 10,000.00 | 3,239,800.00 |
| 14 | குருநகர் மீன்சந்தை | | 10,000.00 | 1,396,500.00 |
| 15 | சுப்பிரமணியம் பூங்காவளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 69,350.00 |
| 16 | புங்கன் குளம் சந்தை | | 2,000.00 | 8,980.00 |
| 17 | இந்துவிடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத்தரிப்பிட பாதுகாப்புநிலையம் | | 1,000.00 | 49,900.00 |

மேலதிக விவரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0718628576

**மாநகரசபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம். 12.12.2014**
(சி/18751)(4.3.6)
**ஆணையாளர்,**
**மாநகரசபை.**

## ஆக்கம்

# அவனுக்கென்ன.. அழகிய மனம்!

■ பிரதீப் மாதவன்

கடிவாளம் கட்டிய குதிரையாக ஓடிக்கொண்டிருந்த தமிழ் சினிமாவைத் திசை திருப்பிய திரைப் படங்களைத்தான் டிரெண்ட் செட்டிங் பிலிம்ஸ் என்று கொண்டாடி வந்திருக்கிறோம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 11– 12– 1964இல் வெளியாகித் தமிழ் சினிமா ரசனைக்குப் புது குருதி பாய்ச்சிய படமே சர்வர் சுந்தரம், திரையுலகைக் கதைக் களமாக்கிய முதல் தமிழ்த் திரைப்படம்.

சினிமா ஸ்ரூடியோக்களில் எப்படிப் படப்பிடிப்பு நடக்கிறது, பாடல் எப்படிப் பதிவு செய்யப்படுகிறது என்ற இரகசியத்தை உடைத்துக் காட்டியது. இந்தப் படத்துக்குக் கிடைத்த வெற்றியும், விருதுகளும், இதே போன்ற கதை அம்சத்துடன் கூடிய பல படங்கள் வெளியாகக் காரணமாக அமைந்தன. அவற்றில் சிவாஜி நடித்த ராமன் எத்தனை ராமனடி, சிவகுமார் நடித்த ஏணிப்படிகள் ஆகிய படங்கள் பெரிய வெற்றியை அடைந்தன.

### நகைச்சுவை நாயகன்

அன்று முன்னணி நகைச்சுவை நடிகராகக் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார் நாகேஷ். எம்.ஜி.ஆர். சிவாஜி இருவருமே தங்களது படங்களில் நாகேஷ் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இதனால் நாகேஷ் கதைகளில் நுழைக்கப்பட்டார். இரண்டு பேரின் படங்களுக்கும் சிக்கல் வராதவாறு தனது கால் ஷீட்டைக் கவனமாகப் பிரித்துக் கொடுத்து நடித்துவந்தார். என்றாலும் அதிகப் படப்பிடிப்புகள் காரணமாக எம்.ஜி.ஆர்., சிவாஜி ஆகிய இரண்டு பேரின் படப்பிடிப்புகளுக்குப் பல சமயங்களில் தாமதமாகப் போவார் நாகேஷ். ஆனால் அவர்கள் கோபித்துக் கொண்டதில்லை.

இவ்விரு சூப்பர் ஸ்டார்களின் படங்களில் நடித்துவந்த அதே வேளை தன் மனதுக்குப் பிடித்தமான குணச்சித்திர வேடங்கள் கிடைத்தால், அவற்றுக்குச் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டு நடித்தார். அது போன்ற வேடங்களில் கதாபாத்திரமாக வாழ ஆரம்பித்தார். ஏ.வி.எம். செட்டியாரின் பார்வையில் நாகேஷ் சிறந்த நகைச்சுவை நடிகர் என்பதைவிட, சிறந்த குணச்சித்திர நடிகராகத் தெரிந்தார். அப்போது தீமிழ் நாடக மேடைக்கு சமகாலக் கதைகளை நாடகங்களாக எழுதிப் பெயர்பெற்று வந்தார் கே.பாலச்சந்தர். சர்வர் சுந்தரம் கே.பாலச்சந்தர் எழுதிய நாடகம்தான். அந்த நாடகத்தைப் பார்த்த செட்டியார், அதை வாங்கித் திரைப்படமாகத் தயாரிக்க முடிவு செய்தார்.

ஆயிரத்தில் ஒருவன் முதல் கட்டப் படப்பிடிப்பு கேரளாவில் நடந்து கொண்டிருந்தது. அதில் நடித்துக்கொண்டிருந்த நாகேஷிடம் தொலைபேசியில் பேசினார் செட்டியார். அத்தனை பெரிய பட அதிபர் நம்மிடம் பேசுவதா என்று நெகிழ்ந்த நாகேஷ், படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பியதும் செட்டியாரைச் சென்று சந்தித்தார்.

சர்வர் சுந்தரம் நாடகத்தோட ரைட்ஸ் வாங்கிவிட்டேன் என்றார் செட்டியார். நீங்க ஒரு முடிவு எடுத்துட்டா அது சரியா இருக்கும். ஆனால், நல்ல மார்க்கெட் உள்ள ஹீரோவா போடுங்க என்றார் நாகேஷ். இந்தக் கதையில நீதான் நடிக்கணும். அதுதான் சரியா இருக்கும் என்றார் செட்டியார். நீங்க முடிவு எடுத்துட்டா அதை மாத்த முடியுமா? என்றார் நாகேஷ். செட்டியார் சிரித்துவிட்டார். கதை, திரைக்கதை, வசனத்தைக் கே. பாலச்சந்தர் எழுத, சமூகப் படங்களை வரிசையாக இயக்கிப் புகழ்பெற்றிருந்த கிருஷ்ணன்–பஞ்சு படத்தை இயக்க, நாகேஷ் கதையின் நாயகனாக நடித்தார்.

உணர்ச்சிகரமான போராட்டம்

சினிமாவில் பெரிய நடிகனாகப் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையோடு சென்னைக்கு வருகிறார் நாகேஷ். எனினும் தனது தோற்றம் பற்றிய தாழ்வு மனப்பான்மையால் தவிக்கிறார். வாய்ப்புகளைத் தேடிச் செல்லும் முன் வயிற்றைக் காயவிடக் கூடாது அல்லவா? அதற்காக உணவு விடுதி ஒன்றில் சர்வராக வேலை செய்கிறார். நாகேஷின் உணவுபறிமாறும் குறும்புகளைப் பல வாடிக்கையாளர்கள் ரசிக்கிறார்கள்.

சிலர் சிடுசிடுக்கிறார்கள். அந்த உணவு விடுதியின் உரிமையாளர் மேஜர் சுந்தரராஜன். அவரது மகள் கே.ஆர்.விஜயா அங்கே அடிக்கடி வருகிறார். நாகேஷைப் பாராட்டுகிறார். தனது முதலாளியின் மகள் என்பதை அறியாத நாகேஷ், கே.ஆர்.விஜயாவின் ஊக்குவிப்பால் உந்தப்பட்டு அவர்பால் ஈர்க்கப்படுகிறார். பிறகு அவரைக் காதலிக்கத் தொடங்குகிறார்.

கே.ஆர். விஜயாவோ தனது கல்லூரி நண்பரான முத்துராமனைக் காதலிக்கிறார். முத்துராமன், நாகேஷின் உயிர் நண்பன். ஒருநாள் முத்துராமனிடம் சென்று கே.ஆர். விஜயாவைக் காதலிப்பதாகச் சொல்கிறார் நாகேஷ். அதைக் கேட்டு காதலனாகிய முத்துராமன் துடிக்கிறார். அதைக் காதலியிடம் சொல்ல, அவரும் துடிக்கிறார். நட்பாகப் பழகியது தப்பாகிவிட்டதே என கே.ஆர். விஜயா தவிக்கிறார். இதற்கிடையில் நாகேஷின் திரையுலகத் தேடல் தீவிரமாகிறது. ஒரு கட்டத்தில் நாகேஷின் திறமை கண்டறியப்பட்டு நாடு போற்றும் நடிகனாகிவிடுகிறார். பணம், புகழ், அந்தஸ்து எல்லாமே கிடைக்க, சர்வர் சுந்தரம் இப்போது நடிகர் சுந்தரம்.

வாழ்க்கையில் எண்ணியதெல்லாம் கிடைத்த பிறகு அடுத்து என்ன? தனது காதலைத் தெரிவிக்கக் கையில் பூக்கொத்தை ஏந்தியபடி கே.ஆர்.விஜயாவைத் தேடி வருகிறார். அப்போது காதலனும் உடன் இருக்க, நாகேஷ் தன் காதலைச் சொல்ல, அந்த நொடியில் ஆரம்பிக்கும் உணர்ச்சிப் போராட்டம் படத்தின் முடிவாக அமைந்தது. காதல் ஒரு மனிதனை உயர்த்தும். அதே நேரம் அதுவே தோல்வியில் முடிந்தால் அந்த மனிதனின் மனதை உடைப்பதற்குப் பதிலாகப் பண்படுத்தும் என்ற கருத்தைத் தூக்கிப்பிடித்தது பாலசந்தரின் தேர்ந்த திரை எழுத்து. காதல் தோல்விக்குப் பிறகு தாயின் இறப்பை எதிர்கொள்ளும் சர்வர் சுந்தரம், ஒரு எளிய மனிதனாக சர்வர் வேலைசெய்தபோது கிடைத்த நிம்மதி, நடிகனாக உயர்ந்தபோது இல்லை என்பதைப் புரியவைப்பதோடு படம் முடியும். வில்லன் இல்லாத படம்.

### இரண்டு நட்சத்திரங்கள்

ஐம்பதாண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சர்வர் சுந்தரம் படத்தை இன்றைய தலைமுறை ரசிகர்கள் பார்த்தால் அதன் திரைக்கதை நேர்த்தியை, கதாபாத்திரங்களின் கட்டமைப்பைப் பாராட்டித் தள்ளுவார்கள். சிவந்த நிறமும், எடுப்பான தோற்றமும் இருந்தால் மட்டுமே சினிமாவில் நாயகனாக உருவாக முடியும் என்ற மூடநம்பிக்கையைச் சர்வர் சுந்தரம்தான் முதன்முதலாக உடைத்தெறிந்தது.

இந்தப் படத்தில் சர்வர் சுந்தரமாக வாழ்ந்த நாகேஷின் நடிப்புத்திறமை எல்லாப் பரிமாணங்களிலும் சிறப்பாக வெளிப்பட்டு நின்றது.

அவரது திரைவாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. படத்தில் வரும் அவளுக்கென்ன அழகிய முகம் என்ற பாடலில் தனது நடனத் திறமையையும் சிறப்பாக வெளிப்படுத்தியதால் அழகிய மனம் கொண்ட கதாபாத்திரமாக நாகேஷை ரசிகர்களுக்கு மேலும் நெருக்கமாக்கியது.

இந்தப் படத்தின் வழியாகப் பிரபலமாகி ஒரு நட்சத்திர எழுத்தாளராகவும், இயக்குநராகவும் உயர்ந்தார் இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர்.

இந்தப்படம் தேசிய விருதைப் பெற்றதோடு, இந்தி உட்பட பல மொழிகளில் மறு ஆக்கம் செய்யப்பட்டு வெற்றிகளைக் குவித்தது.

## வணிகம்

# டி.எவ்.சி.சி. வர்தன வங்கியின் மணி ட்ரான்ஸ்பர் 5 நாடுகளில்



டி.எவ்.சி.சி.வர்தன வங்கி தனது லங்கா மணி ட்ரான்ஸ்பர் வலையமைப்பை ஐந்து நாடுகளில் 275க்கு மேற்பட்ட இடங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது.

இந்த விரிவாக்கத்துக்கான வசதியைப் பெறுவதற்காக மத்திய கிழக்கிலுள்ள இரண்டு பெரிய பணப் பரிவர்த்தனை நிலையங்களான KK எக்ஸ்சேஞ்ச், அல் அன்சாரி எக்ஸ்சேஞ்ச் என்பவற்றுடன் டி.வி.பி. பங்காளித்துவ ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. சிற்றி எக்ஸ்சேஞ்ச், இஸ்லாமிக் எக்ஸ்சேஞ்ச், அல் மிர்காப் எக்ஸ்சேஞ்ச், அல் ஸமான் எக்ஸ்சேஞ்ச் என்பவற்றுடனும் பங்காளித்துவம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2014 டிசெம்பர் முடிவதற்குள் மேலும் ஆறு வெளிநாட்டுப் பங்காளி நிறுவனங்கள் எல்.எம்.ரி. வலையமைப்புடன் இணைந்துகொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிதாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டின் பயனாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், ஓமான், குவைத், பஹ்ரெயின் ஆகிய நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் தமது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகப் பணத்தை அனுப்ப முடியும்.

அவ்வாறே, இலங்கையிலுள்ள தமது குடும்பத்தினருக்கும் பணத்தை விரைவாகவும் இலகுவாகவும் அனுப்பலாம். டி.வி.பியின் லங்கா மணி ட்ரான்ஸ்பர் வலையமைப்பு துரிதமாக விரிவடைந்து வருகிறது.

தற்சமயம் இலங்கையிலுள்ள 700 க்கு மேற்பட்ட பங்காளி நிலையங்களின் ஊடாக பண அனுப்பீட்டுச் சேவை வழங்கப்படுகின்றது. எல்.எம்.ரி வலையமைப்பு 2015ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் ஜோர்தான், சைப்பிரஸ், இத்தாலி, இஸ்ரேல், பிரிட்டன், சவுதி அரேபியா ஆகிய நாடுகளையும் உள்ளடக்கும் விதத்தில் மேலும் விஸ்தரிக்கப்படும்.(த)


# ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸின் வரிக்கு பிந்திய இலாபம் 532 மில்லி.

சொப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஏசியன் அலையன்ஸ் இன் சூரன்ஸ் பி.எல்.சி. செப் ரெம்பர் மாதம் 2014 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்த மூன்றாம் காலாண்டின் வரிக்குப் பிந்திய இலாபமாக 532 மில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ளது. குறித்த காலப் பகுதியில் ஆயுள் தவணைக் கட்டணங்கள் 21 வீத அதிகரிப்பை பதிவு செய்து, 2.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதில் பதிவாகிய 378 மில்லியன் ரூபா அதிகரிப்பு என்பது துறையில் பதிவாகிய உயர் பெறுமதியாக காணப்பட்டது. நிறுவனத்தின் முதலீட்டுப்பிரிவு எய்தியிருந்த சிறந்த பெறுபேறுகளுடன் இணைந்து இது பதிவாகி யிருந்தது. இந்த பெறுபேறுகளில் முதல் காலாண்டுக்கான ஆயுள் பிரிவின் பெறுபேறு கள் உள்ளடங்கியுள்ளதுடன், ஏனைய மூன்று காலாண்டுகளுக்கான பெறுபேறுகள் முழுமையான காலப்பகுதி யில் பிரதிபலிக்கப்படும்.

முதல் ஒன்பது மாத காலப்பகுதிக்கான மொத்த தவணைக்கட்டணங்கள் 3.48 பில்லியன ரூபாவாக பதிவாகியிருந்தது. பொது காப்புறுதி தவணைக் கட்டணங்கள் 1.3 பில்லியன் ரூபாவாகும். ஆயுள் பிரிவின் வரிக்கு பிந்திய இலாபம் 511 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. பொது காப்புறுதி பிரிவு 21 மில்லியன் ரூபாவாக பதிவாகி யிருந்தது. முதல் ஒன்பது மாத காலப்பகுதிக்கான நிறுவனத்தின் பெறுபேறுகள், துறையின் ஏனைய நிறுவனங்களை விட சிறந்த மட்டத்தில் காணப்படுகிறது, ஆயுள் மற்றும் பொது துறைகளில் ஒட்டு மொத்த வளர்ச்சி வீதம் முறையே 8% மற்றும் 2% ஆக பதிவாகியிருந்தன.

துறையின் முன்னோடியாக திகழ்வது தொடர்பில் சொப்ட் லொஜிக் குழுமத்தின் மூலமாக முன்னெடுக்கப்படும் பெறுமதி வாய்ந்த கொள்கைகளுக்கமைவான திட்டங்களின் மூலம் எய்தப்பட்ட உறுதியான பெறுபேறுகளாக இது அமைந்துள்ளது. வளர்ச்சி தொடர்பில் நிறுவனம் இலட்சியத்துடனான பயணத்தை மேற்கொண்டுள்ளது. காப்புறுதித்துறை தொடர்பில் தளரா நம்பிக்கை கொண்டுள்ளதுடன், வேகமாக முன்னேற்றம் கண்டு வரும் இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது.(த)

# கைபேசி வடிவமா இது?



ஸ்மார்ட் கைத்தொலைபேசி வகையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகக் காணப்படும் அப்பிளின் iPhone கைத்தொலைபேசிகள் வரிசையில், அண்மையில் iPhone 6 அறிமுகம் செய்யப் பட்டிருந்தது.

தற்போது iPhone 7 ஸ்மார்ட் கைத்தொலை பேசி வடிவ மைப்பில் அப்பிள் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றவேளை, Martin Hajek எனும் வடிவமைப்பாள ரொருவர் iPhone 7 கைத் தொலை பேசியின் மாதிரி வடிவமைப்பை வெளியிட் டுள்ளார். இந்தக் கைத்தொலை பேசி முழு நீளத் திரை கொண்ட தாகவும், மேற்பகுதியில் அமைந்த ஸ்பீக்கர்களை உடைய தாகவும் இருக்கும் என தெரி விக்கப்பட்டுள் ளது. எனினும் இதன் நம்பகத் தன்மையை அறி வதற்கு 2015ஆம் ஆண்டு செப்டெம் பர் மாதம் வரை காத்திருக்க வேண்டும்.

**காணி தேவை**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் சுமார் 1½ பரப்புக் காணி தேவை.

(54983) (12.3.6) தொடர்பு: 077 004 8439

**பிரத்தியேக வகுப்புக்கள்**

அதிகமான மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்கு கணிதம், வரலாறு, குடியுரிமை பாடங்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

(54946) (12.3.6) தொடர்பு: 075 248 0158

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்




விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த
அழையுங்கள்: 077 326 6949

**இப்பொழுது திரையில்**




**Majestic** காம்பிளக்ஸ்
Cineplex Jaffna ஸ்குவெயர்
8.30am, 12.00noon, 3.30pm, 7.00pm, 10.30pm
021-2227712

# வேலைவாய்ப்புகள்

## டுபாய் & மலேஷியா

### மலேஷியா

| தொழில் வகை | எண்ணிக்கை | சம்பளம் (MR) | அரசினால் அங்கீகரிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|
| பொது தொழிலாளர் (ஆண்) | 50 | 900+OT | Rs. 125,000 |

மேலதிக தகவல்கள்:
* 03 வருட ஒப்பந்தம்,
* வயதெல்லை 21 தொடக்கம் 35 வரை ஆண்கள்,
* 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்,
* உணவு வழங்கப்படாது
* நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்
* மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மலேசிய சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், மருத்துவம், ஒருவழிப்பயணச்சீட்டு

### டுபாய்

| தொழில் வகை | எண்ணிக்கை | சம்பளம் (DHS) | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் | 150 | 800+OT | Rs. 68,000 |

மேலதிக தகவல்கள்:
* 02 வருட ஒப்பந்தம்
* உணவுக்கான கொடுப்பனவு 200 DHS
* 08 மணி நேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்
* மேலதிக சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள் டுபாய் சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், உணவு, மருத்துவம், இருவழிப் பயணச்சீட்டு

குறிப்பு: பண வசதி இல்லாதவர்களுக்கு கடனுதவி வழங்கப்படும்.
16,17,18,19,20ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.

**SAINAS TRAVELS & TOURS**
LL No : 1004
NO;19, Playground Road, Obesekarapura, Rajagiriya
Mobile: 0777311880, 0777588781
Email: stmazoorsl@yahoo.com, sainastravels@gmail.com

# மாபெரும் நத்தார் நிகழ்ச்சி



# 2014

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் அமைந்துள்ள திடலில் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதில் மாபெரும் நத்தார் தோரணம், நத்தார் மரம், அலங்காரமாக வடிவமைக்கப்பட்ட மாட்டுத்தொழுவம், கரோல், சங்கீத நிகழ்ச்சி மற்றும் ஒவ்வொரு நாள்களும் இலங்கையில் மிகப்பிரசித்தி பெற்ற இசைக்குழுவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இசை இரவு நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி நடைபெற உள்ள இடத்தில் சிறு கடைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமானால்



விவரங்களுக்கு: 076 690 7496

டிஜிட்டல் திரைகளில் விளம்பரம் செய்ய வேண்டுமானால்: 076 690 7375

டிசம்பர் மாதம் 25ஆம் திகதி நாடு முழுவதும் தேசிய ரூபவாஹினி, நேத்ரா அலைவரிசைகள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

(f18734) (12.3)

# உலகச் செய்திகள்



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் மிகவும் குள்ளமான இருவருக்கு நேற்றுமுன்தினம் திருமணம் நடைபெற்றுள்ளது. 26 வயதான மணப் பெண்ணான ஜானவி 4.5 அடி உயரமாகவும் மற்றும் 28 வயதான மணமகன் மகாதேவ் படேல் 4.6 அடி உயரமாகவும் இருக்கின்றனர். (ஒ-ரி)

## பருவநிலை மாற்றம் குறித்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல்

லிமா,டிசெ. 16

பருவநிலை மாற்றம் குறித்த வரைவு ஒப்பந்தத்துக்கு ஐ.நா. மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு ஒப்பந்தத்துக்கு இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

பெருவில் நடந்து முடிந்த ஐ.நா மன்றத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டின் முடிவில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரகாலமாக பெரு தலைநகர் லிமாவில் நடந்த கடுமையான வாதப் பிரதிவாதங்களின் முடிவில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பிலான புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான சிறிய நகர்வாக இது நோக்கப்படுகிறது. ஆனால் இந்த ஒப்பந்தத்துக்கான விலையாக, சர்ச்சைக்குரிய முக்கிய முடிவுகள் அனைத்தும் எதிர்வரும் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. புவி வெப்பமடைவதால் ஏற்படும் பாதகங்களை எதிர்கொள்ளத்தேவையான நிதியை ஏழை நாடுகளுக்கு அதிகரிக்கப்போவதாக இந்த ஒப்பந்தத்தின் வரைவுப் பிரதியில் கூறப்பட்டுள்ளது.

பணக்கார நாடுகள் தமது கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைப்போம் என்று வழங்கியுள்ள உறுதிமொழிகளை கண்காணிப்பதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்கப்போவதாகவும் இந்த வரைவுப் பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான புதிய ஒப்பந்தம் மொன்றை எதிர்வரும் ஆண்டு நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடு இது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

அதேவேளை, கரியமிலவாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதில் வளர்ச்சியடைந்த நாடுகளே அதிகமான பங்களிப்பைச் செய்யவேண்டும் என்கிற தனது நிலைப்பாட்டை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கான தனது உரிமையை தாம் தக்கவைத்துக்கொண்டிருப்பதாக இந்தியா கருத்துத் தெரிவித்திருக்கிறது.



## பாலஸ்தீன வலியுறுத்தலை எதிர்க்க இஸ்ரேல் உறுதி

### பிரதமர் நெதன் யாஹூ தெரிவிப்பு

ஜெருசலேம்,டிசெ. 16

இஸ்ரேல் பாலஸ்தீன விவகாரம் குறித்த பேச்சுக்கள் ஆரம்பிக்கவுள்ள நிலையில், ஐ.நாவில் பாலஸ்தீனம் முன்னெடுக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படும் முயற்சியை எதிர்க்க தீர்மானமாக இருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெதன் யாஹூ தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன நிலப்பகுதிகள் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு அடுத்த இரண்டு ஆண்டுகளில் முழுமையாக முடிவுக்கு வர வேண்டும் என ஐநா பாதுகாப்பு சபையில் பாலஸ்தீனம் வலியுறுத்தும் எனத் தெரிகிறது.

ஆனால் இஸ்ரேல் அதற்கு இடம் தந்தால் ஜெருசலேத்தின் மையப் பகுதிக்கே இஸ்லாமிய கடும்போக்குவாதம் வந்துவிடும் என்றும் அதனை அனுமதிக்க போவதில்லை என்றும் நெதன்யாஹூ தெரிவித்துள்ளார். (ஒ-ரி)



## வால்நட்சத்திர கூட்டத்தைக் கண்டு களிக்க வாய்ப்பு

வொஷிங்டன், டிசெ.16

ஒரு வால்நட்சத்திரத்தைப் பார்ப்பதே அரிய நிகழ்வாக இருக்கும் போது, வால் நட்சத்திரக் கூட்டமொன்றைப் பார்க்க முடிவது அபூர்வமான விடயமாகும்.

இந்த அபூர்வ நிகழ்வு நேற்று முன்தினம் அதி காலை நடந்தது. இது பற்றி சர்வதேச விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா ஏற்கனவே தனது இணையத்தளத்தில் அறிவித்திருந்தது. 19 ஆம் நூற்றாண்டில் முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அதிசய நிகழ்வு, ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாத மத்தியில் நடைபெறுவது வழமை. இருந்தாலும் பூமியிலிருந்து இதுவரை அதனைப் பார்க்க முடியாது இருந்தது. மேலும் இதற்கு முன்பு வரை இந்த நிகழ்வு ஏற்பட்டதற்கான எந்தத் தடயமும் இல்லை. நேற்று முன்தினம் இந்த நிகழ்வை நேரில் பார்த்த கோனி டால்டன் ஹாரிஸன் என்பவர் தெரிவிக்கையில்; "சில மணி நேரங்களில் 30க்கும் மேற்பட்ட வால் நட்சத்திரங்களைப் பார்த்தேன். கடைசியாக பார்த்த வால் நட்சத்திரம் பெரிய வாலுடனும் நல்ல வெளிச்சத்துடனும் காட்சியளித்தது. நிச்சயம் இது ஒரு அற்புதமான அனுபவம்" என்று தெரிவித்தார். (ஒ-ரி)

## ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் அபே கட்சி வெற்றி

ஜப்பானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய பிரதமர் ஷின்ஸா அபே மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். ஜப்பான் நாடாளுமன்றத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெற்றது. தற்போதைய பதவிக் காலம் முடிவு பெற மேலும் இரண்டு ஆண்டுகள் இருந்தபோதிலும், தனது பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒப்புதலைப் பெறும் நோக்குடன் இடைக் காலத் தேர்தலை பிரதமர் அபே அறிவித்தார். 475 ஆசனங்களுக்கான தேர்தலில், அவரது ஜனநாயக முற்போக்குக் கட்சியும் கூட்டணிக் கட்சியான கோமைதோ கட்சியும் 328 இடங்களில் வெற்றி பெற்றன. தேர்தல் முடிவுகள் குறித்து ஷின்ஸா அபே கருத்து தெரிவிக்கையில், தனது பொருளாதாரத் திட்டத்துக்கு கிடைத்த வெற்றியாக இதனைத் தாம் கருதுவதாகத் தெரிவித்தார். ஜப்பானை மேலும் செழிப்பான நாடாக ஆக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



இந்தத் தேர்தலில் மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் சுமார் 35 சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்ததாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## எகிப்தில் மீனவர் படகு மீது கப்பல் மோதி 11 பேர் சாவு

கெய்ரோ, டிசெ 16

எகிப்தில் மீனவர்கள் படகொன்றின் மீது சரக்கு கப்பலொன்று பயங்கரமாக மோதியது. இதில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

எகிப்தைச் சேர்ந்த 45க்கும் மேற்பட்ட மீனவர்கள் சூயஸ் வளைகுடாவில் ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். அப்போது அந்தப் பகுதி வழியாக வந்த சரக்கு கப்பல் ஒன்று மீனவர்கள் படகு மீது பயங்கரமாக மோதியுள்ளது. இதில் படகு நொறுங்கி மீனவர்கள் அனைவரும் நீரில் முழ்கினர்.

இதில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 11 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர். 23 பேரைக் காணவில்லை. இவர்களைத் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எகிப்திய கடற்படையினர் மற்றும் பாதுகாப்பு வீரர்கள், மருத்து வர்கள் கரையோரத்தில் தயார் நிலையில் உள்ளனர்.



செங்கடல் துறைமுக அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் அப்துல் ரஹீம் இதுகுறித்துக் கூறும்போது பனாமா நாட்டு கொடியுடன் சென்ற கப்பலொன்று படகுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. 2 இலட்சத்து இருபதாயிரம் தொன் நிறையுள்ள பொருள்களுடன் இத்தாலி துறைமுகத்தில் இருந்து இந்த கப்பல் வந்துள்ளதாகவும். இந்தக் கப்பல் சபாகா என்னும் செங்கடல் துறைமுகத்தில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-ரி)

## பல்லாயிரம் ஆண்டுகளாக கம்பீரமாக நிற்கும் தூண்!



டில்லி, டிசெ. 16

இந்தியாவின் தலைநகரான டில்லியில் அமைந்துள்ள குதுப்மினார் 72.5 மீற்றர்கள் உயரம் கொண்ட கோபுரமாகும். மெஹ்ராலி என்ற இடத்தில் உள்ள இந்த இரும்புத்தூண் உலக அதிசயங்களில் ஒன்றாகும். பழங்கால இந்தியாவின் அதிசயச் சின்னமாகவும் கருதப்படும் இது, மழை, வெய்யில் என்பவற்றினால் எந்த வகையிலும் பாதிப்பு அடையவில்லை என்பதே இதன் சிறப்பம்சமாக விளங்குகிறது. இதனை உறுதியான இரும்பினால் 8 இரும்புக் கம்பிகளால் பூமிக்கடியிலிருந்து கட்டியெழுப்பி உறுதியாகவும் உயரமாகவும் நிறுவியுள்ளனர். இந்திய அரசு இந்தத் தூணைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வேலியை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# 'ஸ்கைப்' மூலம் அரசை நிர்வகித்து வரும் அரசர்



கானா நாட்டில் உள்ள ஹொஹோய் பகுதியின் அரசர் பான்சா ஜேர்மனியில் இருந்த படியே தனது அரசை நிர்வகித்து வருகிறார்.

நவீன யுகத்தில் வேகமாக வளர்ந்துவரும் தகவல்தொழில் நுட்ப வசதியைக் கொண்டு, ஜேர்மனியில் இருந்து கொண்டே தமது நிர்வாகத்தை அவர் மேற்கொண்டு வருகிறார்.

62 வயதுடைய பான்சா, ஜேர்மனியில் இருந்து கொண்டே கானாவில் தமது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதியிலுள்ள 2 இலட்சம் மக்களின் பிரச்சினைகளை 'ஸ்கைப்' மூலம் தீர்த்துவைக்கிறார். சிறு வயதில் படிப்புக்காக ஜேர்மனி சென்ற பான்சா, அங்கு ஒரு பெண்ணை காதலித்துத் திருமணம் செய்துகொண்டு, அங்கேயே தங்கிவிட்டார்.

1987இல் ஹொஹோய்க்கு அரசராக இருந்த பான்சாவின் தாத்தா இறந்ததால், இவர் ஹொஹோயின் அரசராக முடிசூடியுள்ளார். தனது அரசை ஸ்கைப்பில் இணைத்துக் கொண்டு, வீடியோ தகவல் பரிமாற்றம் மூலம் தீர்ப்புகள் சொல்வதும், உத்தரவுகளைப் பிறப்பிப்பதுமாக அரசை நிர்வகித்து வருகிறார். இவர் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே ஹொஹோய்க்குச் சென்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

# ஆயுதபாணிகளால் 50 பேர் சிறைப்பிடிப்பு

## ஆஸி. சிட்னியில் பரபரப்பு

சிட்னி, டிசெ. 16

ஆஸ்திரேலியா சிட்னியின் மார்ட்டின் பிளேஸ் பகுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலையில் ஆயுதபாணிகள் பலரைப் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்துள்ளதாக நியூ சவுத் வேல்ஸ் மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில பணயக் கைதிகள் அரேபிய எழுத்துக்களுடனான கறுப்புக் கொடியை சிற்றுண்டிச்சாலையின் ஜன்னல்களில் அழுத்திக் கொண்டிருந்தார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சிற்றுண்டிச்சாலையைச் சுற்றி பெருமளவு பொலிஸார் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். ஆயுதபாணிகளின் கோரிக்கை என்ன என்பது உடன் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுவொரு தீவிரவாத நடவடிக்கையாக இருக்கலாமென்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நகர்வும் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, பொதுமக்களை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பது மிகவும் கவலையளிப்பதாக ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பாட் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தீவிரவாதிகள் பிடியில் இருந்த பணயக் கைதிகளில் சில பெண்கள் மட்டும் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)





# சந்திரனில் காதல் பொக்கிஷம்

சந்திரனுக்குத் தபால்களை அனுப்பும் மூன் மெயில் என்ற சேவையை அமெரிக்க நிறுவனமான ஆஸ்ட்ரோபோடிக் அறிமுகப்படுத்தியுள்ளது.

அன்புக்குரியவர்களுடனான எமது நினைவுகளை என்றும் பல நூற்றாண்டுகள் நிலவில் அழியாது காக்க முடியும் என்பதற்காக இந்தச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

உலகின் எந்த மூலையிலுள்ள மக்களும் ஆஸ்ட்ரோபோடிக்கின் நிலவில் தரையிறங்கும் இருக்கும் விண்கலம் மூலம் தங்கள் நினைவுச் சின்னங்களை அனுப்பலாம் என அந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜோன் தோர்ன்டன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அந்த நிறுவனம் தனது இணையத்தளத்தில் வெளியிட்ட தகவலின் படி, தற்போது சிறிய அளவிலான நினைவு சின்னங்களை முதல் நிலவுப் பயணத்துக்காகச் சேகரிக்கத் தொடங்கியுள்ளோம். அனுப்ப நினைக்கும் பொருளின் நிறைக் கேற்ப 460 டொலர் முதல் 26000 டொலர் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விண்கலம் தரையிறங்கியதும் நினைவுச் சின்னத்தின் ஒளிப்படமும், காணொலியும் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. (ஓ–ரி)

# வானில் பறக்கும் சுவிஸ் வீரர்



சுவிஸ் முன்னாள் விமானப்படை வீரரான வெஸ் ரொசி. இவர் ஜெட்பேக் கருவி மூலம் பறக்கும் ஜெட்மென் ஆவார். இவர் கின்னஸ் சாதனையாளராவார். இவர் ஹெலிகொப்டரிலிருந்து குதித்து ஜெட்பேக் கருவி உதவியுடன் துபாயில் வான் பகுதியில் பறக்கின்றார். சிறிய இறக்கையுடன் ஜெட்பேக் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை முதுகில் கட்டிக் கொண்டு இயக்கினால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு மிக விரைவாக பறந்து செல்லும். (ஓ–ரி)

# கொங்கோவில் படகு கவிழ்ந்து 129 பேர் சாவு

ஆபிரிக்க நாடான கொங்கோவில் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 129 பேர் உயிரிழந்தனர். கொங்கோவின் தெற்குப்பகுதியில் உள்ள உவிரா நகரை நோக்கி 350க்கும் மேற்பட்ட பயணிகளுடன் எம்.வி. முடம்பாலா என்ற படகு கடந்த வியாழக்கிழமை சென்று கொண்டிருந்தது. மோசமான வானிலை காரணமாக மோபா, கலேமீ நகரங்களுக்கு இடையே அந்தப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவலறிந்ததும் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று 232 பேரைக் காப்பாற்றினர். மற்றவர்கள் நீரில் மூழ்கி விட்டனர். இதுவரை 129 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக கொங்கோ மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் லாரண்ட் கஹோசி சும்பா தெரிவித்தார். (ஓ–ரி)

# நீக்கப்பட்ட இரகசிய ஆவணங்களை கோருகிறது பிரிட்டன் நாடாளுமன்றம்

அமெரிக்க உளவு அமைப்பால் சித்திரவதைகள் செய்யப்பட்டமை தொடர்பான ஆவணங்களில், பிரிட்டனின் பங்கு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இரகசிய ஆவணங்களை அமெரிக்கா தமக்கு அளிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழு கோரவுள்ளது.

அமெரிக்காவின் மீது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, அந்நாட்டின் புலனாய்வு அமைப்பான சி ஐ ஏ, அல்குவைதா சந்தேக நபர்களை மிகவும் கொடூரமாக சித்திரவதை செய்ததாக அமெரிக்க செனட் அறிக்கை கூறியுள்ளது. தேசியப் பாதுகாப்புக் காரணங்களால், தாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சில தகவல்கள் அந்த அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டதாக பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதே நேரம் கைதிகள் தவறாக நடத்தப்பட்டமை தொடர்பில் பிரிட்டனின் ஈடுபாடு குறித்து எதுவும் அதில் நீக்கப்படவில்லை என்றும் பிரதமர் அலுவலகம் கூறுகிறது. பிரிட்டனின் நாடாளுமன்றத்தின் கீழ்சபை உறுப்பினர்கள் அடங்கிய, பாதுகாப்பு மற்றும் உளவு நிறுவனங்களுக்கான குழு, 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பிறகு கைதிகள் நடத்தப்பட்ட விதம் குறித்து ஆராய்ந்து வருகிறது.

இது குறித்து அமெரிக்க செனட்டில் அளிக்கப்பட்ட அறிக்கையில் இருந்து நீக்கப்பட்ட பகுதிகளில், பிரிட்டனின் பங்கு பற்றி ஏதேனும் இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்வதற்காக நீக்கப்பட்ட பகுதிகளை அளிக்குமாறு அமெரிக்காவிடம் கோரப்போவதாக, பாதுகாப்பு மற்றும் புலனாய்வு விவகாரங்களுக்கான நாடாளுமன்றக் குழுத் தலைவர் மால்கம் ரிவ்கைண்ட் தெரிவித்தார்.

# பல்சுவை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 150 | 150 | 80 | 160 | 140 | 140 | 160 | 140-160 | 80-100 |
| கரட் | 180 | 160-250 | 180 | 240-300 | 180 | [illegible] | 200 | 200 | 210-220 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 35-40 | 40 | 50 | 80 | 45-60 | 15-20 |
| பயிற்றை | 200 | 250 | 250 | 280 | 200 | 240 | 180 | 200-260 | 200-220 |
| பாகல் | 300 | 400 | 400 | 320 | 300 | 280 | 120 | 250-300 | 200-280 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 | 45 | 90 | 260 | 80-120 | 40-50 |
| பெ.வெங்காயம் | 90 | 120 | 100 | 100-110 | 120 | 130 | 100 | 110-120 | 70-90 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 40-80 | 100 | 100 | 80 | 100 | 120-160 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 35 | 50 | 60 | 40-60 | 25-40 |
| தக்காளி | 180 | 200 | 150 | 200 | 200 | 200 | 120 | 200-240 | 140-160 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 | 80 | 70 | 80 | 80 | 100-120 | 60-80 |
| கீரை | 40 | 50 | 30 | 20-25 | 40-50 | 50 | 30 | 50 | 40-45 |
| பொன்னாங்காணி | 40 | 50 | - | 40 | 40 | 40 | 30 | 15 | 10 |
| மிளகாய் | 400 | 600 | 500 | 600 | 500 | 600 | 500-600 | 600-800 | 400-500 |
| புடோல் | 150 | 140 | 120 | 120 | 110 | 120 | 140 | 120-160 | 100 |
| கோவா | 160 | 130 | 150 | 180 | 140 | 160 | 170 | 160-200 | 150 |
| வெண்டி | 160 | 160 | 160 | 140 | 140 | 190 | 150 | 100-120 | 80-120 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 | 170 | 180 | 200 | 200 | 130-160 |
| லீக்ஸ் | 300 | 260 | 280 | 280 | 280 | 320 | 200 | 250-280 | 260 |
| தேங்காய் | 30-50 | 35-50 | 35 | 25-40 | 30-40 | 45-50 | 35-50 | 40-50 | 40-45 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80-100 | 100 | 70-140 | 90 | 120 | 80-120 | - |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 | 40 | 150 | 120-140 | 60 |
| வல்லாரை | 15 | 20 | - | 10 | 30 | 20 | 20 | 20 | 10 |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 6 | 5 | | 7 | | 4 | 8 |
| 5 | | | | | | 9 | | |
| | 8 | 9 | 2 | 4 | 1 | | | |
| | 2 | | | | | | | 5 |
| 6 | | | 3 | | 4 | | | 7 |
| 8 | | | | | | | 2 | |
| | | | 1 | 5 | 3 | 6 | 9 | |
| | | | | | | | | 3 |
| 4 | 5 | | 9 | | | 7 | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**மார்கழி-02**
**புதன்கிழமை**
**17.12.2014**

திதி: தசமி
மு.ப.08.56 வரை
நட்சத்திரம்: சித்திரை
மு.இ.08.04 வரை
சுபநேரம்:
04.52-06.22 வரை
இராகுகாலம்:
12.22-01.52 வரை

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 5 | 4 | 7 | 9 | 1 | 2 |
| 2 | 4 | 7 | 9 | 1 | 8 | 6 | 3 | 5 |
| 1 | 5 | 9 | 2 | 3 | 6 | 4 | 8 | 7 |
| 3 | 7 | 8 | 1 | 2 | 4 | 5 | 6 | 9 |
| 4 | 9 | 1 | 7 | 6 | 5 | 8 | 2 | 3 |
| 6 | 2 | 5 | 3 | 8 | 9 | 7 | 4 | 1 |
| 5 | 3 | 4 | 8 | 9 | 2 | 1 | 7 | 6 |
| 7 | 8 | 2 | 6 | 5 | 1 | 3 | 9 | 4 |
| 9 | 1 | 6 | 4 | 7 | 3 | 2 | 5 | 8 |

## நேர்மையும் உண்மையும் வெற்றியை பெற்றுக்கொடுக்கும்

எவ்வளவுதான் முயன்றாலும் முழுவதும் தூய செயலோ, முற்றிலும் தூய்மையற்ற செயலோ இருக்க முடியாது. தூய்மை, தூய்மையின்மை என்பவற்றுக்கு தீமை செய்யாமை, தீமை செய்வது என்று பொருள் கொள்ள வேண்டும். ஒரு சிலரால் பிறருக்கு தீமை விளைவிக்காமல் வாழவோ மூச்சு விடவோ முடியாது. ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒன்றின் வாழ்க்கைக்கு அழிவு தேடிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவ்வாறு அழிபவை மனித உயிராகவோ, விலங்கின் உயிராகவோ, தாவர இனமாகவோ இருக்கலாம். எப்படியோ, எங்கோ உள்ள ஒன்றின் அழிவுக்கு எமது செயற்பாடு காரணமாகிறது. எனவே செயல் மூலம் நிறை நிலை அடைவது என்பது ஒரு நாளும் இயலாத ஒன்று. காலத்தின் முடிவு வரையில் உழைத்தாலும் குழப்பம் மிகுந்த சிக்கலான புதிர் போன்ற இந்தப் பொறியிலிருந்து வெளியே வர முடியாது. நாங்கள்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




வேலை செய்து கொண்டே இருக்கலாம். ஆனால் முடிவு மட்டும் காண இயலாது. வெற்றியை விரும்பும் எவரும் வாழ்க்கை நல்லது என்றோ, கெட்டது என்றோ கூறமாட்டார்கள். வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னணியில் அளவற்ற நேர்மையும் அளவற்ற உண்மையும் இருந்தே தீரவேண்டும். அவர்களின் சிறந்த வெற்றிக்கு இவையே காரணம். தன்னலத்தை முற்றிலும் துறந்தவனாக அவன் இல்லாவிடினும் தன்னலத் துறவு நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பான். மனிதகுலத்தின் மாபெரும் தலைவர்கள் உயர்நிலையில் செயல்புரிவார்கள். ஒவ்வொருவரும் தாம் செய்த வினைப்பயனை அனுபவித்தே தீர வேண்டும்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|
| இறால் | 550 | 400-700 | 800-1000 |
| நண்டு | 230 | 250-300 | 300 |
| கணவாய் | 400 | 400 | 800 |
| பாரை | 380 | 400 | 600 |
| சூடை | 100 | 120 | - |
| சீலா | 230 | 300 | 400 |
| விளைமீன் | 380 | 300-400 | 400 |
| முரல் | 210 | 300 | 300 |
| கும்பிளா | 350 | 300 | 400 |
| கிழாக்கன் | 170 | 350 | 300 |
| ஓரா | 210 | 350 | 300 |
| திரளி | 150 | 120-200 | 200 |
| நகரை | 130 | 200 | 200 |
| திருக்கை | 150 | 200 | 150 |
| கொய் | 70 | 60-80 | 200 |
| ஒட்டி | 240 | 250 | 400 |

## தாழ்வு மனப்பான்மையை தகர்ப்போம்




இன்றைய சமுதாயத்தில் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், பெரிதாக் வளர்ந்து நின்று, அவர்களது முன்னேற்றத்துக்கும், முன்னேற்றச் செயல்பாடுகளுக்கும்; முட்டுக்கட்டை போடுவது எது? அவர்கள் மனதில் அடி வரை சென்று ஒட்டிக் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையென்னும் தடைக்கல்லே அது. தனது உணர்வுகளுக்குத் தானே அரணிட்டுக் கொண்டு, தனது திறமையையும், அறிவாற்றலையும் தானே குறைத்துக் கணித்துக் கொண்டு, தனக்குத் தானே தடையாக, முன்னேற்ற எண்ணங்களை மூலையில் வீசி விட்டு, சராசரி வாழ்க்கைக்கும் கீழான வாழ்க்கையை சத்தேயில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றது இன்றைய இளைய சமுதாயம். பொருளாதாரச் சூழ்நிலை பொதுவானதே.

அவமா

னத்திலும், ஏளனத்திலும் வளரும் குழந்தைகளுக்குக் குற்ற உணர்வும், தாழ்வுணர்ச்சியும் இயற்கையாகவே வந்து விடுகின்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வு மேல் மட்டத்திலிருப்பவன், கீழ் மட்டத்திலிருப்பவனை சற்று ஆக்கிரமிப்புடனும், அவமானப்படுத்தும் நோக்கத்துடனுமே இருக்கச் செய்கின்றது. அவ்விதம், ஆக்கிரமிப்பும், அதிகாரத் தோரணையும் பாயும் போது கீழ் மட்டத்திலிருப்பவன் அதை அவமானமாக உணர்கின்றான். அந்தச் சூழ்நிலையில் தன்னைப் பற்றி தாழ்வு எண்ணங்களே அவனுக்குள் விரிகின்றன. அதன் உடனடி விளைவு தாழ்வு மனப்பான்மையின் பிறப்பாகும். சுய மனத்தடைகள் 'எம்மால் முடிந்தது இவ்வளவு தான், இதற்கும் மேல் எமக்கு வேண்டாம்'' எமது தலையெழுத்து இதுதான்', 'வேறு வழியில்லை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு வாழ்க்கையை ஓட்ட வேண்டியதுதான்.' போன்ற சுய மனத் தடைகள் இடப்படும் உரங்களாகும். எல்லாச் சூழ் நிலைகளிலும், நாம் செய்கின்ற காரியங்களும் சரி, செய்யப் போகின்ற காரியங்களும் சரி, எமது திறமைக்கும், அறிவுக்கும் மிகச் சாதாரணமானவை என்ற எண்ணம் அவ் வேலையைச் சுலபமாக்கி விடுவதோடு தாழ்வு மனப்பான்மையையும் குழி தோண்டிப் புதைத்து விடுகின்றன.

# எண் சோதிட பலன்கள் உங்களுக்கு எப்படி?



மக்களது வாழ்க்கைக்கும், முன்னேற்றத்துக்கும் ஆதாரமாக விளங்குவது இந்த 8 ஆம் எண்ணே! ஆனால் மக்கள் இந்த எண்ணை வெறுத்து ஒதுக்குகிறார்கள். இந்த எண் விதியின் எண்ணாக இருப்பதால், நாம் முற்பிறவிகளில் செய்த கர்ம வினைகளை அனுசரித்தே நல்ல பலன்களையோ அல்லது தீய பலன்களையோ கொடுக்கிறது! இவர்கள் எடுத்துக் கொள்ளும் எந்த செயலானாலும் அவற்றில் எதிர்ப்பும், முட்டுக்கட்டையும் உண்டு. ஆனால் எதிர்ப்பையும், தடைகளையும் பொருட்படுத்தாமல் காரியங்களில் ஈடுபடுவார்கள். வெற்றி பெறுவார்கள். இவர்கள்தங்களைப்போல்பாதிக்கப்பட்ட மக்களிடம் மிகவும் அன்பு பாராட்டுவார்கள்.மனதில் இரக்க குணம் இருக்கும். இவர்களில்பெரும்பானோர் பெரிய சாதனைகளை, கடின உழைப்புடன் செய்து முடிப்பார்கள்.

இது விதியின் எண்ணாக இருப்பதால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் வெற்றியோ அல்லது தோல்வியோ தொடர்ந்து வந்தகொண்டே இருக்கும். ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல், தங்களது கடமைகளை இவர்கள் தீவிர முனைப்புடன் செய்து கொண்டிருப்பார்கள். இவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்கு உண்மையாக நன்மைசெய்வார்கள்.

8ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு உறவினர்களின் ஆதரவு பெரும்பாலும் கிடைக்காது. இதனால் வெளியூர், அடுத்த இன மக்கள், வெளிநாடு என அந்நியர்களிடமிருந்தே இவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். இவர்களுக்குத் தொடர்ந்து துன்பங்கள் வந்தால், பின்பு தொடர்ந்து யோகம் வரப்போகிறது என்று பொருள். இதற்குக் காரணம் 8 என்பது இரண்டு பூஜியங்களால் உருவாக்கப்பட்டது. 0+0=8. எனவே, முயற்சிகள் எல்லாம் பயன் அடைவதும், பூஜ்யமாவதும் அவர்களது விதிப்படியே அமைகிறது. விதி என்றவுடன் பயப்படவேண்டாம். இன்று நாம் செய்யும் நல்ல செயல்கள், நாளை நல்ல விதியாக அமைகின்றன! அலட்சியத்துடன் புரியும் தீய செயல்கள், நாளை நிச்சயம் கெட்ட விதியாக மாறி விடுகின்றன! எனவேதான் புறநானூறு கூறுகிறது.

'தீதும்நன்றும் பிறர்தரவாரா'என்று.

எனவே, நேர்மையான வழியில் உழைத்தால் வெற்றி மேல் வெற்றி இவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். ஆரம்பகாலம் முதலே மக்கள் 8ஆம் எண்ணை விதியின் எண் என்று கருதி அஞ்சி வந்துள்ளார்கள். இது தனி மனிதன் வாழ்க்கைக்கும், சமுதாய வாழ்க்கைக்கும் பொருந்தும். இந்த எண்ணின் ஒரு பக்கம் கடுமையானஉழைப்பு,கருணை, ஏற்றம், பெருத்த இராஜயோகம் உண்டு. மறுபக்கம் புரட்சி, எழுச்சி,அராஜகம்,ஒழுங்கின்மை போன்றவையும் உண்டு!

எல்லாம் விதிப்படியேதான் நடக்கிறது என்று இவர்கள் புலம்புவார்கள். பல நேரங்களில் வாழ்வில் விரக்தியும் ஏற்படும். இருப்பினும் தங்களது வாழ்நாளுக்குள், இவர்கள் பெருத்தயோகத்தை அனுபவித்தே ஆவார்கள். மனம் விரக்தியடையும் போது தற்கொலை எண்ணங்கள்கூடச் சிலருக்குத் தோன்றும்.

இவர்கள் சிறந்த நீதிமான்கள், தெய்வத்துக்குப் பயந்தவர்கள். 8ம் எண்ணானது ஒரு மனிதனைப் புடம் போட்டு, அவனைத் தங்கமாக்கி விடும். இவர்களின் வாழ்க்கையில் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளும் 8 ஆம் எண்



வரும் தினங்களிலேயே நடைபெறும்! கிரேக்கர்கள் இந்த எண்ணை நீதியின் கண் என்று அழைத்தனர்.

தாங்கள் எண்ணியதைக்கடைசி வரை நிறைவேற்ற வேண்டும் என்ற தீவிர எண்ணம் உடையவர்கள். தாங்கள் நினைத்ததை அப்படியே வெளியில் சொல்ல மாட்டார்கள். தங்கள் வாழ்வின் பிற்பகுதியில்தான் பெரும்பாலானோர் இன்பத்தை அனுபவிக்கின்றனர். இவர்களுக்குத் தன்னம்பிக்கை குறைவு. எனவே, அதை அவசியம் வளர்த்துக் கொள்ளவேண்டும். தங்களை உலகத்தில் தனிமையாக இருப்பதாக உணர்வார்கள். எனவே எளிதில் அடுத்தவர்களை நம்ப மாட்டார்கள்.

இவர்களுக்குப் பெயர், எண் நன்றாக இருந்தால் மட்டுமே, கெட்ட விதியை மாற்றிக் கொள்ள முடியும். அதில் கவனக்குறைவாகவோ, அலட்சியமாகவோ நடந்து கொள்ளும்போது, துன்பங்கள் தொடர்ந்து வரும்.

பிறர் படும் துன்பம் கண்டு சகிக்காத மனம் கொண்டவர்கள். தங்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும், உதவிகிட்டும் இடத்தையாவது காட்டுவார்கள்.

8 ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைந்தோர், வழிப்பறி, கொலை, போன்ற வழிகளில் துணிந்து ஈடுபடுவார்கள். அதனால் நிச்சயம் தண்டனையும் (சிறை) அடைவார்கள்.

எந்தச் செயலையும் சற்று மெதுவாகவே செய்வார்கள். தரையைப் பார்த்தே நடப்பார்கள்.

எந்த ஒரு பிரச்சினைக்கும், நடுவராக இருந்து நீதி சொல்லச் சிறந்தவர்கள். தம்மிடம் நட்புக் கொண்டவர்களையும், பகைமை கொண்டவர்களையும், தமது வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள். உடல் உழைப்பில் இவர்களுக்கு நாட்டம் அதிகம். பெரும்பாலும் தனிமையாக இருப்பதையே விரும்புவார்கள். இவர்களது பேச்சில் விதி, வாழ்க்கை, தர்மம் என்று அடிக்கடி வார்த்தைகள் வரும். இவர்களுக்குக் காதல் விவகாரங்கள் வெற்றி கொடுக்காது. திருமணமும் பொதுவாக அன்னியத்தில் (அடுத்த ஜாதி, மதம், அந்நிய நாடு) தான் நடக்கும். இவர்களது செல்வ நிலை ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எந்த முன்னேற்றம் வந்தாலும் அதை அனுபவிக்க முடியாமல் பல சோதனைகள் கூடவே வந்து விடும்.

சுதந்திரமான தொழிலைக் காட்டிலும், அடுத்தவர்களின் கீழ் வேலை செய்வதையே விரும்புவார்கள். ஆனால் 8ஆம் எண் வலிமை பெற்றவர்கள். பெரும் தொழில் அதிபர்களாகவும், கடல் கடந்து தொழில் செய்யும் வல்லுநர்களாகவும் இருப்பார்கள்! உடம்பிலோ அல்லது மனத்திலோ ஏதாவது ஒரு குறை அல்லது நோய் இருந்து கொண்டே இருக்கும்.

**அதிர்ஷ்ட நாள்**

இவர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் வரும் 1, 10, 19, 28 ஆகிய நாள்கள் மிகச் சிறந்தவை. 8 ஆம் எண்ணின் தீய குணங்களை 5 ஆம் எண் மட்டுமே போக்கும் வல்லமை படைத்தது. எனவே, 5, 14, 23 ஆகிய நாள்களும் இவர்களுக்கு நன்மையே புரியும். எனவே கூட்டு எண் 1 மற்றும் 5 வரும் நாள்கள் மிகவும் அதிர்ஷ்டமானவை.

4, 13, 22, 31 நாள்களில் நல்லவை தாமாகவே நடக்கும். ஆனால்புதியமுயற்சிகளை இவர்கள் அந்த நாள்களில் தேடிச் செல்லக்கூடாது. 9 ஆம் எண்ணும் நல்ல பலன்களையே செய்யும்.

ஒவ்வொரு மாதத்திலும் 8, 17, 26 ஆகிய நாள்களும், 2, 11, 20, 29 நாள்களும் கெட்ட பலன்களையே கொடுக்கும். கூட்டு எண் 8 மற்றும் 2 வரும் நாள்களைத் தவிர்க்க வேண்டும்.




## எப்போதும் புதுமைப் பெண்கள்!

அறிவும் திறமையும் ஒருங்கே பெற்ற பெண்களை இந்தச் சமூகம் அங்கீகரித்து வரவேற்கிறது. ஆணாதிக்கச் சமூகத்துக்கு அடங்கி ஒடுங்கி இருந்த காலத்தில் வேண்டுமென்றால் பெண்களை அழகுப் பதுமைகளாகப் பார்த்திருக்கலாம். இது சாதிக்கும் பெண்களின் யுகம் என்பதைப் புரியாமல் சிலர் அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசலாம். ஆனால் அதையும் கடந்து பெண்கள் சாதிப்பார்கள். நளினமும் அழகும் பெண்களின் உடைமைகளே. ஆனால் அதைப் பொது இடத்தில், பொதுப் பார்வையில் காட்சிப் பொருளாக்குவது நியாயமா? அதைப்பற்றி பெண்களும் கவலைப்படுவதில்லை. விண்ணில் பறந்து சாகசம் செய்யும் பெண்மையை வேண்டுமானால் வியக்கலாம். ஆனால் எழுத்தில், பேச்சில், சிந்தனையில் இப்படி எதிலுமே பெண்கள் போதையூட்டும் போகப்பொருளாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். இதைப் பெண்கள் போராட்ட உணர்வோடு எதிர்கொள்ளுதல் வேண்டும். இன்றைய கால மாற்றத்தாலும், கலாசாரச் சீரழிவாலும் உயர் பதவியில் இருக்கும் பெண்களைக்கூட உடல் ரீதியாக விமர்சிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. பாரதியாரின் கவிதைகளில் நிரந்தர இடம்பிடித்திருக்கும் பெண்கள் எப்படி அழகுப் பதுமைகளாக இருக்க முடியும்? அடுப்படியில் மட்டுமே முடங்கி விடாமல் பெண்கள் இன்று பல்வேறு துறைகளிலும் சாதித்து வரும் நிலையில், பெண்களை மட்டம்தட்டுவதும், புறம்பேசுவதும் நகைப்புக்குரியது. பெண்கள் சூடிய வாகைகள் எல்லாமே அவர்களின் திறமையாலும் உழைப்பாலும் பெற்றவையே தவிர அவர்களின் புற அழகினால் வாய்த்தவை அல்ல. பெண்களின் உயர்வைச் சகிக்க முடியாமல் வெறும் பொறாமை உணர்வில் அபத்தமாகச் சிந்திப்பதைக் கைவிட வேண்டும்.



# மரக்கறி வாங்கச் சென்றவர் விபத்தில் சிக்கிக் காயமடைந்தார்

அளவெட்டி, டிசெ.16

சுன் னாகம் சந்தையில் மரக்கறி வாங்கிக் கொண்டு வந்தவரை, புத்தூர் வீதியால் வந்த ஓட் டோவும் கே.கே. எஸ். வீதியால் வந்த லாண்ட் மாஸ்டரும் சேர்ந்து சந்தியில் பதம் பார்த் துள்ளன.

இந்தச் சம்பவம் வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. இதன் போது கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த சீனிவாசகம், விக் னேஸ்வரதாஸ்( வயது 55) என்பவரே காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பில் தெரிய வருவதாவது:-

குறித்த நபர் மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் வந்து சுன்னாகம் சந்தை யில் மரக் கறி வாங்கிவிட்டு மருந்தகம் ஒன்றில் மருந்துவாங்கு வதற்காக மனைவியை இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் தனியே சென்றபோது சுன்னாகம் பிரதான சந்தியைக் கடக்க முற்பட்ட வேளையில் புத்தூர் வீதியால் வேகமாக வந்த ஓட்டோ சந்தியில் வைத்து மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது. இதனால் நடு வீதியில் தூக்கி வீசப்பட்டநிலையில் கேகேஎஸ் வீதியால் வந்த லாண்ட் மாஸ்டர் வீதியில் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தவரின் வலது பக்கமார்புமேலாக ஏறியது. இந்தநிலையில் வீதியால் வந்தவர்களின் உதவியுடன் லாண்ட் மாஸ்டர் வாகனத்தை தூக்கி நிறுத்தி அதற்குள் சிக்குண்டவர் வெளியே தூக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகசுன்னாகம், தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை குறித்த ஓட்டோ நிற்காது ஓடி மறைந்துவிட்டது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். (வ-36)

## இலங்கையில் இருந்து வெளியேறினார் அமெரிக்கப் பிரஜை

கொழும்பு,டிசெ.16

அமெரிக்கப் பிரஜையும், அமெரிக்காவைத்தளமாகக் கொண்டு இயங்கும் நீதிக்கான தமிழர்அமைப்பின்தாபகரும் தலைவருமான டொனால்ட் ஞானக்கோன் ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பில், இரகசியப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு 10 மணித்தியாலங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து டொனால்ட் ஞானக்கோன் ஞாயிறு நண்பகல் கொழும்பிலிருந்து விமானம் மூலமாகவேறு ஒரு நாட்டைச் சென்றடைந்துள்ளதாக நம்பிக்கையான வாட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 19 ஆம் திகதி தொடக்கம்அவர் இலங்கையில் தங்கியிருந்ததாகவும் அவ்வேளையில் தாம் அவரை கடந்தமூன்றுவாரங்களாக பின் தொடர்ந்ததாகவும் இரகசியப் பொலிஸார் கூறியுள்ளனர்.(வ)

---

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும் **கதிரவேற்பிள்ளை ஜெயக்குமார்** அவர்களின் அன்புத் தாய்



### திருமதி கதிரவேற்பிள்ளை சரஸ்வதி

அவர்கள் 13.12.2014 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்

ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேசசெயலகம்,
பருத்தித்துறை.

(சி/18752)(4.3.6)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **எட்வின் நேசரட்ணம்** அவர்களின் பாசமிகு தாயார்



### திருமதி சந்தியோகு செபமாலை

அவர்களின் பிரிவால் துயறிற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரா/ உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.

(54992)(10.6.3)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பிமுத்து சிவநாதன்

தோற்றம் 1953.01.21 — மறைவு 2013.11.27

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய தபாற் கந்தோர் வீதி.
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

பிரிவினால் துயருறும்
மனைவி
மற்றும் மகன்

(54947)(4.6.3)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ், புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, நவாலி வடக்கு, அமெரிக்கா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட

### திருமதி சுதாதேவி செகராஜசேகரன்

(இளைப்பாறிய அரச சேவை உத்தியோகத்தர்)



தோற்றம் 24.01.1956 — மறைவு 27.12.2013

திதி: தசமி (16,12,2014) செவ்வாய்க்கிழமை

நீங்கா நினைவுடன் நினைவு கூரும்
கணவர், உடன் பிறப்புக்கள், மைத்துனர், பெறாமக்கள்.

366, திருஞானசம்பந்தர் வீதி,
திருமலை.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 03 . 1923

மறைவு 27 . 12 . 2013

திதி: தசமி

### அமரர் அருணாசலம் அரியரத்தினம்

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

கலை உலகில் திலகம் போல் கனிந்த நாயகமே
கவர்ந்திழுக்கும் புன் சிரிப்பும் கனிவான பேச்சும்
கடமையும் கண்டிப்பும் அன்பான உபசரிப்பும்
அணைத்திடும் வார்த்தைகளும்
அறிவுசேர் புத்தாக்கங்களும்
நிறை ஞானச் செருக்கும் நிர்மலான நடத்தையும்
நினைவினில் வந்துமே வாட்டியே நிற்குதையா...

"சிவபதி."
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

(54927)(4.3.6)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்



மண்ணுலகில் 08 . 06 . 1944

விண்ணுலகில் 16 . 11 . 2014

திதி: அபரபக்க நவமி (16.12.2014)

கடந்த 16.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம் அவர்களின் 31 ஆம் நாளை நினைவு கூரும் வேளையில் இத்துயரச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீரஞ்சலிப் பிரசுரம் வழங்கியும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர்க்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்தியம் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
தொலைபேசி: 077 770 2247

செய்தி

# படையினர் அரசியலில் ஈடுபடுவது தவறில்லை

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

முன்னாள் படையினர் அரசியலில் ஈடுபடுவதில் தவறில்லை என்று தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. பதவியில் இருந்த போதே சரத் பொன்சேகா அரசியலில் நுழைய முடியுமாயின் முன்னாள் படையினருக்கு ஏன் அது முடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஓய்வுபெற்ற படை யினரையும்சேவை யில் உள்ள படையினரையும் ஜனாதிபதிக்கு ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபடுத்திவருவதாகமுன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே பாதுகாப்பு அமைச்சின்செயலாளர்கோத்தபாய இவ்வாறு குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா கூட்டுப் படைகளின் தளபதியாக இருந்து கொண்டு தான் அரசியலில் பிரவேசித்தார். அப்போது அவர் ஜெனரல் தரத்தில் இருந்தார். 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்த பின்னர்தான், சரத் பொன்சேகாவின் பதவி விலகலை ஜனாதிபதி மஹிந்த ஏற்றுக் கொண்டிருந் தார். போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சிறந்த அரசியல் தலைமையை வழங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை குற்றச்சாட்டுகள் மூலம் வீழ்த்தி விடமுடியாது. போரை வெல்வதற்கு அவர் எத்தகைய அரசியல் தலைமையைத்தந்தார் என்பது படையினர் எல்லோருக்கும் தெரியும். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியைத்தான் ஆதரிக்கிறார்கள்.

ஓய்வுபெற்ற படையினர் அரசியலில் ஈடுபடுவதற்கோ, தேர்தலில் போட்டியிடுவதற்கோ, எந்தக் கட்சிக்கும் ஆதரவு தெரிவிப்பதற்கோ, எந்த தடையும் இல்லை. அது அவரவர்விருப்பம்.

சரத்பொன்சேகாவை விட, மேலும் பல ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் வெவ்வேறு கட்சிகளுடன்இணைந்து அரசியலில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு அரசியல் கட்சிகளிலும் அவர் கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்குஆதரவு தெரிவிப்பதற்குஎதிர்ப்புத்தெரி விப்போர், 1989இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடனான தேனிலவுக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் அந்தஸ்த்தைப் பெற்றுக் கொண்டதையும் ஏனைய எல்லா தீவிரவாத அமைப்புகளும்அரசில்கட்சியாகபதிவு செய்து அரசியலில் ஈடுபட்டதையும் மறந்து விட்டனர் என்றும் பாதுகாப்புச்செயலர் குறிப்பிட்டுள்ளார். (உ–5)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிபிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் கைதடி சமூதாய அடிப்படை வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றும் தருமலிங்கம் பிரபு அவர்களின் அன்பு மாமனார்

**கந்தசாமி செல்வராசா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
தென்மராட்சி.

பிரதேச செயலக
உத்தியோகத்தர்கள்
நலன்புரி சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



**இராமலிங்கம் இரஞ்சிதன்**
B.Com (Hons)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.10.1974 | 14.12.2014 |

அன்புள்ளம் கொண்ட அண்ணனாய்
தோழமையுடன் பழகும் தோழனாய்
அறிவுரை சொல்லும் ஆசானாய்
எம்முடன் அல்லும் பகலும்
உறவாடிய உம் பிரிவு எம்மை
ஆற்றொணாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.
உமது பிரிவால் துயருறும் உறவுகளுக்கு

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

இலகடி, அல்வாய். (C/18262) (10.6)

உரிமையாளரும்
ஊழியர்களும்
ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் பா.பாலசிங்கம் அவர்களின்

பாசமிகு தாயார் திருமதி **ந.அன்னலட்சுமி**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நலன்புரி சங்கம், வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1947 . 02 . 25 | 2008 . 12 . 16 |

அமரர் **நல்லையா தவகுலசிங்கம்**(தவம்)
(தவம் அக்ரோ இயந்திரவியல் உரிமையாளர்)

உள்ளத்தில் நல்ல உள்ளம் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்து எண்ணிய காரியங்களை எளிதில் முடித்து எளிமையான வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்தினதும் சமூகத்தினதும் வாழ்வு செழிக்க நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே ஆண்டுகள் ஆறு என்ன ஆயிரம் ஆனாலும் மாறாது உங்கள் பசுமையான நினைவுகள்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் காணிக்கை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 10 . 1974 | 14 . 12 . 2014 |

**இராமலிங்கம் இரஞ்சிதன்**
(B.com. Hons)

எம் உயிருக்கு உயிரான உறவே
பொறுமைக்கு இலக்கணமாய் திகழ்ந்த உத்தமனே,
அமைதியின் பொக்கிஷமே
சாந்த சொரூபியே
நிதானத்தின் நிறைகுடமே - நீ
ஏன் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்தாய்.
மாலுசந்திப்பிள்ளையாருக்கு நீ- இங்கு
செய்த தொண்டு போதுமென்று நினைத்தாயோ
சென்றாயோ அவன் தாளடிக்கு
உன்பிரிவைத் தாங்க முடியவில்லையே
எப்படி எவருக்கும் ஆறுதல் சொல்வது
முடியவில்லையே இறைவா!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன்
உன் உறவுகளுக்கு மனச்சாந்தியை ஏற்படுத்த
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடை,
அல்வாய். (10756)

பொன்னம்பலம் குடும்பம்
(லண்டனில் இருந்து)

## கண்ணீர் அஞ்சலி




யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியும் (நிதி, நிர்வாகம்) கல்வி முதுமாணிக் கற்கை நெறியின் தத்துவமும் மற்றும் சமூகவியல் சிந்தனைகள் பாடத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய முனைவர் செல்வி **நிர்மலாதேவி நல்லையா** அவர்களின் பாசமிகு தாயார்.

**ஸ்ரீமதி அன்னக்கண்டு நல்லையா**

அவர்கள் 12.12.2014 அன்று இறைபதமடைந்தமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளர், விரிவுரையாளர்கள்,
கல்வி முதுமாணி மாணவர்கள், 2ஆம் அணி 2013/2015
(54990) (10.6) தேசிய கல்வி நிறுவக பிராந்திய நிலையம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **நடராசா ஸ்ரீகாந்** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி நடராசா மகேஸ்வரி**

அவர்கள் 09.12.2014 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

# செய்திகள்

## தபால் மூல வாக்களிப்பு: வாக்கு சீட்டுகள் நேற்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

தபால் மூல வாக்களிப்பிற்குரிய வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்திடம் நேற்றையதினம் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. அதற்குரிய வாக்குச் சீட்டுக்கள் கடந்த வெள்ளிக்கிழமையே மாவட்டச் செயலகங்களுக்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அவற்றைப் பொதி செய்து, ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அனுப்பும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது. பொதி செய்யப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் நேற்று மாலையே தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ந-5)

## திருமலை அதி உயர் பாதுகாப்பு பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதி

### மு.கா. – கோத்தா சந்திப்பை அடுத்து



திருகோணமலையில் அதி உயர் பாதுகாப்புப் பிரதேசங்களான கிளப்பன்பேக், கருமலை ஊற்று கரைவலை மீனவர்கள் தொழில் செய்வதற்கும், பள்ளிவாசலுக்குச்சென்று வருவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை வெள்ளை மணல் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு பிரதேசம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட கருமலை ஊற்று, கிளப்பன்பேக் கடற்கரையில் கரைவலை மீன் பிடித் தொழில் செய்து வந்த முஸ்லிம் மீனவர்களுக்கு தொழில் செய்வதற்கு பாதுகாப்புப் படையினரால் பல வருடங்களாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

மு.கா.தலைவர் ரவூப்ஹக்கீம் தலைமையில், பட்டணமும்சூழல் பிரதேசசபை உறுப்பினர் ஏ.எல். பஸீர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், கி.மா.சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் ஆகியோர் கொண்ட குழுவினர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து கருமலை ஊற்று பள்ளி வாசல், மற்றும் மீனவர்களின் வாழ்வாதார மீன்பிடித்தடை தொடர்பாக அண்மையில் கலந்துரையாடியதைத் தொடர்ந்து அந்தத் தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. மீன் பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதோடு கருமலை ஊற்றுப் பள்ளிவாசலுக்குப் பிரத்தியேகப் பாதை அமைத்துக் கொடுத்து பிரதேச மக்கள் பள்ளிவாசலுக்குச் சென்று வருவதற்கு பாதுகாப்புப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1820 ஆம் ஆண்டு கட்டப்பட்ட குறிப்பிட்ட பள்ளிவாசல் முற்றாகச் சேத மாக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக சிறியளவிலான அறை அமைக்கப்பட்டுள்ளது. 10 பேர்ச் அளவுடைய காணி மையப்படுத்தப்பட்டு வேலி அமைக்கப் பட்டுள்ளது.

குறித்த பள்ளிவாசல் உடன் புனரமைக்கப்பட்டு தொழுகைக் கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் பாஸ் அனுமதி நடைமுறையில் பாதுகாப்புப்படை முகாமில் பதிவு செய்த 300 மீனவர்களும் எவ்வித பாஸ் அனுமதியும் இன்றி சுதந்திரமாக தொழில் செய்வதைக் காணமுடிகிறது. இதன் பயனாக இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி தங்கள் தொழில்களைச் செய்வதற்கு ஆயத்தம் செய்து வருகின் றனர். இந்நடைமுறை தொடர வேண் டும் என்று மீனவர்கள் பிரார்த்திக்கின்றனர். (வ-30)

CW K

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம் சின்னத்தம்பி சொக்கலிங்கம்

(இலங்கை துறைமுக அதிகாரசபை, முதல்தர எழுதுவினைஞர், வடமாகாண சமாதான நீதிவான்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் சின்னத்தம்பி நேற்று (15.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
077 184 7643.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(54991) (4.6.3)

### மு.வ.சுப்பிரமணியம் இரத்தினசபாபதி (சபா)



கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசபாபதி 09.12.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பவளம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மகாதேவா மற்றும் பாக்கியநாதன் (ஜேர்மனி), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்), கமலாதேவி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: தர்மரட்ணம் கமலாதேவி (பச்சைக்கிளி)
021 205 2095

(54827) (45.6.)

### திருமதி பாக்கியராணி மனோகரதாசன்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியராணி மனோகரதாசன் 13.12.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-காமாட்சி (கமலம் ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், மனோகரதாசனின் அன்பு மனைவியும், சபாராணி, காலஞ்சென்ற யோகதாசன் மற்றும் தேவராசன், மோகனதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தேவதாசன், பாக்கியதேவி, யோகேஸ்வரன், சத்தியதேவி, பிறேம் குமார், கனகசபை, செல்வேந்திரராணி, விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு மேற்கு, பனங்காணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு.

தகவல்:
கணவர் (கரன்)

(54942) (4.6.3)

## கிழக்கு பல்கலைக்கு பௌதிக வள விருத்தி

### அடிக்கல் நட்டார் அமைச்சர்



திருமலை, டிசெ.16

உயர்கல்வித்துறையின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சகல பல்கலைக்கழகங்களுக்கும் பல வசதி வாய்ப்புக்கள் ஏற்ப டுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக திருகோண மலை வளாகத்துக்கான பௌதீக விஞ்ஞான பீடம், நூலகம், சிற்றுண்டிச்சாலை ஆகிய கட்டடங்களுக்கு அடிக் கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்காக 666 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜ் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (வ)

## கத்திக்குத்துக்கு இலக்காகியவர் வைத்தியசாலையில்

அளவெட்டி, டிசெ.16

மைத்துனர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கத்திக் குத்தில் முடிந்ததில் தங்க வடிவேல் கர்ணன் (வயது-30) என்பவர் காயங்களுடன் தெல்லிப்பழை ஆதார மருத்து வமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அளவெட்டி கலை நகர்ப் பகுதியில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது: கத்திக் குத்துக்கு இலக்கானவரின் மைத்துனர் இரண்டுகிழமைகளுக்கு முன்னர் கத்திக் குத்துக்கு இலக்கானவரது சைக்கிளை எடுத்துச் சென்றதாகவும் 2 கிழமைகளாகியும் சைக்கிளை திருப்பிக் கொடுக்காத நிலை யில் அது பற்றிக் கேட்ட போது ஏற்பட்ட தகராறு முற்றிக் கத்திக் குத்தில் முடிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-36)

## 3 வீதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, டிசெ.16

தென்மராட்சி பிரதேசத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் 3 வீதிகளைப் புனரமைக்க 21 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை எல் லைக்குட்பட்ட சரசாலை மத்தி வீதி, நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வீதி ஆகிய வற்றைப் புனரமைக்க 14 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட எட்டாம் வட்டாரத்தில் பொன்னம்பலம் வீதி, சிவகுரு வீதி ஆகிய வற்றைப் புனரமைக்க 7 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

16 DEC 2014



# பொதுவேட்பாளருக்கான சூழ்ச்சித் திட்டம் சிங்கப்பூரை தளமாகக் கொண்டு வகுப்பு

## சென்றோரின் பயண விவரத்தை வெளியிட்டது அரசு இன்னும் பல தகவல்கள் இருப்பதாகவும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொதுவேட்பாளரை கள மிறக்குவதற்குரிய திட்டத்தை வகுப்பதற்கு சிங்கப்பூரையே சூழ்ச்சித்திட்டக் குழு தளமாகப் பயன்படுத்தியுள்ளது என்றும், அங்கு வகுக்கப்பட்டுள்ள சூழ்ச்சித் திட்டங்கள் விரைவில் அம் பலப்படுத்தப்படும் என்றும் அரசு நேற்று தெரிவித்தது.

நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காகவே பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார் எனவும் அரசு சாடியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து வெளியிடு கையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்சன யாப்பா மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதித் தேர்தலையொட்டி சூழ்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக நாம் குறிப்பிட்டிருந்தோம். அது குறித்த தகவல்களை வெளியிட்டிருந்தோம். அந்த வகையில் பொதுவேட்பாளர் விவகாரத்துக்கு சிங்கப்பூரையே சூழ்ச் சித் திட்டக் குழு தளமாக பயன்படுத் தியுள்ளது.

இதன்படி, நவம்பர் முதலாம் திகதி சந்திரிகா சிங்கப்பூர் சென்றுள்ளார். அதன் பின்னர் நவம்பர் 18 ஆம் திகதி சென்று அமைச்சர் ராஜித சேனாரத்ன 21 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார். திகாம் பரம் 26 ஆம் திகதி சிங்கப்பூருக்குச் சென்று 29 ஆம் திகதி நாடு திரும் பியுள்ளார். இந்த நிலையில், நவம்பர் 2 ஆம் திகதி அங்கு சென்று 4 ஆம் திகதி சம்பிக்க நாடு திரும்பியுள்ளார். ரணில் விக்கிரமசிங்க நவம்பர் 18 ஆம் திகதி சென்று மறுநாள் திரும்பியுள்ளார். மங்கள சமரவீர நவம்பர் 6 ஆம் திகதி சென்று 12 ஆம் திகதி திரும்பியுள்ளார். சரத்பொன்சேகா நவம்பர் 6 ஆம் திகதி சென்று 12 ஆம் திகதி திரும்பியுள் ளார்.அங்கு எவ்வாறான சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவோ தெரியவில்லை. எனினும், தொடர்ந்தும் நாம் தகவல்களை வெளியிடுவோம்.

அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாதகமானதொரு முடிவை எடுக்கும் என்று அரசு நம்புகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(ற–சி)

# இலங்கையர்களின் கறுப்புப்பணம் அனைத்தையும் கைப்பற்றுவோம்

## மோடியைப் போல நடவடிக்கை என்கிறார் ராஜித எம்.பி.

கொழும்பு, டிசெ.16

பொது எதிரணியின் ஆட்சியில் இந்தியப் பிரதமர் மோடியின் பாணியில் வெளிநாட்டு வங்கியிலுள்ள இலங்கையர்களின் கறுப்புப்பணம் இலங்கைக்கே மீளக் கொண்டுவரப்படும் எனப் பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரின் ஊடகப் பேச்சாளரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், தகவலறியும் சட்டத்தையும் 100 நாள்களுக்குள் உறுதிப்படுத்துவோம் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு – 07 இல் உள்ள பொது வேட்பாளர் மைத்திரிபாலவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தஅவர்,மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாம் மிகவும் தெளிவானதொரு வேலைத் திட்டத்தை முன்வைத்துள் ளோம். 100 நாள்களுக்குள் நாட்டில் நல் லாட்சியை ஏற்படுத்துவது தொடர்பில் ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அரசின் பணம் பாரியளவில் கொள்ளையடிக் கப்படுகின்றது. அதனை நாம் நன்றாக அவதானித்து வருகின்றோம். சர்வதேசத்தையும் பகைத்துக் கொண்டு நாடு மிகவும் ஆபத் தான நிலைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

இலங்கையிலுள்ள பலர் வெளி நாட்டு வங்கிகளில் தமது கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ளனர். மோடி இந்தியாவில் செய்தது போல அந்தக் கறுப்புப் பணத்தை இலங்கைக்கு மீளக் கொண்டுவருவோம். அந்தக்கறுப்புப்பணத்தினூடாக நாட்டை அபிவிருத்தி செய்யவும், மக்களின் வறுமையைப்போக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

தற்போது இடம் பெறும் அபிவிருத்திக்கு செலவிடப் படும் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு பணத்தைச் செலவிட்டு சிறந்த அபிவிருத் தியை முன்னெடுப்போம்.

கொள்ளையடிக்கும் பொருளாதாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, வாக்குறுதிகளை நிறைவேற்றாத அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் உறுப்புரிமையை நீக்கி சிறந்த மக்கள் பிரதிநிதிகளை உருவாக்க நடவடிக்கை எடுப்போம். அத்துடன், எமது 100 நாள் வேலைத்திட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கான தகவலறியும் சட்டத்தையும் உறுதிப்படுத்துவோம்.

தற்போதைய நிலையில், தமது தோல்வியை அரசு ஓரளவு ஒப்புக் கொண்டுள்ளது. அரச மற்றும் இராணுவ புலனாய்வுத் தகவல்களில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி உறுதி என்று கூறப்பட்டுள்ளது. தோல்வியுற்றதன் பின்னர் புதிய அரசிடம் மிகவும் அமைதியான முறையில் ஆட்சி அதிகாரத்தைக் கையளிப்பேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கத்தோலிக்க ஆயர்களிடம் உறுதியளித்துள்ளார். எனவே, ஜனவரி 8 ஆம் திகதி முதல் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை நாம் சிறப்பாக முன்னெடுப்போம் – என்றார். (ற–சி)

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா சிவயோகம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவயோகம் நேற்று (15.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசமணி, சந்திரசேகரம், நற்குணராஜா, அற்புதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பவளராணி காலஞ்சென்றவர்களான ரஞ்சித், ரஞ்சன் மற்றும் ரசந்தன் (பிரான்ஸ்), ரஜனி (கனடா), ரஞ்சினி (லண்டன்), ராகினி, ரசிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், யோகராசா மற்றும் வனஜா, ரஞ்சிதா, சுஜிபா, பிரதீபன், ரட்ணதுரை, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தயானந்தன், மற்றும் சுதாநந்தன் சத்தியா, ஜெயானந்தன், நித்தியா, மயூரானந்தன், திவ்யானந்தன், ஜெசேன் சாய்ரா, தபு, சிந்தூரி றொகான், வைதிகா, ஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஷானிகா (தானு), டிலுக்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

46, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (54999) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.



### இராமலிங்கம் இரஞ்சிதன்

(B.Com.Hons- சுபகணநாதன் பண்ணை உரிமையாளர்)

அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இரஞ்சிதன் 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இராமலிங்கம்- காலஞ்சென்ற காருண்யபுஸ்பம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுபதா (முகாமைத்துவ உதவியாளர்-பிரதேசசபை புலோலி) அவர்களின் பாசமிகு கணவரும், துசோபன் (யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை மாணவன்), ஹரிவக்ஸன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜ்மோகன் (கோபி- லண்டன்), கிருஷாந்தி, காயத்திரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிபாஸ்கரன் (Sietta Cables), ஞானேஸ்வரன் (சாவகச்சேரி பிரதேச செயலகம், சமூர்த்தி உத்தியோகத்தர்), இரஞ்சனா (லண்டன்), சுஜாத்தா (லண்டன்), சுகிதா, சுஜித்தா ஆகியோரின் மைத்துனரும், கரீசன் சுகந்தா (லண்டன்), குமரேஸ்வரன் (சூட்டி-கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு, அல்வாய். (இ/18755) (4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கணேஸ்



திக்கத்தைப் பிறப்பிடமாகவும், சண்டில்குளம், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேஸ் நேற்று (15.12.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத் தங்கத்தின் பாசமிகு கணவரும், சிவபாய்க்கியம், நவமணி, செல்வராஜா, செல்வமலர், தில்லை நடராஜா (இராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லையம்பலம், சிற்றம்பலம், சின்னராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டில்குளம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர். T.P: 077 6594251 (52046) (10.6)

செய்திகள்

# வெள்ளை வானில் வந்த சி.ஐ.டியினரே பிள்ளைகளை கடத்தினர்

## ஆணைக்குழுவின் முன்னால் உறவுகள் கதறல்

யாழ்ப்பாணம், டிசெ. 16
வெள்ளை வான்களில் வந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே எமது உறவுகளைக் கடத்தினர். எமக்கு கடத்தியவர்களைத் தெரியும். எங்கள் பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் என்று நேற்றுமுன்தினம் அமர்வில் பல உறவுகள் கண்ணீருடன் ஆணைக்குழுவினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

நெரியகுளத்தைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் சாட்சியமளித்தனர். தமது மகன் 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி வெள்ளைவானில் கடத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். தனியார் கல்வி நிறுவனத்தில் தமது மகன் படித்ததாகவும், அது முடிந்து வரும்போது சைக்கிளைக் கீழே தள்ளிவிட்டு அவரை வெள்ளைவானில் உள்ளே இழுத்து ஏற்றிக் கொண்டு சென்றதாகவும் கூறினர்.

சண்முகபுரத்தைச் சேர்ந்த ஒரு தாயார் சாட்சியமளிக்கையில், தனது மகனை தாண்டிக்குளத்தில் வைத்து, 2008 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி வெள்ளை வானில் கடத்தியதாகத் தெரிவித்தார். கடத்தி 5 நாள்களின் பின்னர் ஊருக்குள் இராணுவத்தினரின் ட்ரக் வாகனத்தில் தனது மகனைக் கொண்டு வந்தனர் என்றும், ட்ரக்கை கலைத்துக் கொண்டு போன போதும் அது போய்விட்டது என்றும் குறிப்பிட்டார். அதன் பின்னர் மகனுக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் சாட்சியமளித்தார்.

நெரியகுளத்தைச் சேர்ந்த தாயார் ஒருவர் சாட்சியமளித்தார். தனது மகன் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி இராணுவப் புலனாய்வாளர்களால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவித்தார். இராணுவப் புலனாய்வாளர்கள் தான் கடத்தினார்கள் என்று நீங்கள் என்ன காரணத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவிக்கின்றீர்கள் என்று ஆணைக்குழுவினர் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், இவ்வாறு கடத்திச் செல்லப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீட்டில் வைத்து எனது மகனைக் கடத்த முயற்சி செய்தார்கள். வீட்டுக்கு வந்த இராணுவப் புலனாய்வாளர்கள் மகனை வலுக்கட்டாயமாக இழுத்து தங்களது மோட்டார் சைக்கிளில் ஏற்றினர். இதன் போது மோட்டார் சைக்கிள் சரிந்து விழ எனது மகன், அவர்களது கையைக் கழத்து விட்டு தப்பி வந்திருந்தார். இதன் பின்னரே, அவரை வெள்ளை வானில் கடத்திச் சென்றனர் என்று உறுதியாகத் தெரிவித்தார். (த-5)

## பிள்ளைகளை கடத்தியவர்கள் இராணுவ உடையில் வந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ.16
இராணுவச் சீருடையில் வீட்டுக்கு வந்த இராணுவத்தினரே எங்களது பிள்ளைகளைக் கொண்டு சென்றனர். விசாரணையின் பின்னர் விடுவிப்பதாகத் தெரிவித்துக் கொண்டு சென்றார்கள். ஆனால் 6 வருடங்கள் கடந்தும் இன்னும் எமது பிள்ளைகள் வீட்டுக்கு வரவில்லை என்று ஆணைக்குழு முன்பாக உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

வாரிக்குட்டியூரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் சாட்சியமளிக்கையில், தனது கணவர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்ததாகவும் அவரை இராணுவத்தினர் கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார்.

'எனது கணவரும், அவரது சகோதரியும் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி சிவராத்திரி அன்று இரவு கோயிலுக்குச் சென்றனர். இதன் போது வேலிக்குள் மறைந்திருந்த சிலர் ரோச் லைட்டை நிறுத்துமாறு கூறிவிட்டு எனது கணவரின் வீட்டுப் பெயரைச் சொல்லி அழைத்துள்ளனர். பின்னர் அவரை அழைத்துச் சென்றனர். இதன் பின்னர் அவர் எங்கே என்று தெரியாது' என்று குறிப்பிட்டார்.

இதேவேளை– எனது கணவனின் வீட்டுப் பெயரைச் சொல்லியே இராணுவத்தினரும் அவரை அழைப்பது வழக்கம் என்று குறிப்பிட்ட சாட்சி, சம்பவம் இடம்பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இராணுவப் புலனாய்வு அதிகாரியான துஷாரா எனது கணவர் தொடர்பில் ஊரில் வேறு நபர்களிடம் விசாரணை செய்துள்ளார் என்றும் தெரிவித்தார். குறித்த இராணுவ அதிகாரியே எனது கணவரைக் கடத்தியதாக, அவருக்கு நெருக்கமான ஊரில் உள்ள வேறு சிலர் தெரிவித்தனர். எனது வீட்டுக்கு அருகில் குறித்த அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வரும் இராணுவ முகாம் இருந்தது. இதனால் அவர்களே கடத்தியிருப்பார்கள் என்று சந்தேகிக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை–வைரமுத்து செல்லம்மா என்பவர் சாட்சியமளிக்கையில், 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி வீட்டுக்கு இராணுவச் சீருடையில் வந்த இராணுவத்தினர் எனது மகனைக் கேட்டுக் கேள்வியின்றி இழுத்துச் சென்றனர். அவர்கள் பின்னால் சென்றபோதும் எனது மகனை மீட்க முடியவில்லை. வாரிக்குட்டியூர் இராணுவத்தினரே எனது மகனை இவ்வாறு கொண்டு சென்றனர். இன்று வரையில் எனது மகன் வீடு திரும்பவில்லை என்று தெரிவித்தார்.

செட்டிகுளத்தைச் சேர்ந்த நடராஜா மகேந்திராஜா என்பவர் சாட்சியமளிக்கையில், 23 வயதான தனது மகனை 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் கொண்டு சென்றதாகத் தெரிவித்தார். அரசடிக்குளம் இராணுவத்தினரே அவரைக் கொண்டு சென்றதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை– வேறுபல சாட்சிகளும், வீட்டுக்கு வந்த இராணுவத்தினரே தமது உறவுகளைக் கொண்டு சென்றதாகவும் அதன் பின்னரே அவர்கள் காணாமற் போனதாகவும் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். (த-5)

## நோயாளிகளுக்கு நிதியுதவியளிப்பு

தென்மராட்சி,டிசெ.16
கைதடிப் பிரதேசத்தில் சிறுநீரகம் மற்றும் இருதய கோளாறு ஆகிய நோய்களினால் பாதிக்கப்பட்ட நான்கு பேருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்கப்பட்டன.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவு கழக டென்மார்க் கிளையினரால் வழங்கப்பட்ட நிதி நேற்றுமுன்தினம் கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. கழக உப தலைவர் வீ.சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான இருவருக்கும் இருதய கோளாறு ஏற்பட்ட இருவருக்கும் தலா 25ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை, மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-9)

# கடத்தியவர்கள் புளொட்டா? புலிகளா?

யாழ்ப்பாணம், டிசெ.16
பயங்கரவாதிகளே தனது சகோதரனைக் கடத்தியதாகச் சாட்சியமளித்த முஸ்லிம் நபர் ஒருவரிடம், புளொட் பயங்கரவாதிகளா? எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளா? கடத்திச் சென்றனர் என்று கேள்வியெழுப்பினார் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமர்வில் 8 முஸ்லிம்கள் சாட்சியமளித்தனர். இவர்கள் தமது உறவுகள் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவித்தனர். ஊர்காவல் படையில் இருந்த தமது உறவினர்களை, தமிழீழ விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றதாகவும், அவர்கள் இப்போது உயிருடன் இருப்பார்கள் என்று கருதவில்லை என்றும் குறிப்பிட்டனர். இவர்களில் சிலர் தமது உறவுகள் இறந்து விட்டமைக்கான இறப்புச் சான்றிதழையும் பெற்றுள்ளனர். எஞ்சியோர் நேற்றைய அமர்வில் இறப்புச் சான்றிதழ் பெறுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். (த-5)

## சாவகச்சேரியில் 3 தினங்கள் விஷேட டெங்குப் பரிசோதனை

தென்மராட்சி,டிசெ.16
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் விஷேட டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தவுள்ளனர்.

இன்று மந்துவில் பிரிவிலும், நாளை மட்டுவில் கிழக்குப் பிரிவிலும் நாளைமறுதினம், கைதடி நுணாவில் பிரிவிலும் விஷேட டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். சுகாதாரப் பகுதியினருடன் பொலிஸாரும் இணைந்து பரிசோதனையில் ஈடுபடவுள்ளதால் பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

மட்டுவில் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(த-9)

## மாயமாக மறையும் சைக்கிள்கள்



தென்மராட்சி, டிசெ.16
தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் மாயமாக மறையும் சைக்கிள்கள்

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாவலர் தின விழாவில் கலந்து கொண்ட மாணவனின் சைக்கிளும், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மருத்துவர் ச.அம்பிகைபாகனின் பாராட்டு விழா நிகழ்வில் மட்டுவிலைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிளுமே இனந் தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

நிகழ்வுகளைப் பார்ப்பதற்கான மண்டப வளாகத்தில் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிள்களே திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## மலக் கழிவு கொட்டுவதை உடனடியாகத் தடை செய்க

### பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.16
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நாவற்குழி மற்றும் சரசாலை ஆகிய பகுதிகளில் மலக் கழிவு கொட்டுவதைத் தடை செய்யுமாறு பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள தனியார் கழிவுறுஞ்சும் நிறுவனத்தினர் சேகரிக்கப்படும் கழிவுகளை மக்கள் குடியிருப்புக்களை அண்டிய தரவைப் பகுதிகளில் கொட்டி விட்டுச் செல்கின்றனர். இதனால் அந்தப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இதனால் இந்தப் பகுதிகளில் கழிவுறுஞ்சும் வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகளைக் கொட்டுவதற்குத் தடை விதிப்பதுடன் மிருசுவிலில் இயங்கும் சுத்திகரிப்பு நிலையத்துக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மக்கள் பிரதேச சபைத் தலைவரைக் கேட்டுள்ளனர். (த-9)

# தமிழ்த் தேசிய சபையை உடன் உருவாக்குங்கள்

## மன்னார் ஆயரிடம் பிரசைகள் குழு வலியுறுத்து

மன்னார், டிசெ.16
இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மக்களையும், தமிழகம், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் உட்பட உலகெல்லாம் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்களையும் ஒருங்கிணைத்து, அனைத்து தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன பிரசைகள் குழுக்கள். கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே பிரசைகள் குழுக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தன.



இந்தச் சந்திப்பு ஆண்டகையின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந் தது.

தமிழ் மக்களின் தேவைகளிலும் அபிலாசைகளிலுமே நீதிக்கும் சமத்துவத்துக்குமான அரசியல் தங்கியுள்ள நிலையில், அவர்கள் ஆணை வழங்கிய தலைமைகள் கூட்டுப்பொறுப்புகளில் தவறிழைத்துள்ளதையும், இத்தகைய தலைமைகள் மீது நம்பிக்கையீனங்களும், அரசியல் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள விரக்தியையும் சுட்டிக்காட்டியுள்ள பிரசைகள் குழுக்கள், பொருளாதார சமூக மேம்பாட்டில் மக்கள் நலிவுற்றுள்ளமை குறித்தும் ஆண்டகையிடம் கவலை தெரிவித்துள்ளன.

தமிழ் மக்களின் வாழ்வுரிமை, மரபுரிமை, அரசியல் உரிமை விவகாரங்களில் கரிசனை கொண்டு தமிழ்த் தேசிய சபையை உருவாக்குவதற்கு முன்னைய நாள்களில் ஆண்டகை எடுத்த முன்னாயத்த முயற்சிகளுக்கு வாழ்த்தும் ஆதரவும் தெரிவித்த பிரசைகள் குழுக்கள், இன்னும் கூடியளவு கவனமும் வேகமும் கொண்டு, இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மக்களையும், தமிழகம், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் உட்பட உலகெல்லாம் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்களையும் ஒருங்கிணைத்து, அனைத்து தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் தேசிய சபையை உருவாக்குமாறும் இராயப்பு ஜோசப் ஆண்டகையிடம் வேண்டுகோள் விடுத்தன.

வடக்கு மாகாணத்தில் சிவில் சமூக மனித உரிமை மேம்பாடுகளுக்காக வேலை செய்யும் ஏனைய அமைப்புகளையும் இனம் கண்டு, அவற்றுக்கென பொது ஆலோசனை மையம் ஒன்றை நிறுவி குழுக்களுக்கிடையில் பரஸ்பர உறவு, நம்பகத்தன்மை, புரிந்துணர்வைக் கட்டியெழுப்பி அவற்றை பலப்படுத்தி இணையக்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பிலும், சிவில் சமூக மனித உரிமை விடயங்களில் பங்குபற்றுநர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள், ஆபத்துகள், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வழிமுறைகள், அதற்கான பரிந்துரைகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பிரசைகள் குழுத்தலைவர் வணபிதா. செபமாலை அடிகள், வவுனியா மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் கி.தேவராசா, முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் பா.நவரட்ணம் ஆகியோரின் தலைமையில் பிரசைகள் குழுக்களின் மட்டுப்படுத்தப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ற-402)



# மக்களின் தீர்மானத்துக்கு நாங்கள் துணை நிற்போம்

## வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.16
ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பாக நாம் கூறமாட்டோம். ஆனாலும் மக்களாகிய நீங்கள் எடுத்துள்ள தீர்மானத்துக்கு நாம் என்றும் உறுதுணையாக நிற்போம் – என்று தெரிவித்துள்ளார் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம்.

ஒரு நீதியான அரசு வரவேண்டும் என்பதே 30 வருடங்கள் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தேவையாகவுள்ளது. ஆகவே நாங்கள் யாருக்கு வாக்களியுங்கள் என சொல்லமாட்டோம். ஆனால் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை நீங் கள் ஏற்கெனவே தீர்மானித்திருப்பீர்கள். அதற்கு நாம் துணையாகஇருப்போம்.– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சுகாதார அமைச்சரால் புதிய வேலர் சின்னக்குளத்தில் உள்ள மக்களுக்கு, வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இது தேர்தல் காலம் என்பதனால், நாங்கள் எமது ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டும். ஒரு வருடத்துக்கு முதல் மாகாண சபைத் தேர்தலில் வவுனியா மாத்திரமன்றி, வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் மிகவும் ஆர்வமாக வாக்களித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்தனர்.

எனவே உங்களது வாக்கை வேறு ஒருவர் பயன்படுத்தாத வகையில் நீங்கள் ஜனநாயக உரிமையை மாகாண சபை தேர்தலுக்கு வாக்களித்ததையும் விட கூடுதலாக வருகை தந்து வாக்களித்து பயன்படுத்த வேண்டும்.

"எதிர்வரும் 8ஆம் திகதி வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் தங்களது ஆதங்கத்தையும் தீர்ப்பையும் சொல்ல வேண்டும். தற்போது உள்ள சொற்ப அதிகாரத்தை கூட எங்களால் பயன்படுத்தமுடியவில்லை. செயற்படுத்துவதற்கு பல தடைகள் இருக்கின்றது. மாகாணசபை சிறப்பாக இயங்க நல்ல காலம் வர வேண்டும். அதனை மக்கள் வாக்குகளை அளித்து உருவாக்க வேண்டும்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-402)

# உதய கம்மன்பிலவுக்கு முதலமைச்சர் பதவி?

கொழும்பு, டிசெ.16
அரசிலிருந்து எதிரணிக்குத்தாவி மீண்டும் அரசு பக்கம் இணைந்துள்ள மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு அந்த மாகாண சபையின் முதலமைச்சர் பதவியைப் பெற்றுக் கொடுப்பது குறித்து அரசின் கவனம் திரும்பியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த மேல்மாகாண சபை தேர்தலின் போது உதய கம்மன்பில ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்டத்தின் குழுத் தலைவராக செயற்பட்டு வந்திருந்ததோடு அவர் அந்த மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை எதிர்பார்த்திருந்ததாகவும் அத்தினங்களில் தகவல்கள் பரவியிருந்தன.



எவ்வாறான போதிலும், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தீர்மானத்துக்கு அமைய கடந்த வாரத்தில் உதய கம்மன்பில பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது ஒத்துழைப்பைத் தெரிவித்திருந்தார். ஆனால் கடந்த 11ஆம் திகதி அவர் மீளவும் அரசுடன் இணைந்து கொண்டார்.

இத்தகையதொரு பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் அவருக்கு மேல் மாகாண சபையின் முதலமைச்சர் பதவி வழங்கப்படுவதற்கு பெரும்பாலும் இடமிருப்பதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ற-22)

# தேர்தல் பரப்புரையில் மஹிந்த புதிய உத்தி

## வீதியில் இறங்கி மக்களைச் சந்திக்கிறார்

கொழும்பு, டிசெ.16
ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்கு இடையில் நகரங்கள் தோறும் சென்று பொதுமக்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ தீர்மானித்துள்ளர்.



இவ்விதம் அனைத்து நகரங்களுக்கும் செல்லும் பரப்புரைச் செயற் பாடுகள் இன்று முதல் ஆரம் பிக்கப்படவுள்ளது. நாடு முழு வதிலுமுள்ள பிரதான நகரங் களில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய பரப்புரைப் பேரணி களுக்கு மேலதிகமாக இவ் விதம் வீதியில் இறங்கி மக் களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடி அவர்கள் முகம் கொடுத்துள்ள பிரச் சினைகள், சிக்கல்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கும் அவர் தீர்மானித்துள்ளார் என்று அரசின் உள்ளகத் தகவல் மார்க் கங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலொன்றின் போது இவ்விதம் பிரதான வேட்பாளரொருவர் வீதியில் இறங்கி பொதுமக்களைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். (ற-22)

# தேர்தல் முடியும் வரை நாடாளுமன்றுக்கு விடுமுறை

கொழும்பு, டிசெ.16
ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதன் காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி வரையிலும் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டாதிருப்பதற்கு கட்சிகளின் தலைவர்கள் இணக்கமொன்றுக்கு வந்துள்ளனர்.

அனைத்து அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் அனைவரும் தேர்தல் கூட்டங்களில் பங்களிப்புச் செய்வதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுறும் வரையிலும் நாடாளுமன்றத்தைக் கூட்டாதிருப்பதற்கு கட்சிகளின் தலைவர்கள் தீர்மானமொன்றை எடுத்துள்ளனர். (ற-22)

செய்திகள்

# ஜனாதிபதியின் பரப்புரைகளில் சிறைக் கைதிகள்

## குற்றஞ்சாட்டுகின்றது கபே





கொழும்பு, டிசெ.16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில், சிறைக் கைதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

மாத்தறை, கம்புறுபிட்டியவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்துக்கான, மேடை நிர்மாணம் மற்றும் அலங்கார பணிகளுக்காக காலி சிறைச்சாலையைச் சேர்ந்த 44 சிறைக் கைதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுக்கு நீல நிறக் காற்சட்டை வழங்கப்பட்டிருந்தது என்றும் அந்த அமைப்பு தெரி வித்தது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, மாத்தறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதியாவார். அவர், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரே.

இந்தநிலையில், கம்புறுபிட்டியவில் இடம்பெற்ற ஜனாதிபதியின் பரப்புரைக் கூட்டத்துக்காக சிறைச்சாலையின் வாத்தியக் குழு, சிறைச்சாலை பஸ், சிறைச் சாலைக்குச் சொந்தமான கொடிக் கம்பங்கள் மற்றும் அலங்காரப் பொருள்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள் ளன" –என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# 25 கோடி ரூபாவுக்கு விலை பேசினார்கள்

## எதிரணிக்கு மாறிய குணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

என்னை 25 கோடி ரூபாவுக்கு விலை பேசினார்கள். அத்துடன் தனது தந்தைக்கு ஆதரவளித்து அரசுடன் இணைந்து கொண்டால் நான் விரும்புவது எல்லாவற்றையும் தருவதாக என்னிடம் கூறினார்கள் – இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.டி.எஸ். குண வர்தன.

திருகோணமலை 4 ஆம் கட்டை பகுதியில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நான் அரசை விட்டு வெளியேறிய பின்னர் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் என்னுடன் இரண்டுமுறை தொடர்பு கொண்டு பேசினார். 25 கோடி ரூபா தருவதாகவும் எனதுமுடிவைமாற்றிக்கொள்ளுமாறும் கேட்டார்கள். "உங்கள் முடிவை மாற்றிக்கொள்ளுங்கள். ஜனாதிபதி மிகுந்த மன வேதனை அடைந்துள்ளார். மீண்டும் நீங்கள் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். அதற்குப் பதிலாக நீங்கள் எதனைக் கேட்டாலும் தரத் தயாராக இருக்கின்றோம்– என்று கூறினார்கள்.

நான் கூறினேன், "எனக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று நான்அரசை விட்டு விலகவில்லை. இவை எல்லாவற்றிற்கும் காரணம் ஒருவர். அதனைப் பற்றி ஜனாதிபதியுடன் கதைத்துள்ளேன். ஆனால் அதனை அவர் சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை. அதன் பின்னரும் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு அரசில் இருக்க முடியாது. அதனால் வெளி யேறினேன். இதனை ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" என்றுகூறினேன்.நிச்சயமாக ஜனாதிபதிக்கு கூறமாட்டார்கள். காரணம் இப்போது குடும்பத்திற்குள் பிரச்சினை தொடங்கியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ அரை மணி நேரம் என்னுடன் கதைத்தார். "ஏன் இப்படிச் செய்தீர்கள்? ஏன் என்னுடன் இது பற்றிக் கதைக்கவில்லை?" என்றார். நான் கூறினேன். "நீங்கள் யார்? ஏன் நான் உங்களுடன் கதைக்க வேண்டும்?" என்று. அதற்கு அவர் "நான் ஜனாதிபதியின் தம்பி. பாதுகாப்பு செயலாளர். கட்சியின் பழைய உறுப்பினர்களை நன்கு அறிந்தவன்" என்று கூறினார். "சரி அப்படியானால் அதற்கு நான் என்ன செய்ய?" என்று நான் கேட்டேன். அதற்கு அவர் "இல்லை. கொஞ்சம் யோசியுங்கள்" என்றார். அதற்கு நான் "இனிமேல் யோசிக்க எதுவுமில்லை. உங்களுக்குத் தேவையென்றால் என்னைக் கொன்று விடுங்கள். நான் மனிதத் தன்மைக்கு மட்டுமே கீழ்ப்படிவேன். அழுக்குள்ள இடத்துக்கு மீண்டும் வருவதற்கு நான் விரும்பவில்லை" என்று கூறினேன்.

அது மட்டுமல்ல கோத்தபாயவும் ஜனாதிபதி செயலக அதிகாரியும் மைத்திரிபால சிறிசேனவுடன் 3 மணி நேரம் கதைத்தார்கள். கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியின் நாடாளுமன்ற செயலாளர் குமாரசிறி ஹெட்டி கொட மூன்று தடவை என்னுடன் கதைத்தார். அவர் எனக்கும் ஜனாதிபதிக்கும் மிக நெருங்கிய நண்பர். எப்போதும் அவரும் ஜனாதிபதியும் நானும் ஒன்றாகத்தான் உணவருந்துவோம். அவர் கூறினார், "குணே!, என்னை உங்களுடன் கதைக்குமாறு ஜனாதிபதி கூறினார். அவர் மிகவும் கவலைப்படுகின்றார். மீண்டும் நீங்கள் அவருடன் வந்து சேருங்கள். அவருக்கு உங்கள் மீது எந்தக் கோபமும் இல்லை. இதுவரை அவர் உங்களைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறைவாகப் பேசவில்லை. நீங்கள் எந்த நேரமும் அலரிமாளிகைக்கு வர முடியும் உங்கள் முடிவை மாற்றுங்கள்" என்றார். அதற்கு நான் கூறினேன். "மீண்டும் அந்த அழுக்குள்ள இடத்திற்கு வர நான் விரும்பவில்லை" என்று.

நண்பர்களே இப்போது நம்முன்னுள்ள மிகப்பெரிய கேள்வி நாட்டைப் பாதுகாப்பதா? அல்லது தனிப்பட்ட ஒரு குடும்பத்தைப் பாதுகாப்பதா? என்பதே. தீர்மானமெடுக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது என்று எம்.கே.டி.எஸ். குணவர்தன அங்கு மேலும் தெரிவித்தார். (ற)

# சீனாவிலிருந்து 800 பஸ்கள் இறக்குமதி

கொழும்பு, டிசெ.16

சீனாவில் இருந்து 800 பஸ்கள் இந்த மாத இறுதியில் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

கிராமிய போக்குவரத்துச் சேவைகள் மற்றும் நகரங்களுக்கு இடையே சேவைகளுக்காக இந்த பஸ்களைப் பயன் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்துச் சபையின் பிரதித் தலைவர் எல்.ஏ.விமலரத்ன தெரிவித்துள்ளார்.

சீனாவில் முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 200 பஸ்களில் இதுரை ஆயிரத்து 600மட்டுமேநாட்டுக்குள்கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)






# தேர்தல் வன்முறை 115 முறைப்பாடுகள்

## தேர்தல் செயலகம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 115 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 20 முறைப்பாடுகள் பாரதூரமானவையாகும். ஏனைய 95 முறைப்பாடுகளும் சிறு சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளாகும்.

கண்டி மாவட்டத்தில் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான ஏழு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அனுராதபுரம் மாவட்டத்தில் மூன்று சம்பவங்களும், புத்தளம் மாவட்டத்தில் மூன்று சம்பவங்களும்,குருணாகல் மாவட்டத்தில் இரண்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை,பொலனறுவை ஆகிய பிரதேசங்களில் தலா ஒரு பாரதூரமான சம்பவம் குறித்த முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (ற)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இரு வாரத்தில்

கொழும்பு, டிசெ.16

கடந்தஓகஸ்ட்மாதம்நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர் தரப்பரீட்சைப்பெறுபேறுகள்எதிர் வரும் இரு வாரங்களுக் குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள்திணைக்களம்குறிப்பிட்டுள்ளது. பெறுபேறுகளைப் பட்டியலிடும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர் தரப் பரீட்சையில் இரண்டு இலட்சத்து 34 ஆயிரத்து 197 பாடசாலை பரீட்சார்த்திகளும், 62 ஆயிரத்து 134 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர். அதேவேளை, நடைபெற்று வருகின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் முறைகேடு எதுவும் இடம்பெற்றதாக இதுவரை எவ்வித தகவ லும் பதிவாகவில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாய கம் கூறியுள்ளார். (ற)

# தொடர்ச்சிகள்

## கணவருடன்

வீரபுரத்தைச் சேர்ந்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனது கணவரை 1990 ஆம் ஆண்டு இராணுவத்தினர் கைது செய்தனர். அவருடன் 45 பேர் வரையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் உறுப்பத்தான் வீதியில் ரயர் போட்டுக் கொழுத்தி எரித்தனர். எனது கணவருக்கு எந்த இயக்கத்துடனும் தொடர்பு இல்லை. ஆனால் இராணுவத்தினர் கொலை செய்தனர்.

இதன் பின்னர் குவைத் சென்று உழைத்தேன். இந்தவேளையில், 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தனது இரு மகன்கள், வயலுக்குச் சென்ற இடத்தில் காணாமற் போனார்கள். அவர்களை யார் கொண்டு சென்றார்கள் என்று தெரியாது"– என்று தெரிவித்தார்.

இறுதிப் போரின்போது ஷெல் தாக்குதலால் தனது இன்னொரு மகனுக்கு இரண்டு கண்களும் தெரியாது எனவும் அவர் சாட்சியத்தில் தெரிவித்தார்.

(ற–5)

## தமிழர்கள்

"2005 ஆம் ஆண்டு தேர்தலைப் புறக்கணித்தது போன்ற ஒரு முடிவுக்கு தமிழர்களைத் தள்ளிவிட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளால் ஒரு சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்தத் தேர்தல் தமிழர்களுடன் தொடர்புடையது அல்ல என்றும், இந்த தேர்தல் மூலம், தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வரப்போவதில்லை என்றும், அவர்களால் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தவறானது கருத்து. இந்த தேர்தல் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடனும் தொடர்புடையது. இந்தத் தேர்தல் எல்லோருக்கும் அரசியல் மற்றும் சமூக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ற–5)

## ஐ.தே.க.

ராகலை மாவட்டத்தில் போட்டியிட்ட திஸ்ஸகுட்டியாராச்சி 18 ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றார். (ற–23)

## கதவை கொத்தி

"எனக்கு அப்போது 7 வயது. இரவு 8 மணிக்கு வீட்டுக்கு இராணுவ உடையுடன், துப்பாக்கி கொண்டு வந்த இராணுவத்தினரே அப்பாவைக் கொண்டு சென்றனர். வெளியில் நின்ற ட்ரக்கில் ஏற்றிச் சென்றனர்"– என்று 13 வயதான டிலக்ஷன் சாட்சியமளித்தார்.

மெனிக்பார்மைச் சேர்ந்த, டிலக்ஷன் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கையில், "2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இரவு வீட்டுக் கதவு தட்டும் சத்தம் கேட்டது. நாங்கள் கதவைத் திறக்கவில்லை. அப்போது கோடாரியால் வீட்டுக் கதவைக் கொத்தி விட்டு, வீட்டுக்குள் 3 இராணுவத்தினர் வரையில் உள் நுழைந்தனர்.

அவர்கள் அப்பாவைக் கொண்டு சென்றனர். எங்களை வீட்டுக்குள் வைத்துப் பூட்டி விட்டே அப்பாவைக் கொண்டு சென்றதால் எங்களால் பின்தொடர முடியவில்லை"– என்று கூறினார்.

இதன் போது ஆணைக்குழுவினர், வந்தவர்கள் என்ன மொழியில் பேசினர் என்று கேட்டனர். சிங்கள மொழியில் அவர்கள் கதைத்தனர் என்று சிறுவன் சாட்சியத்தில் குறிப்பிட்டான். இதன்போது சிறுவனுடன் வந்திருந்த அத்தை, ஆண்டியகுளம் இராணுவத்தினர் சுற்றிவளைப்பில் தனது தம்பியை (குறித்த சிறுவனின் தந்தையை) கைது செய்து பிணையில் விட்டிருந்தனர். அவர் ஒவ்வொரு மாதமும் இராணுவ முகாமுக்குச் சென்று கையெழுத்திட்டு வந்தார். இவ்வாறு இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட பின்னர், கையெழுத்திடச் செல்லாதது தொடர்பில் இராணுவத்தினர் வந்து எதனையும் கேட்கவில்லை"– என்று குறிப்பிட்டார்.

(ற–5)

## இராணுவத்துக்கு

அவர்களில் சிலர் இரண்டு முறைப்பாடுகள் தொடர்பிலும் சாட்சியம் முன்வைத்தனர்.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியிலேயே பெருமளவானோர் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்டது. வயது வேறுபாடின்றி இந்தக் காலப் பகுதியில் பலர் காணாமற் போயுள்ளனர். இராணுவத்தினரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காணாமற்போனதாக 23 பேர் தெரிவித்தனர். தமது உறவுகள் காணாமற்போனமைக்கு காரணம் இராணுவத்தினர்தான் என்பதை நேரடியாகக் குறிப்பிட்டனர். அத்துடன் இராணுவ அதிகாரிகளின் பெயர்கள், முகாம்களின் பெயர்கள் என்பவற்றையும் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டு இறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொண்ட 3 பேரும் சாட்சியமளித்தனர். காணாமற்போனமைக்கு யார் காரணம் என்று தெரியாது என 8 பேர் குறிப்பிட்டனர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக 2 சாட்சியங்கள் மாத்திரமே நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

இனக் கலவரத்தில் குடும்பத்தைக் காணவில்லை

ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்த ஒருவர், 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி மதவாச்சி பஸ் நிலையத்தில் வைத்து தனது அப்பா, அம்மா, சகோதரர்கள் உள்ளிட்ட 5 பேர் காணாமற் போனதாகத் தெரிவித்தார். பஸ்ஸில் வந்து கொண்டிருந்த தமது உறவினர்களை, மதவாச்சியில் இராணுவத்தினர் இறக்கியதாகவும், அவர்களுடன் 48 பேர் வரையில் அவ்வாறு இறக்கப்பட்டனர் என்றும் அதன் பின்னர் அவர்கள் காணாமற்போனதாகவும் குறிப்பிட்டார்.

(ற–5)

## மஹிந்த

மகாவலி அபிவிருத்தித் துறை இல்லாத, நீர்ப்பாசன அமைச்சு என்னிடம் தரப்பட்டது.

அதுபற்றி நான் அப்போது கேட்டபோது, அதனை மைத்திரிபால சிறிசேன தனக்குத் தர வேண்டும் என்று கேட்டதாக எனக்குக் கூறப்பட்டது. ஆனால் எப்போதுமே மகாவலி அபிவிருத்தி அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் தான் இருந்து வந்துள்ளது. அந்த இடத்தில் எனக்கு அநீதி இழைக்கப்பட்டது

மைத்திரிபால சிறிசேனவும், நானும் ஒன்றாகவே 1989ம் ஆண்டு, முதல் முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவானோம். " – என்று அவர் பரப்புரைக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

(ற–5)

## மைத்திரிக்கு

திருகோணமலை, சேருவில தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட பதவிசிறிபுர பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப் பினர்களான மானெல் கருணாநாயக்க மற்றும் எச்.பி.தர்மகீர்த்தி ஆகிய இருவரும் பொது எதிரணியில் நேற்று முன்தினம் இணைந்து கொண்டுள்ளனர்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தேசிய சூழல் அமைப்பாளர்களின் ஒன்றியம் பொது எதிரணி வேட்பாளரை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சாதாரண சமூகமொன்று தொடர்பிலான அனைத்துப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் என்று நேற்றுத் தெரிவித்தது. முக்கிய நான்கு கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக, அவ்வமைப்பின் இணைப்பாளர் தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

(ற–5)

## அச்சுறுத்தலாலேயே வெளிநாடு பயணம்

### ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து ஆலோசனைக்கு அமையவே தாமும் தாயாரும் வெளிநாடு சென்றதாக மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)


**வீடு வாடகைக்கு உண்டு**

**கோண்டாவில் மேற்கு உப்புமடச்சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு**

**தொடர்பு : 077 598 7500**
**077 295 9484**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

60ஆவது பிறந்தநாள் வாழ்த்து HAPPY BIRTHDAY



**கதிரவேலு சச்சிதானந்தன்**

இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை தனது 60ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் கதிரவேலு சச்சிதானந்தன் அவர்களை வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல ஆண்டு சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என மனதார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
பாலகிருஷ்ணன்-சங்காவதி, செல்வராசா-ரவீந்திராதேவி, விவேகானந்தன்-தவமணி, பரமானந்தம்-சாந்தி, வேலும் மயிலும்-இராசசிலோசனா, மகிழ்ராஜன்-ராதை, முகுந்தன்-வேல்சுலோஜினி, பேரப்பிள்ளைகள்: மதன்ராஜ், மதுமிதா, விஷ்ணுஜன், மகிஷா, மதுஷிகா, விනுஜன்.

**தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போதுவாக்களிப்பதற்கு தேசிய அடையாளஅட்டை அவசியம் என்பதை நீங்கள் அறிவீர்களா?**

- உங்களதுதேசியஅடையாளஅட்டை இல்லைஎனில்.
- உங்களதுதேசியஅடையாளஅட்டைதெளிவில்லைஎனில்.
- உரியஆவணங்கள் இல்லாமையால் அடையாளஅட்டையைப் பெறமுடியவில்லைஎனில்.

**நீங்கள் புதியஅடையாளஅட்டைஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு**

- உங்களதுபிறப்புச் சான்றிதழ் அல்லது
- பிறப்புச் சான்றிதழ் இல்லாதவிடத்துஅண்ணளவானவயதைஉறுதிப்படுத்தக் கூடிய ஜாதகக் குறிப்புஅல்லது
- பாடசாலைவிலகல் சான்றிதழ் அல்லது
- திருமணப் பதிவுச் சான்றிதழ் அல்லது
- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
- தங்களதுவயதுதொடர்பில் உறவினர் ஒருவரால் வழங்கப்படும் சத்தியக் கடதாசி ஒன்றைஎடுத்துவரவும்
- உங்களதுபெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதற்குரியஆவணங்களை கொண்டு வரவும்.

**உங்களதுபிறப்புச் சான்றிதழின் பிரதிஒன்று இல்லைஎனில் அதைபெற்றுக் கொள்வதற்குத் தேவையானஒத்துழைப்பைவழங்கநாம் தயாராகஉள்ளோம்.**

**2014 டிசம்பர் 17**

**காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

**கோப்பாய் பிரதேச செயலகம்**
**உடுவில் பிரதேச செயலகம்**
**சாவகச்சேரி பிரதேச செயலகம்**
**தெல்லிப்பளை பிரதேச செயலகம்**

**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கானநிலையம் (CMEV)ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் திணைக்களம் ஆகியன இணைந்துமேற்கொள்ளும் நடமாடும் சேவையாகும்.**

**அமுல்படுத்தும் பங்காளர்** AFRIEL

# செய்திகள்




## கோஹ்லியா? டோனியா?

அடிலெய்ட் டெஸ்டில் துணிச்சலாக போராடிய இந்தியாவின் விராட் கோஹ்லிக்கு ஆதரவு பெருகுகிறது. டெஸ்ட் போட்டிகளில் இவரையே முழுநேர அணித் தலைவராக நியமிக்க வேண்டுமென ஆஸ்திரேலியாவின் இயன் சப்பல் உள்ளிட்ட பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. டோனி காயத்தால் அவதிப்பட்டதால் அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் விராட் கோஹ்லி தலைமையில் இந்தியா களமிறங்கியது. இதில் வெற்றி நழுவினாலும் கடைசி வரை போராடியது. இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்தார் கோஹ்லி.

இச்சதங்கள் இவரது துணிச்சலான செயல்பாட்டுக்கு உதாரணமாக அமைந்தன. அறிமுக டெஸ்டில் அசத்திய இவரே அணித் தலைவராக தொடர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து இயன் சப்பல் கூறியது: அடிலெய்ட் டெஸ்டில் கோஹ்லியின் செயல்பாடு சிறப்பாக இருந்தது. இந்திய டெஸ்ட் அணியின் முழுநேர தலைவராக இவரை நியமிக்க இதுதான் சரியான தருணம். டோனியின் தலைமைப் பொறுப்பு மீது எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், தலைவர் பதவிக்கு கோஹ்லியை மாற்ற தற்போது சிறப்பான நேரம் அமைந்துள்ளது.

முதல் இன்னிங்ஸில் தனது தலைக் கவசத்தில் ஜோன்சன் வீசிய 'பவுன்சர்' தாக்கிய பின்பும் துணிச்சலாக ஆடினார். இதன் மூலம் எதைப் பார்த்தும் அஞ்ச மாட்டோம் என்ற பலமான செய்தியை எதிரணிக்கு அனுப்பினார். கடந்த முறை போல அல்லாமல், ஆஸ்திரேலிய மண்ணில் திறமையுடன் விளையாடினார். போட்டியின் நான்காவது நாளில் எதிரணி வீரர்களுடன் வார்த்தைப் போரில் ஈடுபட்டார். இது ஒன்றுதான், இவரின் தலைவர் பதவிக்கு இடையூறாக உள்ளது. ஏனெனில், ஒரு அணியை வழி நடத்துபவர் அவரின் கடமையிலிருந்து தவறக்கூடாது. களத்தில் ஆஸ்திரேலிய வீரர்களுடன் மோதியதைப் பார்த்த போது, இவரால் அமைதியாக இருக்க முடியாதோ என்ற சந்தேகத்தை எழுப்பியது–என்றார்.

இந்திய அணி முன்னாள் தலைவர் கவாஸ்கர் கூறுகையில்–:

அடிலெய்ட் டெஸ்டில் இந்திய அணி வீரர் கோஹ்லியின் செயற்பாட்டைப் பாராட்ட வேண்டும். இப்போட்டி முழுவதும் இவர் என் மனதை கவர்ந்தார். அதேநேரம், டோனியின் கடைசி கட்ட நிறைவுத் திறனை இப்போட்டியில் இழந்துவிட்டோம். இவர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை எப்படி உயர்த்த வேண்டும் என நன்கு அறிந்து வைத்திருப்பார். டோனி விளையாடியிருந்தால் போட்டியின் முடிவில் மாற்றம் ஏற்பட்டிருக்கும்,"– என்றார்.

எது எப்படியோ இந்திய அணிக்கு தற்பொழுது இரண்டு சிறந்த தலைவர்கள்கிடைத்துள்ளனர். (த–ரி)

## சொந்த மண்ணில் இன்று விடைபெறும் மைந்தர்கள்

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரில் ஏற்கனவே நிறைவுக்கு வந்த ஆறு ஆட்டங்களில் நான்கில் இலங்கையணி வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளதால் இன்று இடம்பெறும் இறுதி ஆட்டம் சம்பிரதாயமான ஆட்டமாக அமைந்தபோதிலும் இந்த ஆட்டம் இலங்கைத் துடுப்பாட்ட வரலாற்றில் முக்கியம் பெற்ற ஒரு ஆட்டமாக அமைந்துள்ளது.

இதுவரை பல ஜாம்பவான்கள் இலங்கைத் துடுப்பாட்ட அணியில் இடம்பெற்று ஓய்வுபெற்றிருந்தாலும் அந்த வரிசையில் சங்கா, மஹேல ஆகியோர் மிகவும் முக்கியம் பெற்றவர்களாக உள்ளனர்.

அசாத்திய இணைப்பாட்டத் திறமையும் தகர்க்க முடியாத சாதனைகள் பலவற்றுக்கும் சொந்தக்காரர்களான இவர்கள் எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடரோடு ஓய்வினை அறிவித்துள்ளதால் தமது சொந்த மண்ணில் இவர்கள் இறுதியாக ஆடும் போட்டி கொழும்பு பிரேமதாச மைதானத்தில் இன்று இடம் பெறுகின்றது. இதனால் இவர்களை வழியனுப்பி வைக்க இன்று மைதானம் முழுவதும் கோலாகலமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இதுவரை பல உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணியை அழைத்துச் சென்ற இவர்கள் இறுதியாக இடம்பெற்ற 20/20 உலகக்கிண்ணத்தை வென்று இலங்கைக்குப் பெருமை சேர்த்தார்கள். மிகவும் நெருங்கிய நண்பர்களான சங்கா மற்றும் மஹேல தற்போதுள்ள இலங்கையணியின் நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் ஆலோசகர்களாகவும் முன்னணி வீரர்களாகவும் அமைந்துள்ளனர்.

பல போட்டிகளில் ஒன்றாகப் பயணித்த சங்கா மற்றும் மஹேல தமது ஓய்வை ஒரே தொடரில் ஒரே நாளில் அறிவித்துள்ளமை இரசிகர்களை மட்டுமல்ல இலங்கை கிரிக்கெட் சபையையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இவர்களின் ஓய்வுக்குப் பின்னர் இவர்களுக்கு நிகரான திறைமையுள்ள வீரர்களை இனங்காண்பதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கு பல வருடங்கள் ஆகும் என்பதில் சந்தேகம் இல்லை.

டில்சான் உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் தனது ஓய்வை அறிவித்திருந்த போதிலும் இதுவரை உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (த–ரி)






## வாய்ச் சண்டைக்கு அபராதம்

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டியில் வாக்குவாதத்தில் ஈடுபட்ட வோர்னர், தவான், கோஹ்லிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்ட்டில் நடந்தது. இதன் 4ஆவது நாள் ஆட்டத்தின்போது வீரர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது.

வருண் ஆரோனின் பந்தில் வோர்னர் ஆட்டமிழந்தபோது அது தவறான பந்து என்று அறிவிக்கப்பட்டது. அப்போது வோர்னருக்கும், தவானுக்கும் இடையே ஆடுகளத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேபோல மற்றொரு சம்பவத்தில் ஆஸ்திரேலிய வீரர் சுமித்துடன் தற்காலிக அணித் தலைவர் விராட் கோஹ்லி மோதலில் ஈடுபட்டார். எல்.பி.டபிள்யூ முறையீடு தொடர்பாக அவரை தடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இந்த 3 வீரர்களும் சர்வதேச கிரிக்கெட் சபையின் நடத்தை விதியை மீறியதாக, லெவல் 1 விதி 201.8 இன் கீழ் அவர்கள் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.அதனால் இந்த 3 பேருக்கும் அபராதம் விதித்து ஐ.சி.சி. நடவடிக்கையை எடுத்துள்ளது.

வோர்னருக்கு 15 சதவீதமும், விராட் கோஹ்லி, தவானுக்கு தலா 30 சதவீதமும் போட்டி கட்டணத்தில் இருந்து அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (த)

## ஆஸி. பயணத்தைக் கைவிடுமா இந்தியா?

சிட்னியில் தீவிரவாதிகள், பொதுமக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சம்பவத்தையடுத்து, ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிட்னியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் வாடிக்கையாளர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள மர்ம நபர்கள், விடுதியின் ஜன்னல் கண்ணாடி வழியாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடியைக் காண்பித்தனர். அதில் வெள்ளை நிறத்தில் அரபு மொழியால் எழுதப்பட்டுள்ளது. அதனால் இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.


ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ள ஆஸ்திரேலியாவில் எப்போது எங்கு தாக்குதல் நடத்தப்படும் என்ற நிச்சயம் இல்லாத சூழ்நிலை நிலவுவதால், இந்திய அணி, தாயகம் திரும்ப வேண்டும் என்று கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வீரர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு போட்டித் தொடரை நிறுத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபையிடம் பல ரசிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சஞ்செய் படேல் கூறுகையில், ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைமை அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம். வீரர்களின் பாதுகாப்புத்தான் பிரதானமானது. வீரர்கள் தற்போது பிரிஸ்பேனில் உள்ளனர். இந்திய கிரிக்கெட் அணியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் பாதுகாப்புக்குக் கூடுதல் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபட்டுள்ளதாக ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை எங்களுக்கு தெரிவித்துள்ளது. ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் ஏற்பாடுகளால் நாங்கள் திருப்தி அடைந்துள்ளோம். என்றார். (த)

# அபார வெற்றியுடன் முன்னிலையில் பாக்.



பாகிஸ்தான் மற்றும் நியூஸி லாந்து அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் சார் ஜாவில் இடம்பெற்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதல் இரு ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஒரு ஆட் டத்தில் வெற்றிபெற்று தொடர் சம நிலையில் இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முத லில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ஹபீஸ் மற்றும் செஷாட் அணிக்கு சிறந்த தொடக் கத்தை அமைத்துக் கொடுக்க பாகிஸ்தான் ஆரம்பம் முதலே அதிரடியைக் கையிலெடுத்தது. ஹபீஸ் (33) ஓட்டங்களுடன் வெளியேற மறுமுனையில் ஓட்டங்களைக் குவித்துக் கொண் டிருந்த செஷாட்டிற்கு அடுத்த டுத்து வந்த யுனிஸ்கான் மற் றும் ஷபிக் சிறந்த ஒத்துழைப் பினைக் கொடுத்தனர். யுனிஸ கான் (35), ஷபிக் (23) என வெளியேற 37 பந்துப்பரிமாற் றங்களில் 3 இலக்குகள் இழப் புக்கு அணி 210 ஓட்டங்களைக் குவித் திருந்தது. தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்ட செஷாட் சதமடித்து வெளியேற அடுத்து வந்த அப்ரிடி 26 பந்துகளில் 55 ஓட்டங் களைக் குவித்து அசத்த பாகிஸ் தான் அணி 50 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் 7 இலக்கு கள் இழப்புக்கு 364 ஓட்டங் களைப் பெற்றது. அதிக பட்சமாக செஷாட் 113 ஓட்டங்க ளையும் அப்ரிடி 55 ஓட்டங் களையும் சொகைல் 39 ஓட்டங் களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து சார் பாக ஹன்றி 3 இலக்குகளையும் மக்கெல்நாதன், அண்டர்சன், மக்கலம் ஆகியோர் தலா 1 இலக் கையும் கைப்பற்றினர்.

365 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இமாலய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரர் கள் சிறந்த தொடக்கத்தைக் கொடுக்கத் தவறினர். டேவ்சிச் (0), கப்ரில் (12) என அடுத்த டுத்து வெளியேற 5 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது 2 இலக்குகளை இழந்து தவித்தது. மத்திய வரிசை வீரர் களான வில்லியம்சன் (46), ரெய் லர் (31), லாதம் (34) றோஞ்சி (41) என சற்று நிதா னமாக ஓட் டங்களைக் குவித்து சற்று கௌர வமான நிலைக்கு அழைத்துச் சென்றாலும் தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் நிலைக்கா மல் வெளி யேற நியூஸிலாந்து அணி 37.2 பந்துப் பரிமாற்றங் கள் நிறைவில் சகல இலக்குக ளையும் இழந்து 217 ஓட்டங் களை மட்டுமே பெற்றது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் சார் பாக சொகைல் மற்றும் அப்ரிடி ஆகியோர் தலா 3 இலக்கு களை யும் இர்பான் 2 இலக்கு களையும் நிஜாஸ்மற்றும்செஷாட் ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றி னர். ஆட்ட நாயகனாக செஷாட் தெரிவானார்.

5 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னி லையில் உள்ளது. இவ்விரு அணி களுக்கும் இடையிலான நான் காவது ஒரு நாள் போட்டி நாளை யதினம் அபுதாபியில் நடை பெறவுள்ளது. (த–ரி)

## ஹியுக்ஸ் அண்ணன் 63 இல் ஆட்டமிழப்பு



பிலிப் ஹியுக்ஸ் மறைவுக்கு பின் கிரிக்கெட்டுக்குத் திரும் பிய அவரது அண்ணன் ஜேசன் ஹியுக்ஸ் 63 ஓட்டங்கள் எடுத் தது அபூர்வமாக இருந்தது.

சிட்னியில் நடந்த உள்ளூர்ப் போட்டியில், சீன் அபோட் வீசிய 'பவுன்சர்' பந்து தாக்கியதில் காயமடைந்த, இளம் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியுக்ஸ் (25), சிகிச்சை பய னின்றி உயிரிழந்தார். இந்தச் சோகத்தில் இருந்து மீண்ட இவ ரது அண்ணன் ஜேசன் ஹியுக்ஸ் இரண்டு வாரங்களுக்குப் பின் முதல் முறையாகக் களமிறங்கினார். சிட்னி அணிக்கு எதிரான முதல் தர போட்டியில் மாஸ்மேன் அணிக்காக விளை யாடினார். இவர் 63 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இது, பிலிப் ஹியுக்ஸ் தனது கடைசிப் போட்டியில் எடுத்த அதே ஓட்டங்கள் என்பதால், ஜேசன் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார். இதற்கிடையே பிலிப் ஹியுக்ஸிற்கு இரங்கல் தெரிவித்த ஆஸ்திரேலிய மக் களுக்கு அவரது குடும்பத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர். இது குறித்து ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு ஹியுக்ஸ் குடும்பத்தினர் அனுப்பிய செய்தியில், பிலிப் ஹியுக்ஸ் மறைவால் ஏற்பட்ட துயரத்தை விவ ரிக்க வார்த்தைகள் இல்லை. இக்கட்டான நேரத்தில் மக்கள் கொடுத்த அன்பும், ஆதரவும் எங்களுக்கு ஓரளவு பலம் கொடுத்தது. இதற்காக ஆஸ்திரேலிய மக்களுக்கு நன்றி," என தெரிவிக்கப்பட்டது. (த)



## கோஹ்லி, முரளி முன்னேற்றம்

சர்வதேச டெஸ்ட் துடுப்பாட்ட தர வரிசையில் இந்திய வீரர்க ளான விராட் கோஹ்லி, முரளி விஜய் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தி யாவின் தற்காலிக அணித் தலைவராகச் செயற்பட்ட விராட் கோஹ்லி இரண்டு இன்னிங்ஸி லும் சதம் அடித்தார். இந்த இரண்டு சதங்கள் மூலம் அவர் டெஸ்ட் துடுப் பாட்டக்காரர்கள் தர வரிசையில் 11 இடங்கள் முன்னேறி 16 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அதேபோல் ஆஸ்திரேலிய வீரர் வார்னர் இரண்டு இன்னிங்ஸி லும் சதம் அடித்ததால் இரண்டு இடங்கள் முன்னேறி 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இரண்டு இன்னிங்ஸிலும் அரைச் சதம் எடுத்த முரளி விஜய் 8 இடங்கள் முன்னேறி 28 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

முதல் இன்னிங்ஸில் சதமும் இரண்டாவது இன்னிங்ஸில் அரைச் சதமும் அடித்த ஸ்மித் 13 ஆவது இடத்தில் இருந்து முதல் முறையாக 10 இடங்களுக்குள் 8 வது இடத்தைப் பெற்றுள்ளார். மற்ற இந்திய வீரர்கள் புஜாரா (18), டோனி (31), ரஹானே (47), அஸ் வின் (51), ரோஹித் சர்மா (52) ஆவது இடத்திலும் உள்ளனர்.

தர வரிசையில் இலங்கை வீரர் சங்கக்கார 915 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்திலும், 888 புள்ளிகளுடன் தென்னா பிரிக்கா வீரர் டி வில்லியர்ஸ் 2 வது இடத்திலும், 887 புள்ளிகளு டன் மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் சந்தர்பால் 3 ஆவது இடத்தி லும் இருக்கின்றனர். பந்து வீச்சில் இந்திய வீரர்கள் புவனேஸ் வர் குமார் 8 ஆவது இடத்திலும் ஜடேஜா 9 ஆவது இடத்திலும் உள் ளனர். (த)

## ஆபாசச் செய்கையால் பாக். வீரர்களுக்கு தடை

சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான ஆண்கள் ஹொக்கித் தொடரில் இந்திய அணியுடன் நடந்த அரை இறுதியில் வெற்றி பெற்ற பிறகு ரசிகர்களை நோக்கி ஆபாசமாகச் சைகை செய்து அநாகரீ கமாக நடந்து கொண்ட பாகிஸ்தான் வீரர்கள் 2 பேர் தடை செய்யப்பட்டனர். இந்தியாவுடன் நடந்த விறுவிறுப் பான ஆட்டத்தில் பாகிஸ்தான் 4:3 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி பெற்றது. இதையடுத்து கொண்டாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்கள் சட்டையை கழற்றி ஆர்ப் பரித்த துடன் ரசிகர்களை நோக்கி ஆபாசமாகச் சைகை செய்தனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தவறு செய்த பாகிஸ்தான் வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்தியாவில் சர்வ தேச ஹொக்கிப் போட்டிகளை நடத்த அனுமதிக்கமாட்டோம் என ஹொக்கி இந்தியா நிர்வாகம் அறிவித்தது. சர்ச்சையைக் கிளப்பிய இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு பாகிஸ்தான் வீரர்களுக்கு ஒரு ஆட்டத்தில் விளையாடத் தடை விதித்தது.

இதனால் இவர்கள் இறுதிப் போட்டி யில் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஷப்கத் ரசூல் என்ற வீரர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். இதனால் முக்கிய வீரர்கள் இல்லா மல் ஜேர்மனியுடனான இறுதிப் போட் டியில் களமிறங்கிய பாகிஸ் தான் அணி பரிதாபமாக தோல் வியை சந்தித்ததும் குறிப் பிடத்தக்கது.

பாகிஸ்தான் ஹொக்கிச் சங்கமும் தங்கள் வீரர்களின் செயலுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக அறிவித்துள்ளது. (ரி)



# செய்திகள்

## விதிமுறைகள் மீறிய சங்காவுக்கு அபராதம்



ஐ.சி.சி போட்டி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்ககாரவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மற்றம் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற ஆறாவது ஒருநாள் ஆட்டத்தில் நடுவரின் தீர்ப்பை மதிக்காது செயற்பட்டதாகச் சங்கக்கார மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் ஆட்டத்தின் ஊதியத்தில் இருந்து 15 வீதத்தை அபராதமாக செலுத்துமாறு ஐ.சி.சி. சங்கக்காரவுக்கு உத்தரவிட்டது.
குமார் சங்கக்கார ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறத் திட்டமிட்டுள்ள நிலையில் தனது பல்லேகல மைதானத்தில் இறுதிப் போட்டியை விளையாடி சதம் அடித்து அசத்தினார். பல்லேகல மைதான இறுதிப் போட்டியில் அபராதம் விதிக்கப்பட்டமை குமார் சங்கக்காரவுக்கு அசாதாரணமான–மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். (த–ரி)

## அடிலெய்ட் சாதனைகள்



256 – முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 256 ஓட்டங்கள் (115, 141) சேர்த்ததன் மூலம் அணித் தலைவராக அறிமுகமான ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற சாதனையை கோஹ்லி படைத்தார். முன்னதாக நியூஸிலாந்தின் கிரஹாம் டவ்லிங் 1968 இல் கிறைஸ்ட் சர்ச்சில் இந்தியாவுக்கு எதிராக 244 ஓட்டங்கள் குவித்ததே (239, 5) சாதனையாக இருந்தது.

12 – இந்த ஆட்டத்தில் 12 இலக்குகள் வீழ்த்தியதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக அதிக இலக்குகளை வீழ்த்திய ஆஸ்திரேலியர் என்ற பெருமையைப் பெற்றார் நாதன் லியோன்.

6 – ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டங்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த 6 வீரர்கள் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்துள்ளனர். அதில் 5, அடிலெய்ட் மைதானத்தில் அடிக்கப்பட்டுள்ளது.

53 – ஆஸ்திரேலிய மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் 53 ஆண்டுகளுக்குப் பிறகு வெளிநாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவர் ஒரு ஆட்டத்தின் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்துள்ளார். இதற்கு முன்னர் கடைசியாக 1961 இல் இதே அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற போட்டி யில் மேற்கிந்தியத் தீவுகளின் ரோஹன் கன்காய் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்துள்ளார்.

2 – அணித் தலைவராக அறிமுகமான டெஸ்ட் ஆட்டத்தின் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்த 2 ஆவது நபர் விராட் கோஹ்லி. இதற்கு முன்னர் 1975 இல் பிரிஸ்பேனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் அணித் தலைவராக அறிமுகமான கிரேக் சப்பல், இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்துள்ளார். இருப்பினும் வெளிநாட்டு மண்ணில் இநதச் சாதனையை நிகழ்த்திய முதல் நபர் கோஹ்லி ஆவார்.

70.75 – 4 ஆவது இன்னிங்ஸில் கோஹ்லியின் சராசரி 70.75. இது அனைத்து துடுப்பாட்ட வீரர்களின் (குறைந்த பட்சம் 500 ஓட்டங்கள் குவித்தவர்கள்) சராசரியில் 4 ஆவது அதிகபட்ச சராசரியாகும்.

10 – ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு போட்டியில் 10 க்கும் மேற்பட்ட இலக்குகளை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் லயன். இதற்கு முன்னர் 2004 இல் இலங்கையின் உபுல் சந்தன 10 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

25 – ஆஸ்திரேலிய மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் கடந்த 25 ஆண்டுகளில் 10 இலக்குகளை வீழ்த்திய முதல் ஆஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளர் லியோன். இதற்கு முன்னர் 1989 இல் சிட்னியில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் அலன் போர்டர் 10 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

99 – 99 ஓட்டங்களில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்த 2ஆவது இந்திய வீரர் முரளி விஜய். இதற்கு முன்னர் 1994 இல் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டெஸ்டில் சித்து 99 ஓட்டங்களில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்துள்ளார்.

4– ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு ஆட்டத்தில் அதிக சிக்ஸர்களை விளாசிய இந்திய தொடக்க வீரர்கள் வரிசையில் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார் (4 சிக்ஸர்கள்) முரளி விஜய். சேவாக் முதலிடத்தில் உள்ளார். அவர் 2003 இல் மெல்போர்னில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் 5 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

24,836 – அடிலெய்ட் டெஸ்டின் 5–வது நாளில் 24,836 பேர் மைதானத்திற்கு வந்திருந்தனர். இதன்மூலம்; அடிலெய்டில் 5ஆவது நாளில் அதிக ரசிகர்கள் வந்த ஆட்டம் என்ற பெருமை இந்த ஆட்டத்திற்கு கிடைத்துள்ளது.

2 – அடிலெய்டில் ஒரு ஆட்டத்தின் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்த 2ஆவது இந்தியர் கோஹ்லி. முன்னதாக 1947–48 இல் விஜய் ஹசாரே இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்துள்ளார்.

4 – ஒரு போட்டியின் இரு இன்னிங்ஸ்களிலும் சதமடித்த 4ஆவது இந்தியர் கோஹ்லி. விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர் (3 முறை), ராகுல் ட்ராவிட் (2 முறை) ஆகியோர் மற்றய இந்தியர்கள். (த–ரி)

அரசியல்
N.பாபு
A/L 2015 சனி, ஞாயி 9 am
PAPER CLASS
A/L 2016 சனி, ஞாயி 8 am
அரசாங்கமும், யாப்பு மாதிரிகளும்
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

## சிக்கலில் மலிங்க

மலிங்க அணியில் இருந்து விலகியதன் காரணமாகவே இந்திய சுற்றுப்பயணம் சென்ற இலங்கை அணி 0–5 என்ற கணக்கில் படுதோல்வியைச் சந்தித்தது.
அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், மலிங்க ஜனவரி மாத நடுவில் மீண்டும் பழைய நிலைக்கு திருப்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
அதே சமயம் எனது காயம் இன்னும் குணமடையவில்லை என இலங்கை பத்திரிகை ஒன்றில் மலிங்க கூறியுள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், நான் மீண்டும் விளையாட தயாராக இருக்கிறேன். ஆனால் எனது காயம் குணமடைய எவ்வளவு நாள் எடுத்துக் கொள்ளும் எனத் தெரியவில்லை. அதனால் தான் நான் பயிற்சியில் கூட ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார். (த)



## ஜாம்பவான்களுக்கு விடை கொடுக்கும் இறுதியாட்டம்

இலங்கை மற்றம் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இறுதியாட்டம் இன்று கொழும்பு பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளது. ஏற்கனவே இத் தொடரின் ஆறு ஆட்டங்கள் முடிந்துவிட்ட நிலையில் இலங்கை நான்கிலும் இங்கிலாந்து இரண்டு ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளன. இதனால் இந்த இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றாலும் இலங்கையே தொடரைக் கைப்பற்றும் என்ற நிலையில் இரு அணிகளும் களமிறங்குகின்றன.
இலங்கையின் நடசத்திர வீரர்களான சங்கா மற்றம் மஹேல தமது சொந்த மண்ணில் விளையாடும் இறுதி ஆட்டமாக இந்த ஆட்டம் இருப்பதனால் இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இலங்கை களமிறங்கும். தொடரை ஏற்கனவே இழந்திருந்தாலும் கௌரவமாக முடிக்க வேண்டும் என்ற நிலையில் இங்கிலாந்து களமிறங்கும் இதனால் போட்டி விறுவிப்பாக அமையும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.
ஆட்டத்தின் முடிவில் இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வில் சங்காவுக்கும் மஹேலவுக்கும் விடைகொடுக்கும் நெகிழ்ச்சியான சம்பவங்களும் இடம்பெறும் என்பதால் பார்வையாளருக்கு பஞ்சமே இருக்காது என எதிர்பார்க்கப்படுகின்றது. (த–ரி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.